விலை : 20.00
பக்கங்கள்: இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

WESTERN UNION MONEY TRANSFER
உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Wastern Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 வைகாசி 27 புதன்கிழமை (10.06.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 173

## வடக்கு அபிவிருத்திக்கான பல நிதி உதவிகள் மாகாண சபையை புறக்கணித்து வழங்கப்படுகிறது

### இதனை ஏற்க முடியாது என்கிறார் முதலமைச்சர் சி.வி



(கொழும்பு)

வட மாகாண சபையைப் புறக்கணித்து, வடக்கின் அபிவிருத்திக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரை தனியாக தெற்கிற்கு அழைத்து நிதி உதவி வழங்கப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஜனாதிபதி மைத்திரி

24ஆம் பக்கம் பார்க்க....

## யாழ்.நீதிமன்றத் தாக்குதல்; 15 மாணவர்களுக்கு பிணை

### கடும் எச்சரிக்கையுடன் நேற்று அனுமதி

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு பாடசாலை மாணவி வித்தியாவின் படுகொலையினை அடுத்து இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களில் நீதிமன்றம் தாக்கப்பட்டமை உள்ளிட்டவற்றுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட 130 பேரில் 15 மாணவர்களை கடும் எச சரிக்கையுடன் பிணையில் செல்ல யாழ்.நீதிமன்றம் நேற்றைய தினம் அனுமதி வழங்கியுள்ளது.

புங்குடுதீவு மாணவி வித்தியா பாலியல் வன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்டமையினைத் தொடர்ந்து கடந்த 20ஆம் திகதி பல்வேறு போராட்டங்கள் யாழ்.நகரில் முன்னெடுக்கப்பட்டதுடன் ஆர்ப்பாட்டக்காரர்களால் நீதிமன்ற கட்டடத் தொகுதி, சிறைச்சாலை வாகனம் மற்றும் சட்டத்தரணியின் வாக

24ஆம் பக்கம் பார்க்க....

## வவுனியா அரச அதிபரை உடனடியாக மாற்றவேண்டும்

### வடக்கு அவை வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரை உடனடியாக மாற்ற வேண்டும் என வலியுறுத்தி வடக்கு மாகாண அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களும் ஏகமனதாக கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

வடக்கு மாகாண சபையின் 30 ஆவது அமர்வு நேற்று காலை 9.30 மணிக்கு அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் ஆரம்பமாகி நடைபெற்றது. இதன்போதே இந்த கோரிக்கை அடங்கிய ஆட்சேபனையினை வெளியிட்டனர்.

வவுனியா மாவட்ட அரச அதிபர், மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அவமதித்திருந்ததாக தெரிவித்து வடக்கு மாகாண சபையில் குறித்த விடயம் எடுக்கப்பட்டு கண்டனத் தீர்மானம் கடந்த அமர்வுகளின் போது நிறைவேற்றப்பட்டதுடன் அரச அதிபரை மாற்ற நடவடிக்கை எடுப்பது என்றும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

எனினும் இதுவரை அவரை மாற்றுவதற்கான நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. எனவே அதற

24ஆம் பக்கம் பார்க்க....

# மதுபான விற்பனையால் வடக்கில் பெரும் பாதிப்பு

### தவறான விற்பனை உரிமங்களை தடை செய்யுமாறு நிதி அமைச்சரிடம் வடக்கு மாகாண சபை கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் அண்மைக்காலமாக அதிகரித்துவரும் வன்முறைச் சம்பவங்களுக்கு அதிகரித்த மதுபான பாவனையே அடிப்படையாக உள்ளது. இந்நிலையில் மாகாணத்தில் உள்ள மதுபான விற்பனை நிலையங்களுக்கான உரிமம் நிர்ணயிக்கப்பட்ட நியமங்களுக்கு உட்பட்டு வழங்கப்பட்டுள்ளனவா? என்பதைக் கண்டறிந்து நியமங்களுக்கு மாறாக வழங்கப்பட்டுள்ள மதுபான விற்பனை உரிமங்களை தடைசெய்யுமாறு நிதி அமைச்சரிடம் வடக்கு மாகாண சபை கோரியுள்ளது.

24ஆம் பக்கம் பார்க்க....

## இஸ்லாமிய வங்கிகளை தடை செய்யவேண்டும்

### இலங்கை பௌத்த நாடு என பொது பல சேனா முழக்கம்

(கொழும்பு)

நாட்டில் வேகமாக பரவி வருகின்ற இஸ்லாமியக் கோட்பாடுகளுக்கு அமைய நடத்தப்படும் ஷரியா வங்கி முறையை தடை செய்ய வேண்டுமென பொது பல சேனா அமைப்பு இலங்கை மத்திய வங்கியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகச் சந்திப்பின்போது அந்த அமைப்பின் தலைவர் திலந்த வித்தானகே இதனைத் தெரிவித்துள்ளார்.

இஸ்லாமியக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட ஷரியா வங்கி இலங்கையில் வேகமாக பரவி வருகின்றதாக கூறிய வித்தானகே இதனை தடுப்பதற்கு அரசாங்கம் தவறியுள்ளதாக குற்றம் சாட்டினார்.

பொருளாதார நடவடிக்கைக

23ஆம் பக்கம் பார்க்க....

## ஓய்வு பெற்றார் மகிந்த தேசப்பிரிய



(கொழும்பு)

தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய கடந்த சனிக்கிழமை முதல் பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். கடந்த சனிக்கிழமை 60 வயதைப் பூர்த்திசெய்தமையால்

23ஆம் பக்கம் பார்க்க....

## மகிந்தவைக் கொல்ல சதி!

### பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் அவரைக் கொல்வதற்கான பின்னணியைக் கொண்ட சூழல் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் ஆனால் அதற்கான சந்தர்ப்பம் மட்டுமே ஏற்படாதிருப்பதாகவும் சிறைகளிலுள்ள முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களினூடாக அது நடக்கலாமெனவும் ஊகங்களை வெளியிட்டுள்ள மகிந்த ராஜபக்ஷ தரப்பினர், இது தொடர்பாக

23ஆம் பக்கம் பார்க்க....

## இன நல்லுறவுகளை வலுப்படுத்த கல்விக் கொள்கையில் அபிவிருத்தி

### திட்டங்களை அமுல்படுத்த ஜனாதிபதி தீர்மானம்

(கொழும்பு)

இந்த நாட்டின் கல்விக்கொள்கை தேசிய மற்றும் சர்வதேச தேவைகளை அடிப்படையாகக்கொண்டு தொடர்ந்தும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இதன்போது பாடசாலைகளில் தொழில்நுட்ப பாடங்களை கற்பிப்பதனை ஊக்குவிப்பது போன்று இனங்களுக்கிடையே நல்லுறவினை விருத்தி செய்ய தேவையான தொடர்புசாதன திறமைகளை விருத்தி செய்யும் நோக்குடன் மொழிப் பாடங்களை கற்பிப்பது விருத்தி செய்ய வேண்டும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

நேற்று செவ்வாய்க்கிழமை காலை ஜனாதிபதி அலுவலகத்தில்

23ஆம் பக்கம் பார்க்க....

## குளத்தில் மூழ்கி இளைஞர் பலி


(வவுனியா)

வவுனியா, சிதம்பரபுரம் பகுதியில் குளத்தில் மூழ்கி இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை மாலை 3.30 மணியளவில் இடம்பெற்றது.

அதே இடத்தைச்சேர்ந்த எஸ்.சத்

23ஆம் பக்கம் பார்க்க....

## கடவையை கடக்க முற்பட்டவர் ரயில் மோதி ஸ்தலத்தில் பலி



(யாழ்ப்பாணம்)

யாழ்.கோண்டாவில் நந்தாவில் அம்மன் ஆலயம் முன்பாகவுள்ள ரயில் கடவையை துவிச்சக்கர வண்டியில் கடக்க முற்பட்டவரை

23ஆம் பக்கம் பார்க்க....

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை



அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட எமது நிறுவனத்தில் ஐஸ்கிறீம், ஜேம், டொபி, டிபிடிபி, பிஸ்கட் போன்ற தொழிற்சாலைகளில் ஆண், பெண் இருபாலாருக்கும் உடனடியாக வேலை உண்டு. நாள் சம்பளம் (1,500), மாதாந்த சம்பளம், கிழமை சம்பளம் ஆகியன பெற்றுக் கொள்ளலாம்.

வயது (18-50), உணவு, தங்குமிடம் முற்றிலும் இலவசம். (வருகைக்கான கொடுப்பனவாக மாதாந்தம் (2,000) மாதாந்த சம்பளம் (25,000 - 40,000) தம்பதியர், நண்பர்கள் குழுக்களாகவும் இணைந்து கொள்ளலாம். அரிதாக வேலைவாய்ப்பு உள்ளதால் உடனடியாக இணைந்து கொள்ளவும். வரும் நாளிலே வேலைவாய்ப்பு உண்டு.

உடனடியாக தொடர்பு கொள்ளவும் : 0775977259, 0778910598 (699)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி குமுதினி றஞ்சித் அவர்கள்
26.05.2015 அன்று பண்டாரநாயக்க
சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பட்ட
பின் கல்வி டிப்ளோமா பட்டத்தை பெற்ற
மைக்காக பாராட்டி வாழ்த்துவதுடன்
அவர் மேன்மேலும் பட்டங்களையும்,
பதவி உயர்வுகளையும் பெற
வாழ்த்துகின்றோம். (703)

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/கொற்றாவத்தை அ.மி.த.க பாடசாலை, வல்வெட்டித்துறை.

## அறிவித்தல்

மானிப்பாய் கிராம உப அலுவலகம், ஆனைக்கோட்டை.
வட்டாரம் :- 05
ஆதன இலக்கம் : 10
கல்லுண்டாய் றோட்

வட்டாரம் 05 கல்லுண்டாய் றோட் ஆதன இலக்கம் 10 இல் அமைந்துள்ள (உறுதிப்படி வட மாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்கு பகுதி மானிப்பாய் கோவில்பற்று ஆனைக்கோட்டை இறை **காக்கைதீவு கிராமம்** என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 0.0399 ஹெக்ரேயர் (0.0399 **Hectares**) கொண்ட இவ்வாதனமானது தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் அறுதிஉறுதி மூலம் காக்கைதீவைச் சேர்ந்த இராசகுலம் பெண் சசிகலா என்பவருக்கு குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் ர.கே.புஸ்பரோகினி முகதாவில் நிறைவேறிய 8446 ஆம் இலக்க 20.02.2014 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். **காக்கைதீவு கிராமம்** நிலப்பரப்பு 0.0399 ஹெக்ரேயர் (0.0399 **Hectares**) கொண்ட இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் கோரப்படாதவிடத்து இவ்வாதனம் இராச குலம் பெண் சசிகலா என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

தவிசாளர்
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய். (693)


## சரவணா ரெக்ஸ்

பட்டு சாறிகள், கொட்டன் சாறிகள், சில்க் சாறிகள், பான்சி சாறிகள், ரெடிமேற் பஞ்சாபிகள், பஞ்சாபித் துணிகள், ஸ்ரொப்புகள் என்பன புத்தம் புதிய தெரிவில்

**மலிவு விற்பனையில்...**



(C-1221)

இல.526, 529, பருத்தித்துறை வீதி, நல்லூர் (பின் வீதி), (சிவன் கோவிலுக்கு அருகாமை). யாழ்ப்பாணம்.
(எமக்கு வேறு எங்கும் கிளைகள் இல்லை)


# போர்க்குற்றங்களை ஆவணப்படுத்த கைத்தொலைபேசி செயலி அறிமுகம்

(கொழும்பு)

போர்க்குற்றங்கள் மற்றும் மனித வுரிமை மீறல்களை ஆவணப்படுத்த வசதியாக கைத்தொலைபேசி செயலி ஒன்று நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

சட்ட நிறுவனங்கள் மற்றும் மனித வுரிமை ஆர்வலர்களின் துணையுடன், சர்வதேச சட்டவாளர் சங்கம் இந்த கைத் தொலைபேசி செயலியை அறிமுகப் படுத்தியுள்ளது.

இதன்மூலம்ஒளிப்படங்கள், காணொளிகள் மற்றும் ஒலிப்பதிவுகள் போன்றவற்றை அமெரிக்காவில் உள்ள சேமிப்பகம் ஒன்றில் பாதுகாப்பாக சேகரித்து வைக்க முடியும்.

இவற்றை ஹேக்கில் உள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க முன்னர் இந்த ஆதாரங்களை சட்ட வல்லுநர்கள் குழுவொன்று ஆராய்ந்து மதிப்பீடு செய்யும்.

கொடூரங்களை நேரில் கண்ட சாட்சிகள் என்ற பெயரில் அழைக்கப்படவுள்ள இந்த செயலியின் மூலம் எடுக்கப்படும படங்கள் தெளிவானவையாகவும், தன்னியக்க முறையில் முத்திரையை பதியும் வகையிலும் இருக்கும். அத்துடன் நேரம் மற்றும் இடம் தொடர்பான தரவுகளையும் அந்தப் படங்கள் கொண்டிருக்கும்.

உலகில் மேற்கொள்ளப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித வுரிமை மீறல்கள் குறித்த ஆவணங்களை சட்டரீதியாக செல்லுபடியானதாக பதிவுசெய்யும்நோக்கிலேயே இந்த செயலி அறிமுகப்படுத்தப்பட் டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும மனிதவுரிமை மீறல்கள் தொடர்பாக கைத்தொலை பேசிகளின் மூலம் எடுக்கப்பட்ட காணொளிகள் வெளியாகியிருந்த போதிலும், அவற்றை எமது அரசாங்கம் நிராகரித்திருந்தது.

ஆனால், புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட செயலி மூலம், திரட்டப்படும் போர்க்குற்றங் கள்மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பான ஆதாரங்கள் மறுக்க முடியாதவையாகவும், சட்டரீதியாக நிரூபிக்கத்தக்க வகையிலும் இருககும் என றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## நல்லூர்க் கந்தனுக்கு நாளை கற்பூரத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில நாளை கற்பூரத்திருவிழா இடம்பெறும். காலையில் சங்காபிஷேகம் இடம் பெறுவதுடன் மாலை கந்தப்பெருமானுக்கு திருக்கல்யாணம் நிகழ்வு நடைபெற்று சுவாமி மணவாளக் கோலத்தில் வெளி வீதி வருதலும் இடம்பெறும். (ந)

## யாழ்.வண் வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்

**இன்று முதலாம் நாள் உற்சவம் கொடியேற்றம்**



வேரோடு வினை நீக்கிடும் வீரகத்தி விநாயகரே!
பேரோடும் புகழோடும் கலட்டிப் பதி தனிலே எமை
சீரோடு வாழ வைக்கும் இன்று உனக்குக் கொடியேற்றம்!
சித்தந்தனில் ஆனந்தம் அள்ளியே தந்துநிற்கும்
ஊரோடு உத்தம அடியார்கள் கூடியே நின்றுனை
கும்பிடவே அருள்புரியும் ஆனைமுகக் கடவுளே!
நீரோடும் நிலத்தோடும் நிம்மதியாய் நாம் வாழவே
கருணை செய்திடுவாய் கலட்டிக் கணபதியே சரணம்!

(C-1225)

நாச்சிமார் கோவிலடி
கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

சுஜீவா வைத்தியசாலை
(தாய்மைப்பேற்று சிறப்பு சித்த
ஆயுர்வேத வைத்தியசாலை)

# தடைசெய்யப்பட்ட சிகரெட்டுக்களுடன் இருவர் கைது

(கொழும்பு)

இலங்கையில் விற்பனை செய்வதற்கு தடை செய்யப்பட்ட சிகரெட்டுக்களை வைத்திருந்த இருவர் பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

இவர்கள் டுபாயிலிருந்து இவற்றைக் கடத்தி வந்ததாக தெரியவருகின்றது.

தமக்கு கிடைத்த தகவலை அடுத்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது கொட்டாஞ்சேனை பகுதியிலுள்ள வீடொன்றில் வைத்து கைது செய்ததாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும் இவர்களிடமிருந்து 43200 சிகரெட்டுகள் கைப்பற்றியதாக பொலிஸார் தெரிவித்தனர். (செ-11)



**டயானா பிளாஸ்டிக் மீள் சுழற்சி**

கழிவு பிளாஸ்டிக் விலைக்கு வாங்கப்படும்
வாளிவேசன்-1Kg-50/=
கதிரை-1Kg-80/=
கான்-1Kg-35/=

தொடர்புகளுக்கு:-0212228680, 0775925088
108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க எம்முடன் இணையுங்கள் (336)


# மரண அறிவித்தல்

## அமரர் சண்முகநாதன் இரத்தினசிங்கம்
## முன்னாள் வடமாகாண cocacola ஏகவிநியோகஸ்தரும் பாலகிருஷ்ணன் ஸ்ரோஸ் உரிமையாளரும்)



அமரர் சண்முகநாதன் இரத்தினசிங்கம் 08.06.2015 திங்கட்கிழமை அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் பரமரெத்தினம் - சண்முகநாதன் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரரும், திருமதி தையல்நாயகியின் அன்புக் கணவரும், பாலகிருஷ்ணன் (London), காலஞ்சென்ற வைத்தியநாதன் மற்றும் கலைவாணி, திருமதி பவானி கமலநாதன் (London), விக்னேஸ்வரன் (இந்தியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், தனலஷ்மி, ராஜலஷ்மி (France), ஜெயலஷ்மி (France), விஜெயலஷ்மி (London), கீதாலஷ்மி, காலஞ்சென்ற அருள்பிரகாசம், காலஞ்சென்ற கணேசரெட்ணம் ஆகியோரின் அருமைச் சகோதரனும், காலஞ்சென்ற இராசதுரை, சிவலிங்கம், குணரெத்தினம், (Canada), அபிமன்ஞ்யு (London), மறைந்த சகாதேவன் மற்றும் அர்சுணன், நகுலன், சின்னசகாதேவன், கர்ணன், காலஞ்சென்றவர்களான நளாயினி, பரிமளம், தர்மன், மறைந்த சற்குணதேவி, திருமதி கமலநாயகி, பாலச்சந்திரன் ஆகியோரின் மைத்துனரும், ஸ்ராலினி, ஜஸ்ரிலா, பிரசாந்தன், ஹர்ணி, மிதுனா, கோகுல், இலக்கியன், இனியன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (09.06.2015) இந்தியாவில் திருச்சியில் இடம்பெற்றதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல் : மகள் R.கலைவாணி
மைத்துனி கமலநாயகி பாலச்சந்திரன் (702)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## தேவகுமார் கிறிஸ்ரிகன்



புதுக்குடியிருப்பை பிறப்பிடமாகவும் முல்லைத்தீவு செல்வபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தேவகுமார் கிறிஸ்ரிகன் (மு/.வெட்டுவாய்க்கால் அ.த.க.பாடசாலை தரம் 01 மாணவன்) 07.06.2015 ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் போதகர் தேவகுமார்-குமுதினி தம்பதியினரின் அன்பு புதல்வனும் கிறிஸ்ரியின் (மு/ மகா வித்தியாலயம்) அன்பு சகோதரனும் தர்மலிங்கம் (புதுக்குடியிருப்பு வைத்தியசாலை ஊழியர்) காலஞ்சென்ற பொன்மணி தம்பதியினரின் அன்பு பேரனும், காலஞ்சென்ற இராசப்பு, அன்னபூரணம் (கோண்டாவில்) தம்பதியினரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற உதயகுமார் (போதகர்), சந்திரகுமார் உதயசைலா, ஜெயக்குமார் சுபாசினி (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு பெறாமகனும் (போதகர்) திருச்செல்வம் மஞ்சுளகுமார் (டென்மார்க்), யோகராஜா சித்திரா (சுவிட்சர்லாந்து), ரசிதரன் ஜெயந்தினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மருமகனும் ஆவார்.

இலட்சிகா, லக்ஸ்ரீபன், ஜான்சிகா, துளசிகா, ஜெனார்த்தனன், ஜெனித்தன் , ஜெனிற்றா (இத்தாலி) ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும், கார்த்திகா, கலிஸ்ரன், கிறிஸ்ரீனா (டென்மார்க்), கிலிங்ஸ்ரன், ஜூலியற், ஜோனாஸ் (சுவிட்சர்லாந்து), றிச்சியா, சாலோம் (லண்டன்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் 10.06.2015 புதன்கிழமை மாலை 3 மணிக்கு செல்வபுரம் இயேசு அழைக்கிறார் ஆலயத்தில் நல்லடக்க ஆராதனையுடன் செல்வபுரம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்.

(சி-1222)
செல்வபுரம்,
முல்லைத்தீவு.
077 837 9253
தகவல்:
குடும்பத்தினர்.

---

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

## லெட்சுமண ஆச்சாரியார் பக்கீர்சாமி (சிங்கர்)



யாழ்.வண்ணார்பண்ணை சிவன் கோவிலடியை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட லெட்சுமண ஆச்சாரியார் பக்கீர்சாமி (08.06.2015) திங்கட்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான லெட்சுமண ஆச்சாரி- முல்லையம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான துரையப்பா ஆச்சாரி- இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இராஜமணியின் அன்புக் கணவரும் L.P. ராஜாவின் அன்புத் தந்தையும் கீதாவின் அன்பு மாமனாரும் (கனடா), ரதிகா, ஜாதவன், சாம்பவி ஆகியோரின் அப்பப்பாவும் அன்னலெட்சுமி (கனடா), காலஞ்சென்ற வேணுகோபால் ஆச்சாரியார் மற்றும் அம்புஜம், கமலவல்லி, கெங்காதரன் ஆச்சாரியார், இரா ஜேஸ்வரி, ஜெகநாதன் ஆச்சாரியார் (வவுனியா), மகேஸ்வரி (ஜேர்மன்), நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ் சென்றவர்களான சின்னத்துரை ஆச்சாரியார், துரைச்சாமி ஆச்சாரியார் மற்றும் இராமையா ஆச்சாரியார், கந்தையா ஆச்சாரியார், கணபதிப் பிள்ளை ஆச்சாரியார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன்கிழமை (10.06.2015) பிற்பகல் ஒரு மணியளவில் கனடாவில் நடைபெறும். அன்னாரின் துக்கம் அனுஷ்டிக்கும் நிகழ்வு 314,கே.கே.எஸ். வீதியில் உள்ள கெங்காதரன் ஆச்சாரியார் இல்லத்தில் இன்று 10.06.2015 நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

314, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 8415
கலாபூஷணம் கெங்காதரன் ஆச்சாரியார்
ஜெகநாதன் ஆச்சாரியார்
(சி-1220)

---



# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பிதழும் நன்றி நவிலலும்

தோற்றம் 15.10.1974 — மறைவு 14.12.2014

கடந்த 14.12.2014 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

## அமரர் இராமலிங்கம் இரஞ்சிதன் B.Com

அவர்களின் 180 ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள் 11.06.2015 நாளை வியாழக்கிழமை காலை 5.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்று அன்றைய தினம் முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் சபிண்டீகரண கிரியைகள் நடைபெறும். அதனைத் தொடர்ந்து அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் ஆலய மண்டபத்தில் மதிய போசன நிகழ்வு நடைபெறும். இந்நிகழ்வுகளில் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்**

எமது அன்புத் தெய்வம் நோயுற்ற வேளை ஓடோடி வந்து நேரம் காலம் பார்க்காது உதவியோருக்கும் மறைந்த வேளை ஆறுதல் கூறியோருக்கும் மரணச் சடங்கின் போது சகல வழிகளிலும் உதவிக்கரம் நீட்டியோர், அஞ்சலி செலுத்தியோர் அஞ்சலிப் பிரசுரங்கள், பத்திரிகை வாயிலாக அஞ்சலி செய்தோர் அனைவருக்கும் எமது நன்றிகளை இவ்வேளை கூறிக் கொள்கின்றோம்.

செவிடன் ஓலை,
அல்வாய் [illegible], அல்வாய்.
(சி-1219)
தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

**ஆன்மீகம் 215**

## பொறாமையிலிருந்து விடுதலை!

...**விழிப்புணர்வுடன் வளர்ந்தால் மட்டுமே, உங்களுக்கும் மற்றவர்களுக்கும் உதவ முடியும். ஒரு அனுபவ ரீதியான புரிந்துகொள்ளுதல் தேவையாக இருக்கிறது. இங்கு ஒரு முக்கியமான விடயம் என்னவென்றால் நீங்கள் கேட்டதைச் செயற்படுத்துதல் வெளியுலக நன்மைக்காக உபயோகப்படுத்துவதற்காகக்கூட அல்ல; வெளியுலகம் மாயை என்பதையும் சாதிக்க வேண்டியதனைத்தும் உங்களுக்குள் தான் என்பதையும் புரிந்துகொள்ளத் தேவையான விழிப்புணர்வைக் கொண்டு வருவதற்கே மிகவும் அவசியமானதாகும். அப்பொழுது இந்த முழுச் செயல் முறையிலும் வெளியுலகில் நீங்கள் அடையும் வெற்றிகளெல்லாம் வெறும் தற்செயலானதாகவே அமைந்துவிடும்.

நீங்கள் குருமார்களின் பேச்சைக் கேட்கும்பொழுது அப்படியே உட்கிரகித்துக் கொள்ளுங்கள். குருமார்கள் சத்தியத்தை மட்டுமே பேசுகிறார்கள்.




அது எவ்வாறு இருக்கிறதென்றால்... ஒரு பெரிய அடர்ந்த கானகத்தை உங்கள் மனதைப் போன்ற ஒரு சிறிய விளக்கைக் கொண்டு ஆராய்வது போல் இருக்கிறது. சிறிய விளக்கின் ஒளியில் முன்னால் தெரியும் சில அடிகளைக் கொண்டே, நீங்கள் கண்டதே உண்மை என்று முடிபுகட்டி விடுகிறீர்கள். இதைத்தான் 'விஞ்ஞானிகள் செய்கிறார்கள். அவர்கள் சில அடிகள் முன்னால் பார்த்துவிட்டு இன்று ஒரு கோட்பாடுடன் வருகிறார்கள். சில காலத்திற்குப் பின் இன்னும் சில அடிகள் முன் சென்று அந்த ஒளியில் இன்னும் சில அடிகளை நோக்கி இன்னும் சிலவற்றைப் பார்க்கிறார்கள்.

பின்னர் அவர்கள் நேற்று அறிவித்த உண்மைகளை ஒதுக்கிவிட்டு வேறு ஒரு புதிய உண்மையைக் கொண்டு வருகிறார்கள். மிகவும் தெளிவாக இருங்கள்... நேற்று உண்மையாக இருந்த ஒன்று. இன்று உண்மையல்ல என்றாகிவிடுமாயின், நேற்றும் உண்மையாக இருந்திருக்க முடியாது. எது எப்படியோ, இவ்வாறுதான் அவர்கள் தங்கள் மனதைக் கொண்டு ஒரு அடர்ந்த கானகத்தை ஆராய முற்படுகிறார்கள்.

ஆனால் இப்பொழுது திடீரென்று ஒரு மின்னல் ஒளியில் முழுக் கானகமும் தெரிவாகக் கற்பனை செய்து பாருங்கள்! இப்பொழுது உங்களுக்கு முழுக் கானகமும் தெரிவதால் உங்களால் தேவையான பொழுது அதை விவரிக்க முடியும்.

ஞானமடைதல் என்பது இதுவே! அது ஒரு மின்னல் ஒளியில் முழுக் கானகத்தையும் பார்த்தல்.

ஒருமுறை இது நிகழ்ந்துவிடின், நீங்கள் வெறுமனே அறிகிறீர்கள்.

அதனால்தான் ஒரு குருவுக்கு உண்மையாக இருப்பது இன்னொரு குருவுக்கும் உண்மையாக இருக்கிறது. அவர்கள் வெளிப்படுத்தும் விதம் வேறுபடலாம்; ஆனால், அவர்களது இறுதி அனுபவம் ஒன்றே. நீங்கள் அனுபவத்தில் தெரிந்து கொள்கிறீர்கள். அல்லது உங்களுக்குத் தெரியாது. நீங்கள் உங்கள் புத்தியைக் கொண்டு பதிலளிக்க முற்படும் போதுதான் தத்துவங்களை உருவாக்கிறீர்கள். அதனால் தத்துவமாகிவிடாமல், உங்கள் புரிந்து கொள்ளுதலை அனுபவமாக்க முயற்சி செய்யுங்கள்.

பல சமயங்களில் பிரச்சினை என்னவென்றால், ஞான மொழிகளைக் கேட்கும் பொழுது நாம் எப்பொழுதும் இவை, நம்முடன் கேட்டுக் கொண்டிருக்கும் நமது நண்பருக்கோ அல்லது உறவினருக்கோ மிகச் சரியாகப் பொருந்துவதாக எண்ணுகிறோம்! நாம் அதை அவர்களுக்குச் செலுத்திப் பார்த்து, அவர்கள் புரிந்து கொண்டிருப்பார்கள் என்ற இரகசியமான நம்பிக்கையில் இருக்கிறோம். அவ்வாறு செய்தால், செய்தியை நீங்கள் தவறவிட்டு விடுகிறிர்கள். அவ்வளவுதான்! நான் சொல்கிறேன்... நான் பேசும் பொழுது உங்களிடம்தான் பேசுகிறேன்.

*(தொடரும்)*

**பரமஹம்ஸ சுவாமி**

# அதிசய உலகம்

### பெரிய குடும்பம்....பேரின்ப வாழ்க்கை: பிரித்தானியாவின் சூப்பர் குடும்பம்

பிரித்தானியாவில் பெண்மணி ஒருவர் இரு பேரக்குழந்தைகள் உள்ள நிலையில் 18 ஆவது குழந்தையை பெற்றெடுத்துள்ளார்.





பிரித்தானியாவை சேர்ந்த சுவ் ரோட்போர்ட் (39), நோயல் (43) தம்பதியருக்கு 17 குழந்தைகள் மற்றும் இரண்டு பேரக்குழந்தைகள் உள்ளனர். இந்நிலையில், சுவ் 18 ஆவது குழந்தையை பெற்றெடுத்துள்ளார்.

ஹேல்லி ஆல்பியா பியு என பெயரிடப்பட்ட அப்பெண் குழந்தையின் புகைப்படத்தை இணையதளத்தில் பதிவேற்றம் செய்து மகிழ்ந்துள்ளனர்.

இதுகுறித்து சுவ் கூறியதாவது, கடந்த ஆண்டில் எனக்கு பிறந்த குழந்தை இறந்துவிட்டதால் மிகவும் பயத்தில் இருந்தேன், தற்போது எனது 18 ஆவது குழந்தை எவ்வித சிக்கலும் இன்றி பிறந்துள்ளதால் நிம்மதியடைந்துள்ளேன்.

தற்போது சுவ்க்கு 25 வயதாகிறது, 10 படுக்கை அறைகள் கொண்ட வீட்டில் குடும்பத்தினர் அனைவரும் தங்கியுள்ளதால், எங்கள் வீட்டில் குடும்பத்தில் எப்போதும் சந்தோஷம் நிலவி வருகிறது என்று சுவ் கூறியுள்ளார்.

# சமைப்போம் சுவைப்போம்

## கொண்டைக் கடலைக் குழம்பு



**தே.பொருட்கள்:**

கொண்டைக் கடலை - 1 கப்
வெங்காயம் - 1
தக்காளி - 1
புளி - கோலிக்குண்டு அளவு
மிளகாய்த் தூள் - 2 டீஸ்பூன்
உப்பு, எண்ணெய் - தே.அளவு
வறுக்க:- துவரம் பருப்பு - 1 டீஸ்பூன், வெந்தயம் - 1/4 டீஸ்பூன், சீரகம் - 1/4 டீஸ்பூன்
தாளிக்க:- கடுகு, உளுத்தம் பருப்பு, மிளகு

**செய்முறை**

வறுத்துப் பொடிக்க கொடுத்துள்ள பொருட்களை வெறும் பாத்திரத்தில் வறுத்துப் பொடிக்கவும். வெங்காயம், தக்காளியை பொடியாக நறுக்கிக் கொள்ளவும். புளியை ஊற வைத்து கரைத்துக் கொள்ளவும். கொண்டைக் கடலையை 12 மணி நேரம் ஊற வைத்து உப்பு போட்டு குக்கரில் வேக வைத்துக் கொள்ளவும். வெந்த கடலையில் சிறிது எடுத்து அரைத்துக் கொள்ளவும்.

ஒரு பாத்திரத்தில் எண்ணெய் சூடாக்கி அதில் தாளிக்க கொடுத்துள்ள பொருட்களை போட்டு தாளித்து, பின் வெங்காயம், தக்காளியை போட்டு வதக்கி, மிளகாய் பொடி, உப்பு, புளித்தண்ணீர், வேக வைத்த கொண்டைக் கடலை முதலியவற்றை போட்டு கொதிக்க விட்டு இறக்கி பரிமாறவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நட்பை வலுப்படுத்தும் சந்திப்பு



இலங்கை வந்துள்ள பாகிஸ்தான் இராணுவத் தளபதி ஜெனரல் ரபீல் ஷரீப் நேற்று முன்தி னம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்தார். பாகிஸ்தான் இராணுவத் தளபதி இலங்கை ஜனாதிபதிக்கு நினைவுச் சின்னம் ஒன்றை வழங்கி வைத்தார்.

# நான் சுதந்திரக்கட்சியை பிளவுபடுத்தமாட்டேன்

### மகிந்த கூறுகிறார்

**தான் ஒரு போதும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை இரண்டுபடுத்த மாட்டேன் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

நேற்று முனதினம் தெஹிவளையில் இடம் பெறற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக் கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நான் அன்றில் இருந்தே ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியிலே போட்டியிட்டேன், சிறுபான்மையினர் வேறு கட்சியிலே போட்டியிட்டார்கள்.

மகள், மகன் என அனைவரும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியினை பிளவுபடுத்தும் போது அம்மாவுடன் இருந்த மகன் நான் மாத்திரமே.

இன்று சிறுபான்மை அரசாங்கம் ஆட்சி செய்கின்றமையினால் அபிவிருத்தி தடைப்பட்டுள்ளது.

பங்கு சந்தை கூட செயலிழந்து போய் காணப்படுவதாக முன்னாள் ஜனர்திபதி மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார். (இ-5)

# இருபாலாருக்குமான தனித்தனி பேருந்துச் சேவையை நடத்துக

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய இலங்கை போக்குவரத்துச் சபையினால் திக்கம் ஊடாக பருத்தித்துறை வரை நடத்தப்பட்டு வரும் பாடசாலைபேருந்துசேவையை இருபாலாருக்குமான தனித்தனி பேருந்து சேவையாக ஈடுபடுத்துமாறு திக்கம் மத்திய சனசமூகநிலையம் வேண்டுகோள் விடுத்துள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மேற்படி சேவையானது மிகவும் சிறந்த முறையில் நடைபெற்று கொண்டு வருகின்றமை பாராட்டவேண்டி யது. ஆனால் இச் சேவையில் ஒரு பேருந்து மட்டும் ஈடுபடுகின்றது.இப்பேருந்து ஏறத்தாழ முற்றாக மாணவர்களினால் நிரம்பி விடுகின்றது.இதில்தற்போதுஉயர் தர வகுப்பு மாணவர்களும் பயணம் செய்கின் றார்கள்.

ஆண்,பெண் இருபாலாருக்கும் தனித்தனி பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்தும்படி இதில் பயணம் செய்யும் மாணவர்கள் சார்பிலும் பெற்றோர்கள் சார்பிலும் தயவாக வேண்டுகின்றோம். ஆண், பெண் இருபாலாரும் தனித்தனி பேருந்துகளில் பயணித்தால் ஒரு சில அசம்பாவிதங்களை தவிர்க்க முடியும் என நம்புகின்றோம் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

# சுதந்திரக்கட்சியின் எதிர்காலம் குறித்து முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படுமாம்

## எஸ்.பி.நாவின்ன தெரிவிப்பு



எதிர்வரும் இரண்டு வாரங்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்காலம் தொடர்பில் சில முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படும் என கடசியின் பொருளாளர் எஸ். பி. நாவின்ன தெரிவித்துள்ளார்.

கட்சியின் எதிர்காலம் குறித்த மிக முக்கியமான அரசியல் தீர்மானங்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எடுக்கவுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு மூன்று நான்கு தலைவர்கள் கிடையாது. ஒரே யொரு தலைவரே இருக்கின்றார். அவர் மைத்திரிபால சிறிசேனவாகும்.

கட்சித் தலைமையகங்கள் இரண்டு கிடையாது. டார்லி வீதி யில் அமைந்துள்ளதே கட்சித் தலைமையகமாகும்.

சிலருக்கு கட்சித் தலைவர் யார் என்பது குறித்து கூட தெரியவில்லை. அதன் காரணமாகவே பல்வேறு தவறான கருத்துக்களை ஊடகங்களில் வெளியிட்டு வருகின்றனர்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலின் போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் போட்டியிடும். அதற்கான ஆயத்தப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை துண்டு துண்டாக பிளவடையச் செய்ய முடியும் என எவரேனும் கருதினால் அது நகைப்பிற்குரியது என எஸ்.பி. நாவினன தெரிவித் துள்ளார்.

சிங்களப் பத்திரிகை யொன்று க்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-5)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 17 செவ் 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L/ தனியார்<br>தொ.இ: B/806 | பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 24<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: CIMA, MBA<br>தொ.இ: G/1394 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 11 3/4<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BSC/ பொறியியலாளர்<br>தொ.இ: B/810 | பிறப்பு: 1971 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 48 செவ் 7 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: ஆசிரியர்<br>தொ.இ: G/1397 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 50 செவ் 12 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில் பிரான்ஸ்<br>தொ.இ: B/812 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 16 செவ் 12 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L/ வங்கியாளர்<br>தொ.இ: G/1407 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 25<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: HND QS/ விரிவுரையாளர்<br>தொ.இ: B/813 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 25 செவ் 4 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/1412 |

**கல்யாண மாலை**

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )


# இராசி பலன்

10.06.2015

(வைகாசி 27, புதன்கிழமை)

சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு

அட்டமி முற்பகல் 8.40 மணிவரை

பூரட்டாதி பிற்பகல் 1.00 மணிவரை

இராகுகாலம் 11.52-1.22 மணிவரை

சுபநேரம் 4.22-5.52 மணிவரை

வளவன்

**மேடம்:** தொழிலில் புதிய மாற்றங்களைச் செய்யும் எண்ணம் உருவாகும், வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், சயன சுகக் குறைவான நாள்.

**இடபம்:** தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும் வாய்ப்புண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மிதுனம்:** வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், அரசு வழியில் அனுகூலமுண்டு, உறவினர்களின் ஒத்தாசைகள் கிடைக்கப் பெறுவீர்கள், செய் தொழில் மேன்மையுண்டு.

**கடகம்:** முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள், உடல் நலம் சீராகும், புகழ்மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், புதிய திட்டங்கள் கைகூடும் நாள்.

**சிம்மம்:** காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, வாகனங்களில் செல்லும் போது விழிப்புணர்வு அவசியம்.

**கன்னி:** தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும் வாய்ப்புண்டு, மகிழ்ச்சிதரும் தகவல்கள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்:** வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், மறைமுக எதிர்ப்புகள் விலகும், உடல்நலம் சீராகி உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், பழைய பாக்கியை வசூலிக்க முற்படுவீர்கள்.

**விருச்சிகம்:** பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம், தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், தாழ்ந்த [illegible] முண்டு.

**தனுசு:** பெற்றோர் மீது பிரியம் கூடும், திட்டமிட்ட காரியங்களைச் செய்து முடிப்பீர்கள், நண்பர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சுப செலவுகள் செய்யும் வாய்ப்புண்டு.

**மகரம்:** விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும் நாள், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், பயணங்களால் பலனுண்டு.

**கும்பம்:** நன்மைகள் நடைபெறும் நாள், குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், வாக்கு மேன்மையுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**மீனம்:** ஆரோக்கியம் சீராக மாற்று மருத்துவத்தை மேற்கொள்வீர்கள், வெளியூர்த் தொடர்புகள் நன்மை தரும், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

திருகோணமலை- பருத்தித்துறை

# இ.போ.ச. பேருந்துச் சேவையினை அச்சுவேலிவரை நடத்த கோரிக்கை

**(யாழ்ப்பாணம்)**

**வடபிராந்திய இலங்கை போக்குவரத்துச் சபையின் திருகோணமலை-பருத்தித்துறை பேருந்துச் சேவையை அச்சுவேலி வரை நடத்துமாறு திக்கம் மத்திய சனசமூக நிலையம் வேண்டுகோள் விடுத்துள்ளது.**

இது தொடர்பாக சனசமூக நிலையம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தினமும் பிற்பகல் 4.30 மணியளவில் திருகோணமலையில் ஆரம்பித்து கொடிகாமம், நெல்லியடி, பருத்தித்துறை ஊடாக அச்சுவேலி வரையிலும் நடத்தும்படி வேண்டுகின்றேன். இதனால் பயணம் செய்யும் பயணிகள் பெரிதும் நன்மையடைவர்.

ஏனெனில் காலம் கடந்து கொடிகாமம் வரையில் வரும் வடமராட்சி பிரதேச பயணிகள் இரவு நேரங்களில் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர்.

சிலநேரங்களில் புகையிரதம் தாமதம் அடைவதால் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் வடமராட்சி பிரதேச பயணிகள் கொடிகாமத்திலிருந்து வீடு வந்து சேரவேண்டியுள்ளது.

அதேவேளை வவுனியாவிலிருந்து இறுதியாக புறப்படும் பேருந்து அநேகமான நாட்களில் நேரத்திற்கு முன்னதாக கொடிகாமத்தினை வந்தடைகின்றது. அதன்பின்னரே சில வேளைகளில் பருத்தித்துறை சாலை கொடிகாமம் கடைசி பேருந்து கொடிகாமத்திலிருந்து புறப்படுகின்றது.

எனவே மேற்படி திருகோணமலை- பருத்தித்துறை சேவையினை தினமும் அச்சுவேலி வரையிலும் நடத்துமாறு பணிவாகக் கேட்டுக் கொள்கின்றோம். (இ-3)

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில்

## நோயாளர் நலன்புரிச் சங்க புதிய நிர்வாகசபைத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் பொதுக்கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 2.30 மணிக்கு வைத்தியசாலையின் புற்றுநோய் கேட்போர் கூடத்தில் சங்கத்தின் தலைவர் வைத்தியகலாநிதி மு.உமாசங்கர் தலைமையில் நடைபெற்றது.

சங்கத்தின் புதிய தலைவராக யாப்பின் பிரகாரம் வைத்திய அத்தியட்சகராகப் புதிதாகப் பதவியேற்றிருககும் வைத்திய கலாநிதி யோ.திவாகர் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார். தொடர்ந்து சங்கத்தின் செயலாளராக வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர் லயன் சி.ஹரிகரன் மீண்டும் அனைத்து உறுப் பினர்களின் ஆதரவுடன் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

சங்கத்தின் உபதலைவராக அளவெட்டி அருணோதயக் கல்லூரியின் பிரதி அதிபர் சு.சயந்தன் மீணடும் தெரிவுசெய்யப்பட்டார். பொருளாளராக வைத்தியசாலையின் பிரதம முகாமை உதவியாளர் திருமதி ஜவ்வனரூபி அகிலன் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார். உப செயலாளராக சோ.செல்வ ரத்தினம் மீண்டும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

நிர்வாகசபை உறுப்பினர்களாக லயன் செ.மகாதேவா, லயன் த. தேவராஜன், இ.பிரசன்னா, சி. செந்தூரன், மு.நாராயணன், வை. சுப்பிரமணியம், ந.உமாகரன், ஆ.மகேஸ்வரன், இ.ஜெயகா ந்தன், க.மயூரதன், ச.சிவானந்தராசா, பொ.அமிர்தலிங்கம், பா.சுரேஸகுமார், செ.றொபின்சன், யோ.சகிந்தன், சு.ஏழூர்நாயகம், திருமதி து.வத்சலா ஆகியோரும் கணக்காய்வாளராக மன்னார் மடு கல்வி வலயக் கணக்காளர் மா.ஜெயக்குமாரும் சட்ட ஆலோசகராக சட்டத் தரணி எஸ். சிவபாதமும் தெரிவு செய்யப்பட்டனர். (இ-5)






ஏழாலை மகாவிததியாலயததில புதிதாக நிரமாணிககபபட்ட தொழிநுடப ஆயவுகூடம அணமையில வடமாகாணசபை உறுபபினரகளால திறைநது வைககபபட்டு மாணவரகளிடம கையளிககபபட்டது. பாடசாலையினஅதிபர தலைமையில இடமபெற்ற இநநிகழவில வடமாகாணசபை உறுபபினரகளான அ.பரஞசோதி, பா.கஜதபன, இ. ஆரனோலட ஆகியோருடன, வலிகாமம வலய பிரதிககலவிப பணிபபாளர ரவிசசநதிரன ஆகியோர அதிதிகளாகக கலநது கொணடனர. மாணவரகள, ஆசிரியரகள, பெற்றோர்களும் பெருமளவில் கலந்து கொண்டனர்.

## தங்கச் சங்கிலி கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை போக்குவரத்துச் சபையின் யாழ்.சாலை பேருந்தில் கடந்த 7ஆம் திகதி பிரயாணியால் தவறவிடப்பட்ட தங்கச்சங்கிலி ஒன்று கண்டெடுக்கப்பட்டு சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எனவே உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி இலங்கை போக்குவரத்துச் சபை யாழ்.சாலை கோண்டாவில் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ள முடியும் என முகாமையாளர் செ.குலபாலசெல்வம் அறிவித்துள்ளார். (இ-3)

## வேலையற்ற பட்டதாரிகளை இன்று ஒன்றுகூடுமாறு அழைப்பு

வடமாகாணத்திலுள்ள வேலையற்ற பட்டதாரிகள் அனைவரையும் இன்று புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நல்லூர் சங்கிலியன் சிலைக்கு அருகாமையில் அமைந்துள்ள யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் ஒன்றுகூடுமாறு வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் சமூகம் அழைப்பு விடுத்துள்ளது.

குறித்த ஒன்றுகூடலில் வடமாகாண சபையின் அமைச்சர்களினால் தமது அமைச்சுக்களின் கீழுள்ள மேலதிக ஆளணி உள்வாங்கல்கள், தரவுகள் மற்றும் அரச வேலை வாய்ப்புக்கள் தொடர்பான எதிர்கால செயற்பாடுகள் குறித்து தீர்மானம் எடுக்கப்படவுள்ளது. (இ-5)

# புற்றுநோய் சிகிச்சைப் பிரிவானது அநாதரவாக தெல்லிப்பழையில்!

## வைத்திய கலாநிதி திவாகர் ஆதங்கம்

(யாழ்ப்பாணம்)

புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு எமது வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்டு அநாதரவாக விடப்பட்டமை போன்ற நிலைமையிலேயே இங்கு உள்ளது. அதற்குரிய போதிய வசதிகள் சுகாதாரத் திணைக்களத்தினாலோ அரசாங்கத்தினாலோ இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. இது மிகவும் வேதனையளிக்கின்றது என வைத்தியசாலை அத்தியட்சகர் வைத்திய கலாநிதி யோ. திவாகர் தெரிவித்துள்ளார்.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் பொதுக்கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 2.30 மணிக்கு வைத்தியசாலையின் புற்றுநோய் கேட்போர் கூடத்தில் சங்கத்தின் தலைவர் வைத்திய கலாநிதி மு.உமாசங்கர் தலைமையில் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில் புதிய நிர்வாக சபையின் தலைமைப் பதவியை ஏற்றுக்கொண்ட வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி யோ.திவாகர் வைத்தியசாலையின் அபிவிருத்தி, நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பில் தலைமை உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவரது தலைமை உரையில் மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எமது வைத்தியசாலை ஆதார வைத்தியசாலை என்ற சாதாரண தரப்படுத்தலில் தற்போதும் உள்ளது. இங்கு புற்றுநோய் வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி ஜெயக்குமார் எடுத்த கடும் முயற்சியால் புற்றுநோய் சிகிச்சைப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அவர் எமது வைத்தியசாலையை வளம்படுத்தவேண்டும் என்ற நல்ல நோக்கோடு இங்கு புற்றுநோய் சிகிச்சைப்பிரிவை ஆரம்பிப்பதற்கு பலசவால்களை எதிர்நீச்சலிட்டு முறியடித்து ஆரம்பித்தார். இவரது முயற்சியின் பயனாகத்தான் இங்கு புற்றுநோய் வைத்தியசாலை உருவாக்கப்பட்டது.

நாதன் சிவகணநாதன் [illegible] வினர் கனேஸ் [illegible] என்ற அரசசார்பற்ற நிறுவனத்துக்கூடாக நடைபவனியை மேற்கொண்டு அதில் கிடைக்கப்பட்ட பணத்தினூடாக சகல வசதிகளையும் உடைய ஒரு புற்றுநோய் வைத்தியசாலையை உருவாக்கித் தந்தார்கள். இதற்குரிய காணியை ஈ.எஸ்.பி. நிறுவன இயக்குநர் நாகரட்ணம், சாந்தா அபிமன்னசிங்கம் போன்றோர் நன்கொடையாக வழங்கினார்கள். மத்திய அரசின் மிகப்பெரிய நிர்வாகத்தின் கீழ் இருந்த புற்றுநோய் சிகிச்சைப்பிரிவு கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் இங்கு மாற்றப்பட்டுள்ளது.

புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு முழுமையாக இங்கு இயங்க ஆரம்பித்தாலும் எமது வைத்தியசாலைக்கு சுகாதாரத் திணைக்களத்தாலோ அரசாங்கத்தாலோ வழங்கப்படுகின்ற வளங்கள் போதாமலேயே உள்ளன.

பழைய ஆளணியின் அடிப்படையிலேயே தற்போதும் ஆளணி உள்ளது. வைத்தியர்கள், தாதியர்கள், மருத்துவ தொழில்நுட்பவியலாளர்கள் போன்றோர் தற்போதும் பற்றாக்குறையாகவே உள்ளனர். ஆண் சிற்றூழியர்கள் 17 பேர் மாத்திரமே உள்ளனர். ஆண்கள் விடுதிகளுக்கு ஆண்கள்தான் பணியாற்றவேண்டும். இதுதொடர்பாக நாம் வடக்கு மாகாண சுகாதார அமைச்சருக்கும் தெரிவித்திருந்தோம்.

மகரகம வைத்தியசாலைக்கு இணையான சேவையை சேவை வழங்கு நிலையமாக எமது வைத்தியசாலை உருப்பெற்று வருகின்றது. வடக்கு கிழக்கு மாகாணத்தில் ஏன் அதற்கும் அப்பால் புத்தளம், சிலாபம் போன்ற மாவட்டத்திலுள்ள புற்றுநோயாளர்கள் இங்கு வந்து சிகிச்சைபெறவேண்டிய ஏதுநிலை உருவாகியுள்ளது. ஆகையால், எமது வைத்தியசாலையை மாகாணப் பொது வைத்தியசாலையாகத் தரமுயர்த்தவேண்டும் அல்லது மாவட்ட பொது வைத்தியசாலையாகத் தரமுயர்த்தவேண்டும் என்று பலமுறை அழுத்தங்களை வழங்கிய வண்ணமே உள்ளோம். அவ்வாறு தரமுயர்த்தப்பட்டால் தான் நாம் நோயாளர்களுக்கு சிறப்பான சேவையை ஆற்ற முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்ஃபி




உலகின் தலைசிறந்த செல்பி என வர்ணிக்கப்பட்ட இந்தியப் பிரதமர் மோடி சீனப் பிரதமர் லீகியாங் எடுக்கப்பட்ட செல்பி.

உங்கள் செல்பிக்கள் ஏதும் பொருள் கூறுவதாயோ அல்லது வித்தியாசமான பின்புலத்திலோ இருக்குமாறு அனுப்பி வையுங்கள்.

உங்கள் செல்ஃபிகளை
photosofvalampurii@gmail.com
என்னும் முகவரிக்கு உங்கள் பெயர், முகவரியுடன் அனுப்பிவையுங்கள்.
சிறந்த செல்ஃபிக்கு பரிசில்கள் உண்டு

## மத்திய செயற்குழு தீர்மானித்தால் நான் பதவியிலிருந்து விலகுவேன்

### அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவிப்பு



(கொழும்பு)

**ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் செயலாளர் பதவியில் இருந்து தன்னை நீக்குவதற்கான அவசியம் இருப்பின், அதனை கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்தில் தீர்மானித்த பின்னரே பதவியிலிருந்து விலகுவேன் என அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.**

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மத்திய செயற்குழுவினால் என்னை நீக்க வேண்டும் என தீர்மானித்தால் ஒரு நிமிடமேனும் அப்பதவியில் நான் செயற்படமாட்டேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியினுள் இன்று ஜனநாயகம் செயற்படுவதனால் சுதந்திரமான கருத்துக்களை வெளியிடுவது கட்சி பதவிகளில் நீக்குவதற்கு காரணமாக அமையாதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கிடையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியில் பிரதமர் வேட்பாளராக போட்டியிடுவது குறித்து தொடர்ந்து கலந்துரையாடி வருவதாக அவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி மத்திய செயற்குழுவின் பெரும்பான்மையினர் முன்னாள் ஜனாதிபதிக்கு வேட்பு மனு வழங்குவதற்கு ஆதரவு வழங்கினால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதற்கு இணக்கம் தெரிவிக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-5)

## மனைவியை அடித்து துன்புறுத்திய கணவனைக் கடித்துக்குதறிய நாய்

### 35 காயங்கள்,21 தையல்கள்

(கொழும்பு)

கணவரால், மனைவி அடித்து துன்புறுத்தப்பட்டதைப் பார்த்து கொண்டிருந்த வளர்ப்பு நாய் ஒன்று குறித்த நபர் மீது ஆவேசமாகப் பாய்ந்து கடித்து குதறிய சம்பவம் ஒன்று கம்பளையில் இடம் பெற்றுள்ளது.

வளர்ப்பு நாயின் கடிக்கு உள்ளான நபர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். குறித்த நபரின் உடலில் 35 இடங்களில் நாய் கடித்துக்குதறிய காயங்களுடன் கீறல் காயங்களும் உள்ளதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன. காயங்களுக்கு 21 தையல்களும் இடப்பட்டுள்ளன.

தினமும் மதுபோதையில் வீட்டுக்கு வரும் குறித்த நபர் மனைவி, பிள்ளைகளுடன் சண்டையிடும் சந்தர்ப்பங்களிலெல்லாம் "அம்மு" என்ற செல்லப் பெயரால் அழைக்கப்படும் குறித்த நாய் இடைநடுவே புகுந்து குரைப்பதும் அந்த நபரை கடிப்பது போல் பாசாங்கு காட்டி வந்து ள்ளது.

இந்நிலையில் சம்பவதினமான கடந்த சனிக்கிழமை வழமைபோல்சண்டை நடந்த சமயம் குறித்த நாய் பலமாக குரைத்தும் சண்டையை நிறுத்தாதையடுத்து அந்நபரின் மீது ஆவேசமாக பாய்ந்து கடித்துக் குதறியுள்ளது.

படுகாயமடைந்த நபர் கம்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களுக்கான அமைச்சு ஒன்றினை அமைக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களின் விவகாரங்களை கவனிக்கும் வகையில் அமைச்சு அல்லது திணைக்களம் ஒன்றை ஸ்தாபிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியாவின், மிட்ல் செக்ஸ், பார்ன் ஹில் கன்ரி நிலையத்தில் அண்மையில் நடத்தப்பட்ட இலங்கை தொடர்பான கலந்துரையாடலின் போது இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் வதிவிடத்தைக் கொண்டிராத இலங்கைத் தமிழர்களால் இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தக்கலந்துரையாடலுக்கு இடைக்கால தலைவர் வி.சிவலிங்கம் தலைமை தாங்கினார். நாடாளுமன்ற உறுப்பினர் பாரி காடெனரும் இதில் பங்கேற்றார்.

இதன்போது அமைப்பின் ஸ்தாபகர்களில் ஒருவரான சாந்தன் தம்பா உரையாற்றும் போது வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களுக்கான அமைச்சு உருவாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார்.

இலங்கை வம்சாவளிகளான பிரித்தானியாவில் உள்ள சுமார் 3லட்சம் தமிழர்களை இலங்கையின் சமாதான வலுவூட்டலுக்கு பங்களிக்கும் வகையில் இந்தக் கோரிக்கை விடுக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

இதன் அடிப்படையில் விரும்புகிறவர்களுக்கு இரட்டை பிரஜாவுரிமைகளை பெற்று அவர்கள் இலங்கையின் நடப்புக்களுக்கு உதவ முடியும்.ஏற்கனவே பிரித்தானியாவில் வசிக்கும் இந்தியர்கள் இவ்வாறான ஒரு அமைப்பை உருவாக்கி, தமது நாட்டுக்கு சேவை செய்து வருவதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-5)

## மொன்டிநீக்ரோ விபத்தில் ஒருவர் பலி! இலங்கையர் உள்ளிட்ட மூவர் காயம்

மொன்டிநீக்ரோ நாட்டின் எட்ர ய்டிக் கடல் பகுதியில் நேற்று முன்தினம் இடம பெற்றபடகுவிபத்தில்ஒருவர்உயிரிழந்ததுடன் மூவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் ஒருவர் இலங்கையர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் ஒருவரின் நிலை கவலைக்கிடம் என மெல்ஜின் வைத்தியசாலைவைத்தியர் ஒருவர் தெரிவி த்துள்ளார்.

படகு விபத்துக்கான காரணம் குறித்து அந்நாட்டு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


### அக்கராயன் - முறிகண்டி வீதியிலுள்ள பாதுகாப்பற்ற

# உயிராபத்தை ஏற்படுத்தும் புகையிரத கடவையை சீர்செய்வது எப்போது?

## பொதுமக்கள் கேள்வி

(கிளிநொச்சி)

**அக்கராயன்-முறிகண்டி பிரதான வீதியில் அமைக் கப்பட்டுள்ள புகையிரத கடவையானது நீண்டகால மாக பாதுகாப்பற்ற புகையிரதக் கடவையாக காணப் டுவதால் அதனூடாகப் பயணிப்போர் அபாயத்தை எதிர் கொள்ளக்கூடியதாக உள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.**



குறித்த பிரதான வீதி வழியாக தினமும் நூற்றுக்கு மேற்பட்ட பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் தமது தேவையின் நிமிர்த்தம் இப்பாதுகாப்பற்ற புகையிரதக்கடவையை கடந்து சென்று வருகின்றனர். இதேவேளை இவ்வழியாக நோயாளர் காவு வண்டி, கனரக வாகனங்கள், பேருந்துகள், துவிச்சக்கர வண்டிகள் என்பன இரவு- பகலாக இக்கடவையினூடாகப் பயணிக்கும் போது விபத்துக்கள் ஏற்பட்டு உயிர் இழப்புக்கள் ஏற்படவாய்ப்புள்ளதாக சாரதிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

வடபகுதிக்கான புகையிரதசேவைகள் ஆரம்பிக்கப்பட்டு பல மாதங்கள் கடந்த நிலையிலும் இதுவரை குறித்த புகையிரதக்கடவையில் சமிக்ஞை விளக்குகள், பாதுகாப்பான கேற் என்பன அமைக்கப்படாது கவனிப்பாரின்றி கைவிடப்பட்ட நிலையில் காணப்படுவது ஏன் என பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.


இக்கடவையூடாக அடிக்கடி புகையிரதங்கள் தமது பயணத்தை மேற்கொண்டு வருவதால் வாகனங்களில் செல்வோர், பொதுமக்கள், மாணவர்கள் ஆகியோர் அச்சத்துடனேயே இக்கடவையை கடக்க வேண்டியுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உயிராபத்தை ஏற்படுத்தும் நிலையில் காணப்படுகின்ற குறித்த பாதுகாப்பு கடவையை பாதுகாப்பான புகையிரதக் கடவையாக அமைத்துத் தருமாறு பொதுமக்களும் சாரதிகளும் கோரிக்கை விடுக்கின்றனர். (2-272)

## மின்தடை பற்றிய அறிவித்தல்

உயர் அழுத்த மற்றும் தாழமுக்க மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக காலை 8 மணியிலிருந்து மாலை 5மணிவரை வடக்கு மாகாணத்தின் சில பிரதேசங்களில் மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்குமென இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது. இதற்கமைய இன்று புதன்கிழமை வவுனியா பிரதேசத்தில் செக்கட்டிப்புலவு பிரதேசம், மன்னார் பிரதேசத்தில் திருக்கேதீஸ்வரம் எள்ளுப்பட்டி ஆகிய பிரதேசங்களிலும் நாளை வியாழக்கிழமை கிளிநொச்சி பிரதேசத்தில ஒட்டுசுட்டான்,நெடுங்கேணி, கற்சிலைமடு, தண்டுவன்,நயினாமடு, மதியாமடு, நெடுங்கேணி பலநோக்குக்கூட்டுறவுச் சங்கம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் பறயனாலங்குளத்திலிருந்து நேரியகுளம் வரை பம்பைமடு கிராமம்,பட்டானிச்சூர் பிரதேசம், பட்டக்காடு பிரதேசம்,வேப்பங்குளம் பிரதேசம், மாமடுவிலிருந்து மகாகச்சக்கொடிய வரை, பொகவஸ்வேவ, சளலிங்கம, நமலகம, பிரப்பன்மடு பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் வி.சி.கே. ஆலை, செட்டிகுளம் வைத்தியசாலை, வலயம் 01, 02, 03 மற்றும் 04, CEC கல்லுடைக்கும் ஆலை ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் முசலிப்பிரதேசம், பரிகாரிக்கண்டல், பூந்தீவுக் கண்டல், மடுக்கரை, அரிப்பு, புதுவெளி, சிலாவத்துறை, கடற்படை முகாம் , CECB, முள்ளிக்குளம கடற்படை முகாம ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும். (2)

## விநாயகபுரம் விவசாயிகள் கூட்டுறவுச்சங்கத்தின் அலுவலகக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டது





கிளிநொச்சி முழங்காவிலில் விநாயகபுரம் விவசாயிகள் கூட்டுறவுச்சங்கத்தின் புதிய அலுவலகக் கட்டடத்தை நேற்று முன்தினம் வடமாகாண கூட்டுறவு அமைச்சர் பொ.ஐங்கரநேசன் திறந்துவைத்துள்ளார்.

பழச் செய்கையாளர்கள் மற்றும் பயிர்ச் செய்கையாளர்களை உறுப்பினர்களாகக் கொண்ட விநாயகபுரம் விவசாயிகள் கூட்டுறவுச்சங்கம் சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தின் உதவியுடன் சேதன முறையில் பப்பாளிச் செய்கையை மேற்கொண்டு வருகிறது. உற்பத்தி செய்யப்படும் பப்பாசிப் பழங்களையும் ஏனைய மரக்கறிவகைகளையும் பிராந்திய, தேசிய மற்றும் பன்னாட்டு அளவில் சந்தைப்படுத்துவதற்கான வசதிகளில் ஒன்றாகவே சர்வதேச தொழிலா ளர் ஒன்றியத்தின் நிதிப் பங்களிப்புடன் இப்புதிய கட்டடத் தொகுதி அமைக்கப்பட்டுள்ளது.

20 இலட்சம் ரூபா செலவில் உருவாக்கப்பட்டுள்ள இப்புதிய கட்டட த்தொகுதியில் அலுவலகத்தை அமைச்சர் பொ.ஐங்கரநேசனும், விவசாய சேவைகள் மையத்தை நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனும் திறந்து வைத்துள்ளனர்.

இந்நிகழ்ச்சியில் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி சுபினய் நந்தி, சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தின் இலங்கைக்கும் மாலை தீவுக்குமான இயக்குநர் டொங்லின் லீ, வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மதுமதி வசந்தகுமார்,கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கு.அருந்தவநாதன், பிரதி விவசாயப் பணிப்பாளர் அ.செல்வராசா ஆகியோருடன் விநாயகபுரம் விவசாயிகள் கூட்டுறவுச் சங்க த்தின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

விநாயகபுரம் விவசாயிகள் கூட்டுறவுச்சங்கத்தின் உற்பத்திகளைக் கொள்வனவு செய்து சந்தைப்படுத்துவதற்கென விநாயகபுரம் உற்பத்திகள் கூட்டு றவுச்சங்கமும் சாரகேதா ஹோலடிங்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் என்ற தனியார் முன்னணி ஏற்றுமதி நிறுவனமும் ஒப்பந்தமொன்றைச் செய்து கொண்டுள்ளமையும் இங்கே குறிப்பிடத்தக்கது.(2)

## புதிய தொழிற் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

இலங்கை திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபையின் வவுனியா மாவட்ட அலுவலகத்தினால் 2015 ஆம் ஆண்டின் 2ஆம் பிரிவிற்கான தொழிற் கற்கை நெறிகள் ஜூன் மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளதால் பயிலுநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன என உதவிப் பணிப்பாளர் பண்டார தெரிவித்துள்ளனர்.

இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபையின் NVQ மட்டத்திலான புதிய தொழிற் பயிற்சி கற்கை நெறிகளின் இரண்டாம் பிரிவுகள் ஜூன் மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளன.தகைமைக்கேற்ப தொழிற்ப யிற்சி யுடன் கூடிய விரும்பிய தொழிலை பெற்றுக் கொள்ள முடியும்.

அத்துடன் 6 மாத கால கற்கை நெறியின் முடிவின் பின்னர் மேலதிக பயிற்சியுடன் இணைக்கப்படுவதுடன் தொழில் வாய்ப்பினையும் பெற்றுக் கொள்ள முடியும். விண்ணப்பிக்க விரும்புவோர் கணனி வன்பொருள் தொழில்நுட்பவியலாளர், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், தோற் பொருள் உற்பத்தியாளர், மின்னியலாளர் காய்ச்சி இணைப்பவர், அழகுக்கலையும் சிகை அலங்காரமும், தையல் கணனி, பட வரைஞர் மற்றும் மோட்டர் வாகன திருத்துநர் ஆகியவற்றுக்கு விண்ணப்பிக்க முடியும்.

மேலதிக விபரங்களுக்கு இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபை, இல: 108, புகையிரத நிலைய வீதி, வைரவ புளியங்குளம், வவுனியா.அல்லது தொலைபேசி இலக்கங்களான: 024-2221617, 071-1213357 ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டு தகவல்களைப் பெற முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-250)




## மூன்று முறிப்பில் 1.4மில்லியன் ரூபா செலவில் அரிசி ஆலை அமைப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட மூன்றுமுறிப்பு கிராமத்தில் வடக்கு மாகாண போக்குவரத்து. வர்த்தக வாணிப மற்றும் கிராமிய அமைச்சால் 1.4 மில்லியன் ரூபாய் செலவில் அரிசி ஆலையொன்று அமைக்கப்பட்டு வருவதாக அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பிரதேசமாக காணப்படும் மூன்றுமுறிப்பு கிராமத்தில் இப்பகுதி மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் இந்த அரிசி ஆலை அமைக்கப்பட்டு வருகின்றது.

நவீன முறையில் அமைக்கப்படவுள்ள இந்த ஆலைக்கான ஆரம்பகட்ட வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த அரிசி ஆலை அமைப்பதன் மூலம் மூன்று முறிப்பு, இளமருதன்குளம் பனங்காமம், கொம்புவைத்தகுளம் ஆகிய பகுதிகளையும் வவுனியா வடக்கு, நவ்வி குஞ்சுக்குளம், நவ்வி, பாலமோட்டை, மடத்துவிளாங்குளம் ஆகிய பகுதிகளையும் சேர்ந்த மக்கள் நன்மையடைவார்கள் என அமைச்சின் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வின் எழுச்சி பயனாளிகளினால் சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது



(கிளிநொச்சி)

கிளிநொச்சி கண்ணகைபுரம் மேற்கில் சன சமூக நிலையம் ஒன்று 10 இலட்சம் ரூபா நிதியொதுக்கீட்டில் அமைக்கப்படவுள்ளது.

இந்நிலையம் அமையப் பெறவுள்ள காணியை வாழ்வின் எழுச்சி பயனாளிகள், பொதுமக்கள் ஆகியோர் இணைந்து சிரமதானப் பணி மூலம் நேற்றையதினம் துப்புரவு செய்தனர்.

கண்ணகைபுரம் வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தரின் ஒழுங்குபடுத்தலின் கீழ் கண்ணகைபுரம் மேற்கு கிராம அபிவிருத்தி சங்கத்தின் அனுசரணையில் இச்சிரமதானப்பணி முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-272)

## புகைத்தல்,மது எதிர்ப்பு தினத்தையொட்டி நடைபெற்ற சமூக விழிப்புணர்வு பேரணி



(கிளிநொச்சி)

'சர்வதேச புகைத்தல்,மது எதிர்ப்பு' தினத்தையொட்டி வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம், வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சு ஆகியவற்றின் ஏற்பாட்டில் மக்கள் மத்தியில் பல்வேறுபட்ட சமூக விழிப்புணர்வு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் ஓர் அங்கமாக 'என்றும் போதையற்ற ஒழுக்கம் நாட்டிற்கு தேவை' எனும் கருப்பொருளில் கிளிநொச்சி நகர வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி, ஸ்கந்தபுரம் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி ஆகியவற்றின் ஒழுங்குபடுத்தலின் கீழ் நேற்று முன்தினம் விழிப்புணர்வு பேரணியொன்று நடத்தப்பட்டது.

குறித்த விழிப்புணர்வு பேரணியானது கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் இருந்து ஆரம்பமாகி கரைச்சி பிரதேச செயலகத்தை சென்றடைந்தது.

இதில் பங்கேற்றவர்கள் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலான பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

இப்பேரணியில் பெருமளவிலான வாழ்வின் எழுச்சி பயனாளிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர்கள் எனப் பல தரப்பினரும் கலந்து கொண்டிருந்தனர். (2-272)




## ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலை மீளவும் இயங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்

### அமைச்சர் றிசாத் பதியுதீன் உறுதிமொழி

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டானில் அமைந்துள்ள ஓட்டுத்தொழிற்சாலையினை மீள இயங்க வைப்பதற்கு தேவையான அனைத்து புனரமைப்பு மற்றும் இயந்திர கொள்வனவுகள் செய்து தரப்படுமென வன்னி மாவட்ட அபிவிருத்திக்குழுவின் தலைவரும் அமைச்சருமான றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார். ஒட்டுசுட்டானில் அமைந்துள்ள ஓட்டுத்தொழிற்சாலைக்கு அவர் நேற்று முன்தினம் மாலை விஜயம் செய்தார்.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

நீண்டகாலமாக இயங்காமல் உள்ள ஓட்டுத்தொழிற்சாலையினை மீள இயங்கவைக்கும் வகையில் தேவையான புனரமைப்பு மற்றும் இயந்திர கொள்வனவுகளுக்காக 20 மில்லியன் ரூபாவை அடுத்த ஆண்டில் ஒதுக்கீடு செய்துள்ளதாக அவர் கூறினார். இரண்டாம் கட்ட நிதியாக 100 மில்லியன் ரூபாவை அடுத்த ஆண்டில் ஒதுக்கீடு செய்வதாகவும் இதன்மூலம் இப்பிரதேசத்தில் உள்ள பல குடும்பங்கள் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வார்கள் என்றும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார். கைத்தொழில் வணிகத்துறை அமைச்சின் கீழ் இந்த ஓட்டுத்தொழிற்சாலை செரமிக் நிறுவனத்துடன் இணைக்கப்பட்டதனை அடுத்தே அமைச்சர் இங்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றினை மேற்கொண்டிருந்தார்.



நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தினால் இந்த தொழிற்சாலை அழிக்கப்பட்டதனால் இதன் உற்பத்தி தடைப்பட்டது. இயந்திரங்களும் சேதமாகியுள்ளன. இத் தொழிற்சாலை புனரமைப்பு பணிகள் மிகவும் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு நாட்டிற்கு தேவையான செரமிக் உற்பத்திகளை வழங்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-281)

## தமிழ் கிராமத்தில் விஹாரை; இந்துமாமன்றம் கடும்கண்டனம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய் என்ற தமிழ் கிராமத்தில் விஹாரை ஒன்று அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுவதையிட்டு அகில இலங்கை இந்துமாமன்றம் வன்மையாகக் கண்டிக்கிறது என இம் மன்ற பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில்,

கொக்கிளாய் என்பது ஒரு தமிழ் கிராமமமாகும். இங்குள்ள பௌத்த பிக்கு ஒருவர் தனியார் காணிகளையும் அரச வைத்தியசாலைக்குரிய காணியின் ஒரு பகுதியையும் ஆக்கிரமித்து பொலிஸ் மற்றும் படையினரின் உதவியுடன் இங்கு விஹாரையை அமைக்க நடவடிக்கை எடுப்பதையிட்டு எமது அங்கத்தவர்கள் மிகுந்த கவலையும் மனக்கிலேசமும் அடைகின்றனர்.

இன,மத பகைமையையும் குரோதத்தையும் இத்தகைய நடவடிக்கைகளே முன்னெடுக்கின்றன என்பதை தேசிய நல்லிணக்க அரசுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். படையினரும் பொலிஸாரும் சேர்ந்து இவ்வாறான குரோத நடவடிக்கைகளை தோற்றுவிப்பதும், இவ்வாறான செயலுக்கு தனியார் மற்றும் அரச காணிகளை கபளீகரம் செய்வதும் கண்டிக்கப்படவேண்டியதுடன் இதனை தடுத்தி நிறுத்த அரசு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்பதே இந்துமாமன்றத்தின் வற்புறுத்தலாகும்.

கட்டடங்கள் அமைக்கும் போது அப் பிரதேச உள்ளூராட்சி மன்றங்களின் அனுமதி பெறப்பட வேண்டுமென்பது சட்டமாகும். எனினும் ஒரு ஜனநாயக நாட்டில் சட்டத்தை மதிக்காது தான்தோன்றித்தனமாக இவ்வாறான நிர்மாணங்களை மேற்கொள்வதும் அதற்கு படையினரும் சட்ட அமுலாக்கத்தைக் கண்காணிக்க வேண்டிய பொலிஸாரும் துணை போவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்றமும் மாகாண சபையும் சட்ட நடவடிக்கையை எடுப்பதுடன் இவ்வாறு இன, மத குரோதங்களை தடுத்து நிறுத்த ஜனாதிபதி உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதே எமது வேண்டுகோளாகும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

# தெற்கு மீனவர் பொலிஸில் முறைப்பாடு; ரவிகரன் மீது இன்று விசாரணை

வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனால் முள்ளிவாய்க்கால் கடற்கரையோரத்தில் வைத்து தனக்கு மிரட்டல் விடுக்கப்பட்டதாக தென்னிலங்கை மீனவர் ஒருவர் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் புகார் செய்துள்ளார்.

இதையடுத்து ரவிகரனிடம் பொலிஸார் வாக்குமூலம் பெற்றுள்ளனர்.

இவ்விசாரணையின் போது, குறித்த மீனவர் கரைவலைத் தொழில் அனுமதியை மட்டும் வைத்துக்கொண்டு படகுகள், தெப்பங்களை பயன்படுத்தி சிறு தொழில் நடவடிக்கை மேற்கொண்டது சட்டவிரோதம் என்பதை பொலிஸாரிடம் தான் சுட்டிக்காட்டியதாக ரவிகரன் தெரிவித்துள்ளார்.

மேலும் முள்ளிவாய்க்கால் கிழக்கு கடற்றொழில் சங்க நிர்வாகிகள், கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள உதவிப்பணிப்பாளர், தென்னிலங்கை மீனவர்களை உள்ளடக்கிய விரிவான விசாரணையை தான் பொலிஸாரிடம் வலியுறுத்தியதாகவும் இன்றைய தினம் பொலிஸாருக்கு தான் நேரம் வழங்கியதாகவும் அவர் தெரிவித்தார். இந்நிலையில் சம்பந்தப்பட்ட அனைவரையும் உள்ளடக்கிய விரிவான விசாரணை இன்று இடம்பெறவுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

கடந்த மாதம் 29 ஆம் திகதி முள்ளி வாய்க்காலில் சட்டவிரோதமான முறையில் தென்னிலங்கை மீனவர்கள் அத்துமீறியுள்ளதாக முள்ளிவாய்க்கால் கிழக்கு கடற்றொழிலாளர் சங்கத்தினரால் வடமாகாணசபை உறுப்பினர் ரவிகரனுக்கு தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து சம்பவ இடத்திற்கு நேரில் சென்ற ரவிகரன், தென்னிலங்கை மீனவர்கள் உள்ளிட்டோரை தடை செய்யப்பட்ட தொழில்களை செய்வதை நேரில் உறுதிப்படுத்தினார்.

இதையடுத்து அவர்களிடம் இது குறித்து நேரில் எச்சரித்ததோடு, அங்கிருந்தபடியே முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல்வள திணைக்கள உதவிப்பணிப்பாளரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு நிலைமை குறித்து அறிவித்தார். கரைவலைத் தொழிலுக்கு மட்டுமே அனுமதி [illegible] வலைத் தொழில் [illegible] தொழில்களை அங்கு செய்வது சட்டவிரோதம் என்று சுட்டிக்காட்டினார்.

இதையடுத்து அடுத்த நாளே மேற்படி தென்னிலங்கை மீனவர்கள் அங்கிருந்து வெளியேறினர்,

இந்நிலையில் தாம் அனுமதி பெற்றிருந்த கரைவலைத் தொழிலுக்கு ரவிகரன் இடையூறு விளைவித்ததாகவும், குறித்த அனுமதியை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அச்சுறுத்தும் தொனியில் ரவிகரன் தன்னை மிரட்டியதாகவும் தென்னிலங்கை மீனவர் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதையடுத்து ரவிகரனிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இவ்விசாரணையின் போது, குறித்த மீனவர் கரைவலைத் தொழில் அனுமதியை மட்டும் வைத்துக்கொண்டு படகுகள், தெப்பங்களை பயன்படுத்தி சிறுதொழில் நடவடிக்கை மேற்கொண்டது சட்டவிரோதம் என்பதை பொலிஸாரிடம் தான் சுட்டிக்காட்டியதாக ரவிகரன் தெரிவித்துள்ளார்.

மேலும் முள்ளிவாய்க்கால் கிழக்கு கடற்றொழில் சங்க நிர்வாகிகள், முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல்வள திணைக்கள உதவிப் பணிப்பாளர், தென்னிலங்கை மீனவர் ஆகியோரை உள்ளடக்கிய விரிவான விசாரணையை தான் வலியுறுத்தியதாகவும் இன்றைய தினம் பொலிஸாருக்கு தான் நேரம் ஒதுக்கியுள்ளதாகவும் தெரிவித்தார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தவளை இளவரசியும் குரங்கு அரக்கர்களும்

தென் அமெரிக்காவில் உள்ள அமேசான் காடுகளில் கராயா என்ற பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர்கள் வாழ்ந்து வந்தனர். ஒருமுறை அவர்களுக்குப் பெரிய ஆபத்து வந்தது.

எங்கு இருந்தோ பயங்கரமான இரண்டு குரங்குகள் அங்கே வந்தன. அந்தக் குரங்குகள் கராயார்களைத் தாக்கின. பலரையும் கடித்துக் கொன்றன. கிராமங்களில் புகுந்து பயிர்களை அழித்தன. குரங்குகளுக்குப் பயந்து மக்கள் வீட்டிலேயே முடங்கிக் கிடந்தார்கள்.

அங்கே ஒரு வீட்டில் மூன்று சகோதரர்கள் இருந்தார்கள். அவர்களில் மூத்தவன் சொன்னான் நான்தான் வீரன். வீரர்களுக்கெல்லாம் வீரன். இதைக் கேட்ட இரண்டாமவன் நானும் வீரன். வீரர்களுக்கெல்லாம் வீரன்! என்றான். மூன்றாமவன் நான் கோழை. உலகிலேயே மிகப்பெரிய கோழை என்றான். உடனே மூத்தவன் எது வந்தாலும் நாம் இந்த இராட்சதக் குரங்குகளைக் கொன்று நம் மக்களைக் காப்பாற்ற வேண்டும். இளையவன் வீட்டிலேயே இருக்கட்டும். அவன் ஒரு பயந்தாங்கொள்ளி அல்லவா... என்றான். இருவரும் தம்பியை வீட்டில் இருக்க வைத்தார்கள். வில் அம்புகளையும் மற்ற ஆயுதங்களையும் எடுத்துக்கொண்டு காட்டுக்குச் சென்றார்கள். அமேசான் நதிக்கரை வழியாக குரங்குகள் வாழ்கின்ற காட்டினுள் நுழைந்தார்கள். அங்கே ஒரு பெரிய குளம் இருந்தது. அவர்கள் ஏற்கனவே தாகத்தால் தவித்துக் கொண்டு இருந்ததால் நீர் பருகுவதற்காகக் குளத்தை நோக்கிக் குனிந்தார்கள். திடீரென்று உரத்த குரலில் குளம் பேசியது ... குடிக்காதீர் கலக்காதீர் என் தண்ணீரைக் குடிக்காதீர் குளத்தின் உள்ளே ஒரு தவளையும் உண்டே!



திடீரென்று தண்ணீரின் நிறம் மாறியது. குளத்தின் அடியிலிருந்து பெரிய தவளை ஒன்று மேலே வந்தது. வீரர்களே ...நீங்கள் குரங்குகளைக் கொல்வதற்காகப் புறப்பட்டவர்கள்தானே? குரங்குகள் எங்கே இருக்கின்றன என்று நான் சொல்கிறேன். அதற்குப் பதிலாக உங்களில் ஒருவர் என்னைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும்! என்றது.

ஒரு தவளையைத் திருமணம் செய்து கொள்வதா? எங்களுக்கு விருப்பம் இல்லை! என்ற சகோதரர்கள் தவளையை ஓங்கி உதைத்தார்கள். பாவம் அது... தண்ணீரில் மூழ்கி மறைந்தது. அவர்கள் காட்டின் உட்பகுதியில் நுழைந்தார்கள். இராட்சதக் குரங்குகளின் கூச்சல் கேட்டது. திடீரென வெளிப்பட்ட அந்தக் குரங்குகள் மரக் கிளைகளை ஒடித்து அவர்களைத் தாக்கின. சகோதரர்கள் இருவரும் ஓடத் தொடங்கினார்கள். ஓடி ஓடிக் காட்டில் திசை தவறிவிட்டார்கள்.

சகோதரர்களைக் காணவில்லையே என்று அஞ்சினான் கடைசித்தம்பி. அவர்களைத் தேடிக் கொண்டு பயத்துடன் காட்டுக்கு வந்தான். அவனுக்கும் மிகவும் பசித்தது. காட்டுச் செடிகளில் சில செடிகளின் கிழங்குகளைத் தோண்டிச் சாப்பிட நினைத்தான்.

அவன்தான் போதிய பலம் இல்லாதவன் ஆயிற்றே! கிழங்குகளைத் தோண்டி எடுக்க அவனால் முடியவில்லை. பறவைகளை வேட்டையாடுவதைத் தவிர்த்தான். அங்கும் இங்கும் நடந்தான். அப்போது ஒரு பொந்தில் இருந்து பாம்பு இறங்கி வந்தது. அடேய் கோழைப் பையா இதோ! மந்திர சக்தி வாய்ந்த அம்பு! என்று ஓர் அம்பைக் கொடுத்து விட்டு

"அம்பைக் கொண்டு சென்றிடுவாய்
துன்பம் தருவோரை வென்றிடலாம்!"

என்று பாடியது.



மந்திரசக்தி பெற்ற அம்பை அவன் பணிவுடன் பெற்றுக்கொண்டான். பிறகு அந்தப் பாம்பு தன் வாயில் இருந்து கொஞ்சம் விஷமும் எண்ணெயும் எடுத்தது.

இரண்டையும் நன்றாகக் குழைத்து அவன் உடலில் பூசியது. உடனே பெரிய பலசாலியாக மாறிவிட்டான்.

"அரக்கக் குரங்குகளை நானே
அடித்துக் கொள்வேன் நிச்சயம்!
காட்டில் தொலைந்த அண்ணன்களைக் கண்டு பிடிப்பேன் கட்டாயம்!"

என்று பாடினான். அப்போது பாம்பு அந்தக் குரங்குகள் உண்மையிலேயே குரங்குகள் அல்ல. இரண்டு அரக்கர்கள்தான் குரங்கு வேடத்தில் திரிகிறார்கள். குறிபார்த்து சரியாக அம்பை எய்தால் இரண்டு அரக்கர்களும் செத்து விழுவார்கள்.

நீ செல்லும் வழியில் குளக் கரையில் ஒரு தவளையை சந்திப்பாய். அந்தத் தவளை சொல்வது போல் செய்! என்றது.

அவன் வில் அம்புடன் குரங்குகளைத் தேடிச் சென்றான். வழியில் பெண் தவளையைப் பார்த்தான். அந்தத் தவளை என்னை நீ திருமணம் செய்து கொள்வாயா? என்று கேட்டது. பாம்பு எவ்வளவு சரியாகச் சொல்லி இருக்கிறது. தவளையைத் திருமணம் செய்து கொள்வோம். அது நன்மை தரும் என்று நினைத்த அவன் ஒரு மலர்க் கொடியைச் சூட்டி தவளையை திருமணம் செய்து கொண்டான். தவளையும் அவனும் காட்டு வழியே நடந்தார்கள். தூரத்தில் ஒரு பெரிய மரம் இருந்தது. அதன் பொந்தும் மிகப்பெரிதாக இருந்தது. பொந்துக்குள் தெரிந்தன குரங்குகளின் தலைகள். உடனே தவளை சொன்னது:

"தலைகள் தெரியுது அஞ்சாதே!
அம்பு தொடுப்பாய் தயங்காதே!"

அவன் அம்பு எய்தான். அது சரியாக ஒரு குரங்கின் நெற்றியில் பதிந்தது. உடனே இரண்டு குரங்குகளும் இறங்கி ஓடின.

அவன் மீண்டும் அம்பு எய்தான். குரங்குகளின் மேற்தோல் கழன்று விழுந்தன. குரங்குத் தோலிலிருந்த அரக்கர்கள் மடிந்தார்கள்.

அரக்கர்களிடமிருந்து கழன்று விழுந்த குரங்குத்தோலை எடுத்தான் தம்பி. அதை ஒரு கொடி போலக் கம்பில் கட்டி உயர்த்திக் கொண்டு ஆடினான்.

"வென்றேனே நான் வென்றேனே
அரக்கக் குரங்குகளை வென்றேனே!"

பிறகு தவளையும் அவனும் காட்டுக்குள் தொலைந்த அண்ணன்களைத் தேடிப்புறப்பட்டார்கள். ஓர் இடத்தில் அவர்களைக் கண்டு பிடித்தார்கள். தம்பியை அணைத்துக் கொண்ட அண்ணன்கள் தம்பி உனது பணிவுதான் உனக்கு வெற்றியைக் கொடுத்து இருக்கிறது. வீரமிருந்தும் எங்கள் ஆணவமே தோல்வியை கொடுத்தது என்றார்கள்.

பிறகு அவர்கள் வீட்டை அடைந்தார்கள். வீட்டுப்படியில் கால் வைத்ததும் அந்தத் தவளை அழகான இளவரசியாக மாறியது. ஒரு சாபத்தின் காரணமாக நான் தவளையாக மாறிக் குளத்தில் வாழ்ந்தேன். உனது கருணையால் சாபத்தில் இருந்து விடுபட்டு விட்டேன். இனி நாம் மகிழ்ச்சியாக வாழலாம்! என்றாள். பழைய வீடு இருந்த இடத்தில் அழகான அரண்மனையைக் கட்டி அவர்கள் நெடுங்காலம் வாழ்ந்தார்கள்.

## 06.2015 10 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1190 - மூன்றாவது சிலுவைப் போர்: புனித உரோமப் பேரரசன் முதலாம் பிரெடெரிக் ஜெருசலேம் நகரை நோக்கிய படையெடுப்பின்போது சாலி ஆற்றில் மூழ்கி இறந்தான்.
- 1801 - சிவகங்கையின் சின்னமருது "ஆங்கிலேயர்களின் அதிகாரத்தை உதறித்தள்ளி சுதேசி மன்னர்களின் கீழ் ஜம்புத்தீவின் மக்கள் வாழ வேண்டும்" என்ற தனது சுதந்திரப் பிரகடனத்தை திருச்சியில் வெளியிட்டார்.
- 1846 - கலிபோர்னிய குடியரசு மெக்சிக்கோவிலிருந்து விடுதலையை அறிவித்தது.
- 1898 - அமெரிக்கக் கடற்படையினர் கியூபா தீவில் தரையிறங்கினர்.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியப் படையிடம் நோர்வே வீழ்ந்தது.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: பிரித்தானியா மற்றும் பிரான்சுக்கு எதிராக இத்தாலி போரை அறிவித்தது.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியப் படைகள் ஆங்கிலக் கால்வாயை அடைந்தன.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: இத்தாலிக்கு எதிராக கனடா போரை அறிவித்தது.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: நோர்வே ஜேர்மனியர்களிடம் சரணடைந்தது.
- 1945 - ஆஸ்திரேலியப் படைகள் புரூணையை விடுவிப்பதற்காக அங்கு தரையிறங்கினர்.
- 1967 - இஸ்ரேலும் சிரியாவும் போர் நிறுத்த உடன்பாட்டிற்கு வந்ததில் ஆறு நாள் போர் முடிவுக்கு வந்தது.
- 1986 - யாழ்ப்பாணம், மண்டைதீவில் குருநகரைச் சேர்ந்த 31 மீனவர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1996 - வடக்கு அயர்லாந்தில் சின் ஃபெயின் பங்குபற்றாத நிலையில் அமைதிப் பேச்சுக்கள் ஆரம்பமாகின.
- 1999 - கொசோவோவில் இருந்து சேர்பியப் படையினர் விலக எடுத்துக்கொண்ட முடிவை அடுத்து நேட்டோ தனது தாக்குதல்களை நிறுத்தியது.
- 2003 - நாசாவின் ஸ்பிரிட் தளவுளவி செவ்வாய்க் கோளை நோக்கி ஏவப்பட்டது.

**பிறப்புகள்**

- 1925 - வே. தில்லைநாயகம், தமிழக நூலகத்துறையின் முன்னோடி
- 1971 - பாபி ஜிண்டல், அமெரிக்கா, லூசியானாவின் ஆளுநர்

**இறப்புகள்**

- 1836 - அன்ட்ரே-மரீ அம்பியர், பிரெஞ்சு இயற்பியலாளர் (பி. 1775)
- 2004 - ரே சார்ல்ஸ், அமெரிக்க இசைக்கலைஞர் (பி. 1930)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்

## வாழ்க்கை வரலாறு



151

...'கதையின் கதை

'சந்திரமுகி' படத்தின் கதை உருவானதிலும், அது படமானதிலும், அதை வாசு டைரக்ட் செய்ததிலும் பெரிய கதையே அடங்கியிருக்கிறது.

அதுபற்றி வாசு கூறியதாவது:-

'சிவாஜி பிலிம்சுக்காக ரஜினி சாரை ஏற்கனவே 'மன்னன்' படத்திற்காக இயக்கினேன். அது வெள்ளி விழா படமாக அமைந்தது. அதே சிவாஜி பிலிம்சுக்காக மீண்டும் ரஜினியை இயக்க வாய்ப்பு கிடைத்தபோது, அளவிட முடியாத மகிழ்ச்சி ஏற்பட்டது.

'மன்னன்' படத்தில் ரஜினி சாரை இயக்கிய பிறகு, எந்தக் கதையென்றாலும் அதை என்னுடன் பகிர்ந்து கொள்வார். அடுத்து வந்த 'அண்ணாமலை', 'பாட்ஷா', 'படையப்பா' படங்களின் கதைவரை, என்னிடம் சொல்லி எனது கருத்துக்களையும் கேட்டுக் கொள்வார்.

கதைகளை காட்சி ரீதியாக அவர் சொல்லும் போதே படம் பார்த்த 'பீலிங்' ஏற்பட்டுவிடும். இந்த கதைப் பட்டியலில் 'பாபா' படத்தின் கதை பற்றி மட்டும் என்னிடம் அவர் பேசவில்லை. கதை பற்றிய எனது கருத்துக்களை கூறும்போது அதை தனது கையில் இருக்கும் குறிப்பேட்டில் எழுதிக்கொள்வார்.

அது மாதிரி படம் முடிந்து 'பிரிவியூ' காட்சி பார்க்கவும் என்னை அழைப்பார். படம் பார்த்து முடிந்ததும் படம் பற்றி எதுவும் சொல்லாமல் போனால்கூட, அவரே வீட்டுக்கு போன் பண்ணி விடுவார். பொதுவாகவே, மனதில் பட்டதை பளிச்சென்று சொல்லி விடுபவர்களிடம் அவருக்கு பிரியமும் அதிகம். நம்பிக்கையும் அதிகம். இப்படி அவரது நம்பிக்கைக்குரிய இடத்தில் நானும் இருந்தேன் என்பதில் இன்றளவும் எனக்குப் பெருமை.

விமானத்தில் சந்திப்பு

'பாபா' படம் வெளியான பிறகு, புதிய படம் எதையும் ரஜினி ஒப்புக்கொள்ளாமல் இருந்த நேரம். விமானத்தில் நாங்கள் தற்செயலாக சந்தித்துக் கொண்டோம். அப்போது நான் கன்னடத்தில் 'ஆப்த மித்ரா' என்ற படத்தை இயக்கிக் கொண்டிருந்தேன். படப்பிடிப்பை முடித்துவிட்டு, பெங்களூரிலிருந்து சென்னைக்கு விமானத்தில் வந்துகொண்டிருந்த போது, அதே விமானத்தில் ரஜினி சாரும் வர, நலம் விசாரித்துக் கொண்டோம்.

பிறகு அவரிடம், 'என்ன சார்! புதிய படம் பற்றி எந்த அறிவிப்பும் வரவில்லையே?' என்று கேட்டேன்.

அதற்கு அவர், 'பாட்ஷா', 'படையப்பா' படத்துக்குப்பிறகு இனிமே புதுசா என்ன படம் பண்ணிட முடியும்? அதிருக்கட்டும். நீங்க இப்ப என்ன படம் பண்றீங்க? என்று கேட்டார்.

நான் அவரிடம், கன்னட நடிகர் விஷ்ணு வர்த்தனை வைத்து 'ஆப்த மித்ரா' என்ற கன்னடப் படத்தை இயக்கி வருவது பற்றி தெரிவித்தேன். அப்போதும்கூட கதை பற்றி அவரிடம் சொல்லவில்லை.

மலையாளத்தில் மோகன்லால் நடிப்பில் பெரிய வெற்றி பெற்ற 'மணிச்சித்ரதாழ்' படம்தான், எனக்கு 'ஆப்த மித்ரா' கன்னடப் படத்துக்கு இன்ஸ்பிரேஷன்.

அந்தப் படத்தின் கருவை மட்டும் எடுத்துக்கொண்டு புதிய கேரக்டர்கள் வடிவமைப்புடன் 'ஆப்த மித்ரா'வை உருவாக்கினேன்.

(தொடரும்)

# கருவாச்சி காவியம்

## வைரமுத்து-160



...கூத சொல்றதையும் காது குடையறதையும் ஒரே நேரத்துல நிறுத்துனா திம்சு.

இந்தக் கதைய ஏன் எனக்குச் சொல்றவ?

அந்தக் கெழவனுக்கு ஒரு காரீயமாவது இருந்திச்சு. ஒங்க கெழவனுக்கு ஒரு ஒட்டுக்கோமணமாச்சும் இருக்கா?

ஏன் இந்த வீடும் காடும் இல்லையே?

ஆமாம் இந்த வெளங்காத வீடும் வெளையாத காடும் உப்புக் கல்லுக்கு ஆகுமா? ஏதோ ஒன் தாட்டியத்துல ஓடிக்கிருக்கு வண்டி. நீ வட்டிவாசிக்குக் குடுத்து வாங்குற காசிலதான மாமன் மஞ்சக் குளிச்சுக்கிட்டுருக்கு.

என்னடி சொல்ற?

வைத்தியம் பண்ண- வாங்கித் தின்னன்னு வார காசெல்லாம் கெழவனுக்கே போயிட்டா நாளப்பின்ன நம்மளுக்குன்னு என்ன இருக்கு? நாளக்கி நீயும் விழுந்திட்டன்னு வச்சுக்க, ஒன்னையும் நாந்தான் தூக்கிச் சுமக்கணும்? எம் முந்தானையில முடிஞ்சு வைக்க என்ன இருக்கு என் புருசனத் தவிர?

இப்படி எத்தனையோ தடவ எறும்பா ஊரி ஊரி அந்தக் கல்லத் தேய்ச்சிட்டா.

தானியம் வித்த பணத்தையும் வட்டி வாசிக்கு வார காசையும் பொண்டாட்டி பொறுப்புல விட்டுட்டான் கட்டையன்.

போகப் போகத் தகப்பனுக்கும் மகனுக்கும் பேச்சு வார்த்தை இல்லாமப் பிரிச்சேபுட்டா திம்சு.

ஒரு கோட்டைச் சுவர் இருக்கு. எங்கிருந்தோ ஒரு பறவை பறந்து வந்து அதுல உக்காருது. எச்சமிடுது. அதுலருந்து ஒரு வெத விழுகுது. விழுந்த வெத மொளைக்குது. அது வேர்விட வேர்விட விரிசல் கண்டு போகுது சுவரு.

தெரியாமச் செய்யுது பறவை;

தெரிஞ்சே செய்றா திம்சு.

அம்புலிப்புத்தூர விட்டு அழகுசிங்கத்த மீட்டு வந்தனைக்கிருந்து கண்ணுல ஒறக்கம் தங்கல கருவாச்சிக்கு. நெஞ்சாங்கூட்ல கத்தி குத்தி முதுகுப்பக்கம் முள்ளு த்தச்ச கதையாகிப்போச்சு கருவாச்சி கதை.



அழகுசிங்கத்த நெனச்சா [illegible] இப்படி எச்சி எல மேயப்போயி எதிரிகள விலாவுல குத்தி விழுத்தாட்டிட்டுக் கொம்புல குடல் மால சுத்தி வரவேண்டிய என் வீட்டுக் காரிக்காள, ஈனப்பட்டு நிக்குதே... இது நெஞ்சாங்கூட்டுல பாஞ்சு நட்டுக்குத்தலா நிக்கிற கத்தி.

யாருக்கும் தெரியாமக் காசு குடுத்து அவனத் தேவடியா வீட்டுக்கு ஏவி விட்ருக்காளே ஒரு எழவெடுத்த சிறுக்கி... அது முதுகுல குத்தி முனையொடிஞ்சு நிக்கிற முள்ளு.

ஏதோ லவுக்க போட்லம்பாடி பொழச்சுப் போகட்டும்ன்னு கண்டுங்காணாம இருந்த கருவாச்சி இப்பப் பளிச்சின்னு முழுச்சுக்கிட்டா.

இவ யாரு? எந்தக் காட்டுச் சிறுக்கி? ஒழுங்கு மொறையான பொம்பளதானா?

ஒண்டவந்த பிடாரியா?

மேட்டு நெலத்துல நட்டவனும் கெட்டான்; மேனாமினுக்கியக் கட்டுனவனும் கெட்டான்னு சொல்லுவாகளே... இவ நல்ல சிறுக்கியா? மேனா மினுக்கியா?

இவளக் கண் கொத்திப் பாம்பு மாதிரி கவனிச்சே ஆகணும்ன்னு பொட்டுல பொறி தட்டுது கருவாச்சிக்கு.

நான் பொத்தி வளத்த மகனக் காப்பாத்தணுமே இந்தப் பொட்ட நரி கடிக்காம.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## கடுகு/ ஜயவி



Botanical Name:Brassica alba / nigra
Family:Cruciferae
Engl: Mustard
Sinh:Aba

இதுவும் யாழ்ப்பாண மூலிகை அல்லாவிடினும் பொதுவாக யாழ்ப்பாணப் பிரதேச மக்களால் பயன்படுத்தப்படும் உலர் சரக்காகும். இது 2 அடி உயரம் வரை வளரும் சிறுசெடியாகும். அடியில் கிழங்கு இருக்கும். மேல் தண்டு முழுவதும் நுண்ணிய மயிர் நிறைந்திருக்கும். ஓராண்டுச் செடியாகும். சிறகாக பிளவுபட்ட கூட்டு இலை முழுவதும் சிறுமயிர் அடர்ந்திருக்கும். சிற்றிலைகள் முட்டைவடிவானவை. மஞ்சள் நிறமலர்கள் நுனிவளர் பூங்கொத்தில் உண்டாகும். மலர்கள் மஞ்சள் நிறமானது. இதன் கனியில் உண்டாகும் விதைகள் வெள்ளை அல்லது கருமை நிறமானவை. இவை வெண்கடுகு, கருங்கடுகு என அழைக்கப்படும். இது ஒரு நல்ல மருத்துவப் பொருளாகும். இதிலிருந்து கடுகு எண்ணெயும் எடுக்கப்படுகிறது.

கடுகிலிருந்து எடுக்கப்படும் கடுகு எண்ணெயானது மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகிறது. இது கபத்தையும் வாதத்தையும் கண்டிக்கும். வெப்பவீரியமுள்ளது.

ஏதாவது விஷப்பொருளை அருந்தியவர்க்கு கடுகை அரைத்து நீரில் கலக்கி குடிக்கச் செய்யவேண்டும். இதனால் வாந்தி உண்டாகும்.

கை கால்களில் ஏற்படும் வலிக்கு கடுகை அம்மியில் வைத்து மைபோல அரைத்து இரும்புக் கரண்டியில் போட்டு நன்றாக கொதிக்க வைத்து வலியுள்ள இடத்தில் பற்றுப் போட்டால் வலி நீங்கும்.

குறிப்பு: வலியுள்ள இடத்தில் மட்டுமே பூசவேண்டும். வலி இல்லாத பாகத்தில் பற்றுப்போட்டால் அப்பாகம் வெந்துவிடும்.

கீல்வாதங்களுக்கும் சிறிது கடுகை மைபோல அரைத்து பற்றுப் போடலாம். இதனாலும் வலி நீங்கும்.

கடுகை 2 கிராம் அரைத்து உள்ளுக்குக் கொடுத்தால் வாந்தி ஏற்படும். தற்கொலை எண்ணத்திலோ அல்லது தெரியாமலோ விஷம் குடித்து உயிருக்குப் போராடுபவர்களுக்கு கொடுத்தால் காப்பாற்றிவிடலாம்.

கடுகை விழுதாக அரைத்து வெள்ளைத்துணியில் தடவி கொண்டைக்காய் சதையில் பற்றுப் போட்டால் காய்ச்சலால் உண்டாகும் உடல்சோர்வு நீங்கும்.

கடுகுப்பொடி செய்து தொண்டையில் பற்றுப்போட்டால் தொண்டை வலி குணமாகும்.

கடுகு 30 கிராம், கோதுமை 100 கிராம், கஸ்தூரி மஞ்சள் 100 கிராம் மூன்றையும் அரைத்து முட்டையின் வெள்ளைக்கருவில் கலந்து மூட்டுக்களில் பற்றுப்போட்டால் எப்படிப்பட்ட மூட்டுவலியும் குணமாகும்.

கடுகை (20 எண்ணிக்கை) தேன் சேர்த்து அரைத்துக்கொடுத்தால் மூச்சிரைப்பு இருமல் குணமாகும்.

கடுகை நீரில் ஊறவைத்து முளைக்க வைத்து பிறகு அதை அரைத்துத் தலையில் தேய்த்துக் குளித்தால் நாட்பட்ட தலைவலி குணமாகும்.

கடுகு, உப்பு, மிளகு தலா இரண்டு கிராம் எடுத்து அரைத்து வெந்நீரில் கலந்து தினமும் குடித்தால் வாத, பித்த, கபதோஷங்கள் அனைத்துத் நீங்கும்.

கடுகை இரவு முழுவதும் ஊற வைத்து அந்தத் தண்ணீரை அதிகாலையில் குடித்துவந்தால் நாட்பட்ட விக்கல் குணமாகும்.

கடுகைத்தேவையான அளவு எடுத்து அரைத்து தொப்புளில் இலேசாக பற்றுப்போட்டால் நீர்க்கடுப்பு குறையும்.

### கடுகுக்கீரை

கடுகு விதைகளை மட்டுமன்றி இத்தாவரத்தின் இலைகளை கூட மூலிகையாக பயன்படுத்தலாம். இதன் விதைகளை நல்ல மண்வளமும் நீர்வசதியும் கொண்ட இடத்தில் முளைக்க விட்டு இச்செடியை வளர்த்து இலைகளைக் கீரையாகப் பயன்படுத்தலாம்.

கடுகுக்கீரையை அடிக்கடி சமைத்துச்சாப்பிட்டு வந்தால் ஜீரணக் கோளாறுகள் குணமாகும்.

கடுகுக் கீரையுடன் ஓமம் மஞ்சள் சேர்த்து கசாயம் காய்ச்சிக் குடித்தால் வயிற்றுப்பொருமல் குணமாகும்.

கடுகுக் கீரையில் சூப் வைத்துக் குடித்தால் வயிறு மந்தம் சரியாகும்.

கடுகுக் கீரையை அரைத்து நல்லெண்ணெயுடன் சேர்த்து தைலமாகக் காய்ச்சி கை, கால்களில் பூசிக் கொண்டால் மூட்டு வலி குணமாகும்.

கடுகுக்கீரையை தேங்காய் எண்ணெயுடன் சேர்த்து தைலமாகக் காய்ச்சி தலையில் தேய்த்துக் கொண்டால் தலைமுடி கருமையாக வளரும்.

**100 கிராம் கடுகு இலையில் உள்ள சத்துக்கள்**

ஈரலிப்பு 89.8 கிராம்
சக்தி 34 கிலோ கலோரி
புரதம் 4 கிராம்
கொழுப்பு 0.6 கிராம்
காபோவைதரேற்று 3.2 கிராம்
கல்சியம் 155 மில்லி கிராம்
பொஸ்பரஸ் 26 மில்லி கிராம்
இரும்பு 16.3 மில்லி கிராம்
βகரோட்டீன் 262 மைக்ரோ கிராம்
தயமின் 30 மைக்ரோகிராம்
உயிர்ச்சத்து C 33 மில்லிகிராம்
நார்ச்சத்து 0.8 கிராம்.

மேற்படி போசணைப் பெறுமானம் நிறைந்த கடுகு கீரையை பயன்படுத்துவதால் ஜீரண உறுப்புக்கள் பலப்படும்.

**100 கிராம் கடுகிலுள்ள சத்துக்கள்**

ஈரலிப்பு 8.5கிராம்
சக்தி 541 கிலோ கலோரி
புரதம் 20 கிராம்
கொழுப்பு 39.7கிராம்
காபோவைதரேற்று 23.8கிராம்
கல்சியம் 490 மில்லி கிராம்
பொஸ்பரஸ் 700 மில்லி கிராம்
இரும்பு 17.9 மில்லி கிராம்
βகரோட்டீன் 162 மைக்ரோ கிராம்
தயமின் 650 மைக்ரோகிராம்
ரைபோபிளேவின் 260 மைக்ரோ கிராம்
நியாசின் 4.0 மில்லி கிராம்
நார்ச்சத்து 1.8 கிராம்

டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

# ஐ.தே.கவின் புதிய தேர்தல் முறைமையினால் சிறுபான்மை சிறுகட்சிகளுக்கு பெரும் பாதிப்பு

அமைச்சரவையில் நேற்று முன்தினம் அங்கீகாரம் பெறப்பட்ட 20 ஆவது திருத்தச் சட்டத்திற்கான புதிய தேர்தல் முறை தொடர்பில் சிவில் அமைப்புகள், தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் கருத்து வெளியிட்டுள்ளன.

20 ஆவது திருத்தச் சட்டத்திற்கு அமைச்சரவை அனுமதி கிடைத்தமை மகிழ்ச்சி அளிக்கின்ற போதும் பாராளுமன்ற உறுப்பினர் தொகையை அதிகரிக்காது உள்ளமை சிறுகட்சிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் (கபே) தெரிவித்துள்ளது.

சிறுகட்சிகளுக்கு நியாயம் கிடைக்க வேண்டுமாயின் கட்டாயம் பாராளுமன்றில் உறுப்பினர்கள் எண்ணிக்கை உயர்த்தப்பட வேண்டும் என கபே இயக்கம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் கபே இயக்கத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன் விடுத்துள்ள அறிக்கையில்,

20 ஆவது திருத்தச் சட்டத்திற்கு அமைச்சரவை அனுமதி கிடைத்ததை வரவேற்கிறோம். ஆனால் பாராளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை 225ஆக வைத்துள்ளமை மற்றும் தொகுதிகளை 125 ஆக குறைத்துள்ளமை சிறுகட்சிகள் மற்றும் சிறுபான்மை கட்சிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும். முஸ்லிம் கட்சிகள், இந்திய வம்சாவளி மலையக கட்சிகள், மக்கள் விடுதலை முன்னணி மற்றும் ஹெல உறுமய போன்ற கட்சிகளுக்கு இது பாரிய பாதிப்பை ஏற்படுத்தும்.

தொகுதிவாரி மற்றும் விகிதாசார முறையில் கலப்பு தேர்தல் முறைமை ஒன்றை அறிமுகம் செய்ய அமைச்சரவை அனுமதி கிடைத்தமை இலங்கை அரசியல் கலாசாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும் முதல் படியாகும். ஆனால் நாட்டின் அனைத்து மக்களுக்கும் பிரதிநிதித்துவத்தில் நியாயம் வழங்க 225 பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற திட்டம் எண்ணிக்கை போதாது. தேர்தல் திருத்தத்திற்கு முதலாவதாக கொண்டு வரப்பட்ட யோசனையில் கூட பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை 234,235 ஆக உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கையை அதிகரிக்காமல் சிறு கட்சிகள், சிறுபான்மை கட்சிகள் மற்றும் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க முடியாது. ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்வைத்துள்ள 125 தொகுதிகள் அடங்கிய 225 உறுப்பினர்களைக் கொண்ட தேர்தல் முறையில் பிரதான மூன்று பிரச்சினைகள் உள்ளன.

01. தற்போதுள்ள தொகுதிகளை 125 தொகுதிகளாக மட்டுப்படுத்துவதற்கு கூடிய காலம் எடுக்கும்.

02. சிறுபான்மை கட்சிகளின் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்யவென போதியளவு பல் அங்கத்தவர் தொகுதி இல்லாமை

03. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிங்கள பிரதிநிதித்துவம் (வவுனியா, சேருவில, அம்பாறை) மற்றும் தமிழ், முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை அனைத்து தொகுதிகளிலும் உறுதி செய்து கொள்ள முடியாமை.

தேர்தல் நிர்வாகத்தின் படி 1970களில் அறிமுகம் செய்யப்பட்ட 160 தொகுதிகளில் 168 உறுப்பினர்கள் தெரிவு செய்யும் முறை தற்போதும் இருந்து வருகிறது.

காலனித்துவத்தில் இருந்து செய்யப்பட்ட ஒவ்வொரு எல்லை நிர்ணயத்தின் போது இலங்கையில் தொகுதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது. நேற்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட யோசனையின் மூலம் 160 தொகுதிகளை 115-118 ஆக குறைக்க வேண்டும். (குறைந்தது 9 பல் அங்கத்தவர் தொகுதியேனும் இருக்க வேண்டும்)

சரியாகச் சொல்வதாயின் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் தங்களது தொகுதி அமைப்பாளர்களை 40-45 வரை குறைக்க நேரிடும். மாவட்ட அடிப்படையில் பதுளையில் உள்ள 9 தொகுதிகள் 6 தொகுதிகளாக குறைக்கப்படும். காலியில் 3 தொகுதிகள், மாத்தறையில் இரண்டு தொகுதிகள், குருநாகலில் 3 அல்லது 4 தொகுதிகளை குறைக்க நேரிடும். கேகாலை, இரத்தினபுரி, அநுராதபுரம் மற்றும் களுத்துறை மாவட்டங்களில் 2-4 தொகுதிகள் வரை குறைக்க வேண்டி வரும். யாழ்ப்பாணத்தில் உள்ள 11 தொகுதிகளை 5 அல்லது 6ஆக குறைக்க நேரிடும். நாட்டில் உள்ள தொகுதிகளை 10 அல்லது 15 வரை குறைத்தால் பிரச்சினை இல்லை. ஆனால் ஒரே நேரத்தில் 35 தொகுதிகளை குறைப்பது ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலை அல்ல.

அமைச்சரவையில் அனுமதி அளிக்கப்பட்ட புதிய தேர்தல் முறைமை தொடர்பில் மக்கள் நலன்சார்ந்து செயற்பட வேண்டியது அனைத்து கட்சிகள், சிவில் அமைப்புக்கள், பிரஜைகளின் பொறுப்பாகும்.

இல்லையேல் புதிய தேர்தல் முறையை பாராளுமன்றில் நிறைவேற்ற முடியாது போவதோடு, பழைய ஜனநாயகமற்ற தேர்தல் முறைமையே கடைப்பிடிக்க வேண்டி வரும். சா/த சித்தியடையாத 94 உறுப்பினர்கள், உ/த சித்தியடையாத 142 உறுப்பினர்கள் கொண்ட 5% மகளிர் அற்ற பாராளுமன்றை மீண்டும் உருவாகுவதை தடுக்க அமைச்சரவை யோசனை மாற்றியமைக்கப்பட வேண்டும் என கபே இயக்கம் வலியுறுத்தியுள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்கத்தின் பின்னணியில் பிரிவினைவாதம் செயற்படுகிறது

மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு) நல்லாட்சி மற்றும் நல்லிணக்கத்தின் பின்னணியில் பிரிவினைவாதமே செயற்பட்டு வருவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



சமாதானம், வெள்ளைத் தாமரை, செங்கல்லுடன் செங்கல் போன்ற பல்வேறு வசனங்களைப் பயன்படுத்தி நாட்டு மக்களின் உரிமைகளை இல்லாமல் செய்த தரப்பினர், நல்லிணக்கம் நல்லாட்சி என்ற பெயரில் நாட்டை பிளவுபடுத்த முயற்சிக்கின்றனர்.

அன்று சீ.வி. குணரட்ன போன்ற அரசியல்வாதிகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதல்களினால் கொல்லப்பட்டனர்.

எனது ஆட்சியின் கீழ் புலிகளிடமிருந்து விடுதலை பெற்றுக் கொடுத்தேன்.

இந்த சுதந்திரம் காரணமாக கொழும்பில் சுதந்திரமாக அரசியல் நடத்தக்கூடிய சந்தர்ப்பம் நமக்கு கிடைத்துள்ளது. கடைக்குச் சென்று ஒரு சோடி சப்பாத்தைத் தெரிவு செய்து, எனது அரசாங்கத்தினால் அலங்காரம் செய்யப்பட்ட கொழும்பு நகரில் சுற்றித் திரிய அவகாசம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு சுதந்திரமாக சுற்றித் திரியும் போது சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்த நான் உள்ளிட்டவர்களை சிறையில் அடைக்க முயற்சிக்கப்படுகின்றது என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தெஹிவளை கல்கிஸ்ஸ நகரசபை பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமரர் சீ.வி.குணரட்ன நினைவு நிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.(இ-5)

## நாமல் கூறுவது முழுப்பொய் பொலிஸ் ஊடகப் பேச்சாளர்

தன்னை எதிர்வரும் 12 ஆம் திகதி காலை 9 மணிக்கு குற்றப்புலனாய்வு பிரிவில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

தனது டுவிட்டர் கணக்கில் இதனை பதிவு செய்த நாமல் ராஜபக்ஷ இது தொடர்பான அறிவித்தல் கடிதம் நேற்று முன்தினம் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும், எனினும் அழைப்பு விடுவிக்கப்பட்ட போதிலும் காரணம் எதுவும் குறிப்பிடப்படவில்லை என அவர் தெரிவித்தார்.

எபபடியிருப்பினும், நாமல் ராஜபக்ஷவுக்கு இவ்வாறு எவ்வித அழைப்புகளையும் வடுக்கவில்லை என பொலிஸ ஊடக பேச்சாளர் தெரிவித் தார்.


நாமல் ராஜபக்ஷ தனது டுவிட்டர் கணக்கு ஊடாக பொய்யான பிரசாரங்களை மேற்கொளளும் நோக்கில் போலியான தகவல்களை பதிவு செய்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.(இ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 60 | 100 | 80 | 70 | 70 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 110 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 120 | 140 | 50 | 140 | 80 | 100 |
| தக்காளி | 60 | 100 | 90 | 80 | 90 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 60 | 60 | 50 | 50 |
| கோவா | 140 | 120 | 90 | 120 | 100 | 100 |
| கரட் | 250 | 180 | 150 | 200 | 220 | 150 |
| பூசணி | 30 | 40 | 40 | 40 | 30 | 40 |
| புடோல் | 120 | 110 | 80 | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 30 | 60 | 40 | 40 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 160 | 130 | 150 | 140 | 80 | 100 |
| பெரிய வெங்காயம் | 120 | 100 | 100 | 100 | 90 | 120 |
| பாகற்காய் | 200 | 130 | 140 | 120 | 140 | 160 |
| வெண்டிக்காய் | 150 | 140 | 80 | 120 | 60 | 130 |
| கருணைக் கிழங்கு | 120 | 80 | 100 | 120 | 90 | 100 |
| பயற்றங்காய் | 140 | 150 | 120 | 100 | 100 | 120 |
| லீக்ஸ் | 200 | 160 | 150 | 200 | 160 | 160 |
| பீற்றூட் | 120 | 150 | 110 | 140 | — | 80 |
| கறிமிளகாய் | 200 | 200 | 120 | 160 | 100 | 80 |
| முருங்கைக்காய் | 200 | 550 | — | 300 | 250 | 300 |
| போஞ்சி | 200 | 180 | 200 | 200 | 180 | 160 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 | 80 | 60 | — | 60 |
| கீரை - 1 பிடி | 40 | 30 | 25 | 30 | 40 | 30 |
| தேசிக்காய் | 160 | 120 | 100 | 140 | 160 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 40 | 40-50 | 60 | 50 |
| இராசவள்ளி | 200 | 140 | — | 150 | 140 | 120 |
| வெங்காயப்பூ | — | — | — | — | 240 | — |
| முள்ளங்கி | 120 | 80 | 40 | 120 | 120 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 30 | 20 | 30 | 30 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 | 10 | 20 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 397

மிது மிதுலா





வேந்தன் பெருமாள்





கமல் நந்தினி




ரவி ராஜா




சுயன் மகேந்திரன்





சந்திரா தங்கராசா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் மரண தண்டனை!



மரணதண்டனை குறித்த விவாதங்கள் இலங்கையில் மீண்டும் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளன. இதற்கு, சர்வதேச புகையிலை எதிர்ப்பு தின நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிகழ்த்திய உரை மட்டும் காரணம் அல்ல, புங்குடுதீவில் வித்தியா என்ற மாணவிக்கு நிகழ்த்தப்பட்ட கொடூரமும் கூட ஒரு காரணம் தான்.

கொடூரமான குற்றச்செயல்களுக்கு மரணதண்டனை விதிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்னெப்போதும் இல்லாதளவுக்கு இலங்கையில் இப்போது வலியுறுத்தப்பட்டு வருகிறது. இதற்குக் காரணம் நாட்டில் அதிகரித்துள்ள குற்றச் செயல்கள்தான் என்பதில் சந்தேகமில்லை.

குற்றச்செயல்களின் கொடூரத்தன்மையும், அவற்றின் பாதிப்புகளும், கடுமையான தண்டனைகள் விதிக்கப்படுவதன்மூலம், இவற்றைக் குறைக்கலாம் என்ற ஆதங்கத்தை பெரும்பாலானோரிடம் ஏற்படுத்தியிருக்கிறது.

இலங்கையைப் பொறுத்தவரையில், கடந்த நான்கு தசாப்தங்களாக மரணதண்டனை எவருக்கும் நிறைவேற்றப்படவில்லை. இலங்கையின் குற்றவியல் சட்டத்தின்படி, நீதிமன்றங்கள் மரணதண்டனையை விதிக்கின்ற போதிலும், அவை நடைமுறைப்படுத்தப்படுவதில்லை.

கடைசியாக 1976 ஆம் ஆண்டே இலங்கையில் மரணதண்டனை நிறைவேற்றப்படடது. அதற்குப் பின்னர், மரணதண்டனை பெற்றவர்கள், ஆயுட்காலம் முழுவதையும் சிறையில் கழிக்கும் நடைமுறையே இருந்து வருகிறது. அதிகபட்சமான குற்றங்களுக்கே மரணதண்டனை விதிக்கப்படுகிறது.

பல்வேறு நாடுகள் மரணதண்டனையை சட்டத்திலிருந்து நீக்காவிடினும், நீதிமன்றங்கள் மரண தண்டனையை கொடுப்பதை முடிந்தவரை தவிர்த்து வருகின்றன. எனினும், இலங்கையில் நீதிமன்றங்களால் மரணதண்டனை விதிக்கப்படும் சம்பவங்கள் அதிகமாகவே இடம்பெறுகின்றன.

மிக சமீபத்தில், தனது மேலதிகாரியான இராணுவ கப்டன் ஒருவரை பலாலி படைத்தளத்துக்குள் வைத்து சுட்டுக்கொன்ற லெப்டினனட் தர அதிகாரிக்கு யாழ்ப்பாண மேல் நீதிமன்றம் மரணதண்டனை விதித்து தீர்ப்பளித்திருந்தது.

இதுபோன்ற பல தீர்ப்புகள் அண்மைக் காலங்களில் நீதிமன்றங்களால் வெளியிடப்பட்டுள்ளன. இலங்கையில் மரணதண்டனை நிறைவேற்றப்படுவதில்லை என்பதால், இந்த தண்டனையை ஒழிக்க வேண்டும் என்ற பிரசாரங்கள், ஏனைய நாடுகளில் இடம்பெறுவதைப் போன்று அவ்வளவாக சூடுபிடித்திருக்கவில்லை.

எனினும், தற்போது மரணதண்டனையை நடைமுறைப்படுத்துவதற்கு ஆதரவாக குரல்கள் எழுந்துள்ளதைப் போலவே, அவ்வப்போது அதற்கெதிரான குரல்களும் இலங்கையில் எழுந்திருக்கின்றன.

சவூதி அரேபியாவில் கொலைக்குற்றம் சாட்டப்பட்ட ரிஸானா சிரச்சேதம் செய்யப்பட்ட போது, மரணதண்டனை ஒழிக்கப்பட வேண்டும் என்று இலங்கை மக்களிடையே பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டது.

அதுபோலவே, ராஜீவ்காந்தி கொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட சாந்தன், பேரறிவாளன், முருகன் ஆகியோரின் கருணை மனுக்கள் நிராகரிக்கப்பட்டதையடுத்து, தண்டனை நிறைவேற்ற நாள் குறிக்கப்பட்ட போது, அதற்கெதிராக கடுமையான குரல்கள் எழுந்தன.

மரணதண்டனை ஒழிக்கப்பட வேண்டும் என்றும், அத்தகையதொரு தண்டனை முறையே உலகில் இல்லாமல் ஒழிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

ஊடகங்களில் அதுபற்றிய பிரசாரங்கள் தீவிரமாக இடம்பெற்றன. மிக அண்மையில், போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டில், மயூரன் என்ற இலங்கை வம்சாவளி இளைஞருக்கு இந்தோனேஷியாவில் மரணதண்டனை நிறைவேற்றப்பட்ட போதும், கடுமையான அதிர்வலைகள் உணரப்பட்டன.

இந்த மூன்று சந்தர்ப்பங்களிலும் தண்டனையை எதிர்கொண்டவர்கள் தமிழ் பேசுவோர் என்ற உணர்வு மட்டும் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை.

ரிஸானாவுக்கும், மயூரனுக்கும் தண்டனை நிறைவேற்றப்பட்ட கொடூரமான முறையே, இந்த தண்டனைக்கு எதிரான உணர்வுகளை ஏற்படுத்தியிருந்தது.

ஆனால், அதேநேரத்தில், புங்குடுதீவில் வித்தியா என்ற மாணவி கூட்டு வன்புணர்வுக்குப் பின்னர் படுகொலை செய்யப்பட்ட கொடூரம் அரங்கேறிய போது, குற்றவாளிகளை தூக்கில் போட வேண்டும் என்ற கோஷம் மேலோங்கியது.

யாழ்ப்பாணத்திலும் ஏனைய இடங்களிலும் நடந்த போராட்டங்களின் போது, வித்தியா படுகொலைக் குற்றவாளிகளை தூக்கில் போட வேண்டும் என்று மக்கள் ஆவேசப்பட்டனர்.

ஒருசில இடங்களில் பகிரங்கமாக அவர்களைத் தூக்கிலிட வேண்டும் என்றும் இல்லாவிட்டால் தம்மிடம் ஒப்படைக்குமாறும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டன.

ரிஸானா, மயூரனின் மரணங்களின் போது, மரணதண்டனைக்கு எதிராக குரல் கொடுத்த தமிழ் மக்களைக்கூட வித்தியாவுக்கு நிகழ்ந்த கொடூரம், மரணதண்டனைக்கு ஆதரவானவர்களாக மாற்றிவிட்டது ஆச்சரியம்.

குற்றங்களின் கொடூரத்தன்மையே, சிலவேளைகளில் இத்தகைய தடுமாற்றங்களை ஏற்படுத்துகின்றன.

வித்தியா கொலையாளிகளுக்கு உச்சமான தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதில் இங்கு மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. ஆனால், அது மரணதண்டனையாகத் தான் அமைய வேண்டும் என்று எதிர்பார்த்தால், அது சிலவேளைகளில் ரிஸானா, மயூரன் மரணங்களின்போது, அனுபவித்த துயரங்கள் தொடர்வதற்கும் காரணமாகிவிடும் என்பதை மறுக்க முடியாது.

கடுமையான தண்டனைகள் குற்றங்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் அல்லது இல்லாமலே செய்துவிடும் என்ற கருத்து ஆதிகாலம் தொட்டு மனிதனிடமிருந்து வருகிறது. அதனால்தான் கொடூரமான மரணதண்டனை உள்ளிட்ட பல தண்டனை முறைகள் வகுக்கப்பட்டன.

இவற்றில் தலையை சீவுதல், கையை வெட்டுதல், கண்ணை சேதப்படுத்தி பார்வையிழக்கச் செய்தல் போன்றவை மட்டுமன்றி, வல்லுறவுக் குற்றவாளிகளின் ஆண் உறுப்பை சிதைத்தல் உள்ளிட்டவையும் அடங்கும்.

அண்மையில் வித்தியா படுகொலைக்குப் பின்னர், வடக்கில் விடுதலைப் புலிகளின் காலத்தில், இத்தகைய குற்றங்கள் நிகழ்ந்திருக்கவில்லை என்றும், நள்ளிரவில்கூட வீதியில் செல்லும் அளவுக்கு பெண்களுக்குப் பாதுகாப்பான நிலை இருந்ததாகவும் அரசாங்கத்திலிருக்கும் அரசியல்வாதிகள்கூட பெருமைப்பட்டுக் கொண்டனர்.

அவர்கள் அதைமட்டும் கூறவில்லை- புலிகளின் காலத்தில் இருந்த மரணதண்டனை போன்ற கடுமையான தண்டனை முறையினால்தான், அவ்வாறான பாதுகாப்புக் கிடைத்ததாகவும் குறிப்பிட்டனர்.

விடுதலைப் புலிகள் வன்புணர்வுக் குற்றவாளிகள் போன்றவர்களை கடுமையாக தண்டித்தனர் என்பது உண்மையே. ஆரம்ப காலங்களில் சிலர் பகிரங்கமாக பொதுமக்கள் முன்பாக சுட்டுக் கொல்லப்பட்டு தண்டிக்கப்பட்டதும் உண்மையே.

ஆனால் பின்னர் அவர்களும் மனித உரிமைச் சட்டங்களுக்கும் சர்வதேச அழுத்தங்களுக்கும் கட்டுப்பட்டு, தமது தண்டனை முறைகளில் மாற்றங்களைச் செய்தனர் என்பது பலருக்குத் தெரியாத விடயம்.

கடுமையான குற்றங்களுக்கு நீதிமன்றத்தின்மூலம் தண்டனை வழங்கும் முறையே புலிகளாலும் கடைப்பிடிக்கப்பட்டது.

வித்தியா கொலைக்குப் பின்னர், புலிகளின் காலத்தைச் சுட்டிக்காட்டி பெருமை பேசியவர்கள், இன்னொரு வகையில் அவர்களின் பகிரங்க மரணதண்டனையைத் தான் நியாயப்படுத்தினரே தவிர, நீதிமன்றங்களின்மூலம் மட்டுமே புலிகளால் பிற்காலத்தில் நீதிபரிபாலனம் செய்யப்பட்டது என்பதை வெளிப்படுத்தவில்லை.

விடுதலைப் புலிகளின் ஆரம்ப காலத்தை வைத்து, பொதுமக்கள்முன் பகிரங்கமாக மரணதண்டனை விதிக்க வேண்டும் என்ற யதார்த்தமற்ற கோரிக்கைகளை இப்போது நியாயப்படுத்த முனைந்தனர்.

கடுமையான குற்றங்களுக்கு மரண தண்டனை விதிக்க வேண்டும் என்ற கோரிக்கை வடக்கில் மட்டுமன்றி நாட்டின் ஏனைய இடங்களிலும் எழுந்திருந்த நிலையில்தான், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அந்த விவாதத்தை மேலும் சூடுபிடிக்கச் செய்திருக்கிறார்.

போதைப் பொருள் விற்பனையாளர்களுக்கு மரணதண்டனை விதிக்க வேண்டும் என்ற கருத்தை அவர் ஒரு விவாதமாக தொடக்கி வைத்திருக்கிறார். போதைப் பொருள் விற்பனையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பதற்காகவே அவர் அந்தக் கருத்தை முன்வைத்திருந்தார்.

முன்னதாக, நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவும் கடுமையான குற்றங்களை ஒழிப்பதற்கு மீண்டும் மரணதண்டனையை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற தொனிப்பட கருத்துக் கூறியிருந்தார்.

சட்டம் ஒழுங்கு அமைச்சர் ஜோன் அமரதுங்கவும் மரணதண்டனையை மீள நடைமுறைப்படுத்துவது குறித்து அரசாங்கம் பரிசீலிப்பதாக குறிப்பிட்டிருந்தார்.

அதேவேளை போதைப்பொருள் விற்பனையாளருக்கு மரணதண்டனையை விதிக்க வேண்டும் என்ற கருத்து ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்டுள்ள தருணத்தில், ஏனைய கடுமையான குற்றங்கள் குறித்து அவர் பேசவில்லை என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

போர்க்காலத்தில் இடம்பெற்ற மோசமான மீறல்கள் குறித்த விசாரணைகள் உள்நாட்டில் நடத்தப்படும் என்று வாக்குறுதி அரசாங்கத்தினால் அளிக்கப்பட்டுள்ள சூழலில், அரசாங்கம் மரணதண்டனையை போதைப்பொருள் விற்பனையாளருக்கு என்று மட்டுப்படுத்த முனைகிறதா என்ற கேள்வியும் உள்ளது.

உள்நாட்டு போர்க்குற்ற விசாரணையில் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால், மரண தண்டனைகள் கூட விதிக்கப்படலாம்.

அத்தகையவர்களை காப்பாற்றும் வகையில் அரசாங்கம் நடந்து கொள்ள முற்படுகிறதா என்ற கேள்வியும் உள்ளது.

எவ்வாறாயினும், மரணதண்டனை என்பது இன்றைய உலகில் அருவருக்கத்தக்க ஒன்றாக- மனித குலத்துக்கு எதிரான ஒன்றாகவே மனித உரிமை அமைப்புகளால் கருதப்படுகிறது. இதற்கு ஆதரவாகவும் எதிராகவும் நடக்கும் விவாதங்கள் முடிவற்று நீள்கின்றன.

இந்தநிலையில் இலங்கையிலும் குற்றச செயல்கள் அதிகரித்துள்ள நிலையில், கொடூரமான குற்றவாளிகளை அதிகபட்ச தண்டனைக்குட்படுத்துவதன் மூலம் குற்றங்களைக் குறைக்க முடியும் என்ற நம்பிக்கை சமூகத்தில் ஏற்பட்டுள்ளது.

இன்னொரு பக்கத்தில் கடுமையான, கொடூரமான தண்டனைகள் மட்டுமே, குற்றங்களை தடுக்காது என்ற கருத்தும் உள்ளது.

உதாரணத்துக்கு இஸ்லாமிய நாடுகள் பலவற்றில் மிகக்கொடூரமான தண்டனைகள் விதிக்கப்பட்டாலும், அங்கு குற்றச்செயல்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன என்று கூற முடியாது.

தனியே தண்டனைகள் மட்டும் தான் குற்றங்களை குறைப்பதில்லை. சமூக கட்டுப்பாடுகளும், பிணைப்பும்கூட அவற்றைக் கட்டுப்படுத்தும்.

விடுதலைப் புலிகளின் காலத்தில் குற்றச் செயல்கள் குறைந்திருந்தமைக்கு அதுவும் ஒரு காரணம்.

போர் நடந்த காலத்தில், சமூகத்தில் ஒற்றுமையும், பிணைப்புகளும், சமூக கட்டுப்பாடுகளும் அதிகமாகவே கடைப்பிடிக்கப்பட்டன. புலிகளின் நிர்வாக முறைமைகளும் அதற்கு மற்றொரு காரணமாய் அமைந்திருந்தது.


அது பலருக்குப் புரியாததால்தான், புலிகளின் கடுமையான தண்டனைகளே, பெண்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்தியதான கருத்தை அவர்களிடத்தில் ஊன்றச் செய்துள்ளது.

-இணையம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வந்ததும் முன்கதவால்தான் செல்வதும் முன்கதவால்தான்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

**தனக்கு எதிராக எதிர்க்கட்சி கொண்டு வரவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு முகம்கொடுக்க தான் எப்போதும் தயார் எனவும், பிரதமர் பதவிக்கு தான், பின்கதவால் வந்தவர் அல்ல எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

நான் வந்ததும் பின்கதவால் அல்ல, செல்வதும் முன்வாசல் வழியாகவே எனவும் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் பொதுச் செயலாளருமான சுசில் பிரேமஜயந்த கூறிய விமர்சனம் தொடர்பில் பதிலளிக்கும் விதமாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எனக்கும், எனது கட்சிக்கும் முதுகெலும்பு பலமாகவுள்ளது. என்னைத் தகுதியில்லையெனக் கருதினால் விலக்குங்கள். எதிர்க் கட்சியில் இருக்க நான் தயார் எனவும் பிரதமர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# ரணில் இரு தடவைகளும் பின்கதவால் பிரதமரானார்

## சுசில் சுட்டிக்காட்டு



ரணில் விக்கிரமசிங்க இரண்டு தடவைகளும் பின் கதவால் தான் பிரதமர் ஆனார், இந்த உண்மையை மறுக்க முடியாது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் சுசில் பிரேமஜெயந்த தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் துணை இருந்ததால் தான் ரணில் விக்கிரமசிங்க இரண்டு தடவைகளும் பிரதமர் ஆனார். எமது துணை இல்லையென்றால் இன்றும் ரணில் தோல்வியின் நாயகனாகவே இருந்திருப்பார் எனவும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஜனாதிபதி தேர்தலில் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி ஆனதுடன் அதை சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு ரணில் பிரதமர் ஆனார். மக்கள் வரப்பிரசாதத்துடன் ரணில் பிரதமர் ஆகவில்லை.

ரணில் விக்கிரமசிங்க இரண்டு தடவைகள் பிரதமராக இந்த நாட்டை ஆட்சி செய்துள்ளார். ஆனால் இந்த இரு தடவைகளும் அவர் பின் கதவால் தான் அதிகாரத்துக்கு வந்தார் என்பதே உண்மையாகும்.

இரண்டு தடவைகளும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் துணை தான் அவரை பிரதமர் ஆக்கியது. 2001 ஆம் ஆண்டு ரணில் பிரதமர் ஆவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அப்போதைய பொதுச் செயலாளர் எஸ்.பி.திசாநாயக்கவே காரணமாகும். அவர் 12 பேருடன் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டதன் காரணமாகவே அதிகாரம் கைமாறியது.

ஐக்கிய தேசியக் கட்சி தனித்து பலமான ஆட்சியை அமைக்க முடியாத நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் தான் கைகொடுத்தனர். அதேபோல் இம்முறை ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தனித்து களம் இறங்கினாலோ அல்லது ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி தேர் தலில் களம் இறங்கினாலோ தோல்வி உறுதியானது என்பது அவர்களுக்கு நன்றாகவே தெரிந்திருந்தது.

அவ்வாறானதொரு நிலைமையில் எமது கட்சியின் பொதுச் செயலாளரை வைத்தே அவர்கள் ஆட்சியை கைப்பற்றினார்கள். இம்முறையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவு இருந்ததால் தான் ரணில் பிரதமர் ஆனார்.

அதேபோல் மக்களின் ஆதரவு இம்முறை ரணிலுக்கு கிடைக்கவில்லை. மக்கள் மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக்கவே வாக்களித்தனர். அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி ரணில் அதிகாரத்தை கைப்பற்றிவிட்டார்.

ஆகவே இந்த இரு சந்தர்ப்பங்களிலும் ரணில் பின் கதவால் தான் அதிகாரத்தை கைப்பற்றினார் என்பதே உண்மையாகும்.

எனவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் துணை இல்லாவிட்டால் ரணில் அதிகாரத்துக்கு வந்திருக்க மாட்டார். அதேபோல் அடுத்த முறை யாருடைய தயவில் ரணில் பிரதமர் ஆவார் என்பது தெரியவில்லை.

ஆனால் அதற்கான சந்தர்ப்பத்தை நாம் ஏற்படுத்திக் கொடுக்க மாட்டோம். இம்முறை மட்டுமே ரணில் பிரதமராக இருக்க முடியும். இம்முறை அவர் போட்டியிடுவதால் வெற்றி எம் பக்கமே உள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# சுதந்திரக் கட்சியின் உரிமையாளர்கள் பொதுமக்களேயன்றி மைத்திரி அல்ல!

## டி.பி.ஏக்கநாயக்க கூறுகிறார்



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மெய்யான உரிமையாளர்கள் பொதுமக்களே அன்றி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அல்ல என முன்னாள் கலாசார அமைச்சர் டி.பி.ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ள மைத்திரிபாலவின் உதவி எனக்கு அவசியமில்லை.

மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் போட்டியிடுவதனை தடுக்க எந்தவொரு தரப்பிற்கும் முடியாது.

நாட்டில் பெரும்பான்மையான மக்கள் முன்னாள் ஜனாதிபதி மகிந்தவுடன் இருக்கின்றார்கள்.

உண்மை நிலைமையை மக்கள் அறிவார்கள். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்நோக்கி நகர்த்துவார் என டி.பி.ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் மகிந்த போட்டியிடுவது [illegible] த்து சிங்கள ஊடகமொன்று எழு [illegible] போது அவர் இதனைத் தெரிவித்தார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## பணம் சம்பாதிப்பது எப்படி?

எதிர்காலத்தைப் பற்றி கவலை இல்லாமல் மனிதனால் இருக்க முடியுமா? அதற்காகப் பணம் சேர்ப்பதாகச் சிலர் சொல்வார்கள். நியாயம்தான். ஆனால் எதிர்காலத்தைப் பற்றிய கவலையில் நிகழ்காலத்தையே பலர் கொன்று போடுவது நியாயமே அல்ல. பலர் நிகழ்காலம் என்பதையே அனுபவிப்பதில்லை. இது பெரும் பாவம். ஒவ்வொரு விநாடியும் கடவுள் நமக்கு கொடுத்த கொடை! ஒவ்வொரு விநாடியும் வாழ வேண்டியது நமது கடமை. நாளைக்கு வாழ வேண்டும் என்பதற்காக இன்றைக்குச் செத்துக் கிடக்க முடியாது.

அவர் ஒரு பணக்காரர். திரைகடல் ஓடியும் திரவியம் சேர்ப்பது அவரது பரம்பரைப் பழக்கம். அல்லது பாரம். அந்தக் காவிரிப் பூம்பட்டினத்துக் காசுக்காரருக்குக் கடவுளே பிள்ளையாக வந்தான். பெரிய நோய்க்குப் பெரிய மருத்துவர் வர வேண்டி இருக்கிறது.

இந்தப் பணம் சேர்க்கும் வியாதி பிள்ளைக்கும் வர வேண்டும் என்று அவருக்கு ரொம்பவும் ஆசை. வியாபாரம் செய்ய மருதவாணன் என்ற அந்தப் பிள்ளையை அயலூருக்கு அனுப்பினார் அவர்.

பிள்ளையோ அப்பாவுக்கு அன்பளிப்பாக ஒரு பெட்டியை அனுப்பினார். திறந்து பார்த்தார். காதில்லாத ஊசி ஒன்று. ஊசியை விடக்கூராகக் காதுகளைத் தைக்கும் வாசகம் ஒன்று "காதற்ற ஊசியும் வாராது காண் உம் கடை வழிக்கே..."

பொறி கலங்கியது. நேராகவே நெஞ்சில் தைத்தன அந்த வரிகள். துறவு உணர்வு உறவு பூண்டது. சேர்த்த பொருளை அள்ளிக் கொடுத்துப் புண்ணியம் சேர்க்கக்கூட விரும்பாமல், கஜானாவைத் திறந்து போட்டு விட்டுப் புறப்பட்டார். பூட்டி வைத்திருந்தால் கொள்ளையடித்த பாவம் மற்றவருக்கு வரும் என்ற கவலையோ என்னவோ... கஜானாவைத் திறந்து போட்டு விட்டுப் போனார். அந்தப் பட்டினத்தார்.

இதற்காகப் பட்டினத்தாரைப் போல எல்லோரும் பரதேசியாகப் புறப்படுங்கள் என்று நான் சொல்லவில்லை. நூறு மதிப்பெண்ணுக்குக் குறிவைத்தால்தான் எழுபது, எண்பது மதிப்பெண்ணாவது கிடைக்கிறது. பட்டினத்தாரைக் குறிக்கோளாக வைத்தால்தான் பணத்துக்காகப் பாவம் செய்யாத சராசரிப் பண்பாவது நமக்கு வரும்.

பொருள் ஒன்றையே குறிக்கோளாக உள்ளவர்கள் எல்லாத் தவறுகளுக்கும் தயாராகி விடுகிறார்கள். நாய் விற்ற காசு குரைக்கவா போகிறது என்று தாங்களே சத்தமாகக் கூச்சல் போட்டு நாய்களைப் பெருமைப்படுத்தி விடுகிறார்கள்.

பணம் பல சமயங்களில் மனித இயல்புகளையே கொச்சைப்படுத்தி விடுகிறது. கங்கை ஆற்றங்கரையில் நாள்தோறும் இராமகிருஷ்ணர் உலவும் போது ஒரு பிச்சைக்காரன் அவரை எழுந்து நின்று வணங்குவது வழக்கம்.

அன்று ஓர் ஆச்சர்யம். குருதேவர் வரும் சமயம் அவன் பணிவுடன் வணங்கவும் இல்லை. எழுந்து நிற்கவும் இல்லை. இருந்த இடத்தில் இருந்தபடி அலட்சியமாக நலன் விசாரித்தான். குருதேவருடன் வந்தவர்களுக்கு அவன் நடவடிக்கைகளுக்கு காரணம் புரியவில்லை.

குருதேவர் சிரித்துக்கொண்டு சொன்னார், இன்று அவன் தேவைக்குமேல் பிட்சை கிடைத்துவிட்டது. கையில் கொஞ்சம் காசு கூடச் சேர்ந்துவிட்டது. அது அவனைப் படாதபாடுபடுத்துகிறது.

முந்திரிமேல் காணி மிகின் தன்னை இந்திரனாக எண்ணிவிடும் என்ற பழையோர் மொழி நூற்றுக்கு நூறு உண்மை.

அறம், பொருள், இன்பம் என்று வழிமுறை வைத்து அறவழியில்தான் பொருள் சேர்க்க வேண்டும் என்றும் அந்தப்பொருளைக் கொண்டே இன்பம் துய்க்க வேண்டும் என்றும் முறை வைத்தனர் முன்னோர். இதை மறக்கக்கூடாது.

பணத்தைவிடக் குணம் முக்கியம். குணத்தைத் தரும் மனம் முக்கியம். பணத்திற்காக என்னவேண்டுமானாலும் செய்யலாம் என்று கருத்து உருவாகாதபடி வாழ்க்கையை அமைப்பது அவசியம். அவர் ஒரு நல்ல அரசர். அரசர் என்பதைப் பதவியாக ஒருபோதும் அவர் நினைத்ததில்லை. பணியாகவே கருதினார். மக்களை ஆளுகிறோம் என்ற மமதை இல்லாமல் மக்களுக்குத் தொண்டு செய்யும் முதல் வேலைக்காரனாகத் தம்மைக் கருதினார்.

வரிப்பணத்தை எச்சரிக்கையாகச் செலவு செய்ய எண்ணினார். விரயம், ஆடம்பரம், விழாச் செலவு, விருந்து வேடிக்கைகள் என்று வீண் செய்யக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தார். எளிய சிக்கன வாழ்க்கையை ஒருபோதும் நடத்த என்ன செலவு ஆகும் என்று கணக்கிட்டு மாதச் சம்பளமாக அதனைப் பெற்று வந்தார்.

ஒருநாள் பண்டிகை கொண்டாட வேண்டிய அவசியம் வந்தது. மனைவி அதாவது அரசி அரசரிடம் கூடுதலாகப் பணம் கேட்டார். புத்தாடைகள் உடுத்த, இனிப்புகள் செய்யக் கூடுதல் பணம் தேவை என்றார். மன்னர் மறுத்துவிட்டார். வரிப்பணத்தில் இந்த ஆடம்பரங்கள் அவசியம் இல்லை என்றார்.

பண்டிகை நாள் காலை உணவோடு இனிப்புகள் வந்தன. குழந்தைகள் புத்தாடையில் உலவினர். மன்னருக்கு ஆச்சரியம். இதற்கெல்லாம் பணம் எங்கிருந்து வந்தது? மனைவியைக் கேட்டார். கடந்த ஒரு வருடமாக நீங்கள் மாதம் தோறும் செலவுக்காக அனுமதித்த தொகையில் கொஞ்சம் கொஞ்சம் மீதம் வைத்திருந்தேன். அப்படிச் சேமித்த பணத்தில் இந்த இனிப்புகளும் புத்தாடையும் தயாராகின. என்று தயங்கிக் கொண்டே சொன்னார் அரசியார்.

எவ்வளவு மீதம் வைத்திருந்தாய் என்று அரசர் கேட்டார்? தொகையை மறைக்காமல் சொன்னார் அரசியார்.

அரசர் அமைச்சரை அழைத்தார். அடுத்த மாதத்திலிருந்து என் சம்பளம் குறைக்கப்பட வேண்டும். ஏன்? பதறினார் அமைச்சர்.

மாதச் செலவுக்கு நான் கொடுத்த தொகையில் மீதம் வைக்க என் மனைவியால் முடிகிறது என்றால் என் தேவைக்கு மேல் சம்பளம் பெற்ற குற்றம் நிரூபிக்கப்பட்டு விட்டது. எனவே என் சம்பளம் குறைக்கப்படட்டும் என்றார் அரசர். மனைவி மீதப்படுத்திய தொகையைப் பன்னிரண்டால் வகுத்து அதனை மாதச் சம்பளத்தில் குறைக்க உத்தரவிட்டார். இப்படித்தான் இருக்கவேண்டும் என்று சொல்லவில்லை. இப்படியும் இருந்திருக்கலாம் என்று சொல்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயா சந்திக்கும் இடைத்தேர்தல்!



மீண்டும் முதலமைச்சரான ஜெயலலிதா சந்திக்கும் முதல் இடைத் தேர்தல், தமிழக வரலாற்றில் முத்திரை பதிக்கப்போகிறது. தமிழக தேர்தல் வரலாற்றில் முதலமைச்சராக இருந்த ஒருவர் இப்போதுதான் இடைத் தேர்தலை சந்திக்கிறார். குறிப்பாக முதலமைச்சரான பிறகு அவர் சந்திக்கும் இந்த தேர்தல் இன்னொரு புதிய அத்தியாயத்தை தோற்றுவிக்கப் போகிறது.

சென்னை மாநகரில் உள்ள ஆர.கே. நகர் சட்டமன்றத் தொகுதியின் அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர் வெற்றிவேல். பெங்களூர் சொத்துக்குவிப்பு வழக்கு மேன்முறையீட்டில் மே 11 ஆம் திகதி ஜெயலலிதா விடுதலையானார்.

வெற்றிவேல், மே 17 ஆம் திகதி தன் சட்டமன்ற உறுப்பினர் பதவிய்ய இராஜினாமா செய்தார். அன்றைய தினமே ஏற்றுக்கொள்ளப்பட்ட அந்த இராஜினாமாவுக்குப் பின்னர் 22 ஆம் திகதி அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது.

அதில் ஜெயலலிதா சட்டமன்றக் கட்சித் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். 23 ஆம் திகதி அவர் முதலமைச்சராக பதவியேற்றுக் கொண்டார். 26 ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழு ஆர்.கே. நகர் சட்டமன்றத் தொகுதிக்கு இடைத் தேர்தலை அறிவித்தது. ஜூன் 27 ஆம் திகதி இடைத் தேர்தல். ஜூன் 30 ஆம் திகதி தேர்தல் முடிவு வெளியிடப்படும்.

பொதுவாக அ.தி.மு.க.சார்பில் யார் இடைத் தேர்தலில் போட்டியிட்டாலும், எளிதில் வெற்றி பெறுவார்கள் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம். சமீப கால தேர்தல் முடிவுகள் அதைத்தான் எடுத்துக் காட்டியுள்ளன.

ஆனால், இந்த முறை முதலமைச்சர், அதாவது அ.தி.மு.க.வின் பொதுச் செயலாளரே இடைத் தேர்தலில் நிற்கிறார். அதனால் அவரது வெற்றி ஏற்கனவே உறுதி செய்யப்பட்டது மட்டுமின்றி, இதுவரை இடைத் தேர்தல்களில் வெற்றி பெற்ற அ.தி.மு.க. வேட்பாளர்களை விட அதிக வாக்குகள் வித்தியாசத்தில் ஜெயலலிதாவை வெற்றி பெற வைக்க வேண்டும் என்பது அ.தி.மு.க.வின் முனைப்பான வியூகம்.

சில அ.தி.மு.க.வினர் 'எங்கள் அம்மாவின் வெற்றியும், அவருக்கு கிடைக்கும் வாக்கு வித்தியாசமும் கின்னஸ் பதிவேட்டிலும் பதிவாகும்படி தீவிர தேர்தல் பணி செய்வோம்' என்று சபதம் போட்டு வேலை செய்கிறார்கள்.

இவருக்குப் போட்டியாக களத்தில் நின்றது முதலில் டிராபிக் ராமசாமி மட்டும்தான். பல்வேறு பொதுநல வழக்குகள் போட்டு தமிழகத்தில் பிரபலமான இவர் வேட்பு மனுத்தாக்கல் செய்துவிட்டு அனைத்துக் கட்சிகளிடமும் ஆதரவு கேட்டார்.

ஆனால், இதுவரை யாரும் வெளிப்படையாக அவருக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை. தேர்தலில் போட்டியில்லை என்ற முடிவை வைகோ, தி.மு.க. தலைவர் கருணாநிதி, பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் டாக்டர் ராமதாஸ், காங்கிரஸ் தலைவர் இளங்கோவன் எல்லோரும் எடுத்து விட்டார்கள்.

அனேகமாக விஜயகாந்தும், பா.ஜ.க.வும்கூட அப்படித்தான் முடிவு எடுப்பார்கள் என்பதே லேட்டஸ்ட் நிலவரம். எல்லாவற்றிற்கும் மேலாக மத்தியில் ஆட்சியிலிருக்கும் பா.ஜ.க.வின் மாநிலத் தலைவர் தமிழிசை சவுந்திரராஜன், 'தேர்தல் ஆணையம் லெவல் பிளேயிங் பீல்டை உருவாக்குமா' என்ற சந்தேகக் கேள்வியை எழுப்பியிருப்பதை வாக்காளர்கள் சந்தேகக் கண்ணோட்டத்துடன் பார்க்கிறார்கள்.

ஏனென்றால், பெங்களூர் வழக்கின் தீர்ப்புக்குப் பின்னர் அ.தி.மு.க.வுக்கும், பா.ஜ.க.வுக்கும் ஏற்பட்டுள்ள புது விதமான நெருக்கம், முதல்வராக பதவியேற்ற ஜெயலலிதாவை பிரதமர் நரேந்திரமோடியே வாழ்த்தியது போன்றவைதான் இடைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு இவ்வளவு தாமதம் காட்டுகிறது பா.ஜ.க. என்றே கருத்து நிலவுகிறது.

இதற்கிடையில் 'தி.மு.க.வுக்கும் எங்களுக்கும் கொள்கை வேறுபாடு உண்டு. அ.தி.மு.க.வுக்கும் எங்களுக்கும் கொள்கையளவில் எந்த வேறுபாடும் இல்லை' என்று தேசிய செயலாளர் எச். ராஜா பேட்டியளித்திருப்பது இங்கே கூர்ந்து கவனிக்கத்தக்கது. ஆனால், இந்த முறை வித்தியாசமாக ஜெயலலிதாவை எதிர்த்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளர் சி. மகேந்திரன் இரு கம்யூனிஸ்டுகளின் சார்பாக நிறுத்தப்பட்டிருக்கிறார்.

ஆர்.கே.நகர் தொகுதி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சிட்டிங் தொகுதி அல்ல. அதேபோல் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் இந்த சட்டமன்ற தேர்தலில் போட்டியிடவில்லை. இந்நிலையில் ஆர்.கே. நகரில் போட்டியிட முன்வந்தது ஏன் என்பது பற்றி பல சர்ச்சைகள் ஓடுகின்றன.

ஏனென்றால், தங்கள் எம்.எல்.ஏ.வான முத்துக்குமார் விபத்து ஒன்றில் இறந்த போது அவர் போட்டியிட்டு வெற்றி பெற்ற புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதியை 'நேர விரயம் கருதி நாங்கள் போட்டியிடவில்லை' என்று கூறிவிட்டுக் கொடுத்தவர்தான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன்.

ஆனால், இந்த முறை ஆர்.கே.நகரில் 'தேர்தல் புறக்கணிப்பு ஜனநாயகத்தில் இல்லை' என்ற தோரணையில் களமிறங்கியிருக்கிறது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி. இதை விட முக்கியமாக "திருவரங்கம் இடைத் தேர்தலில் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி போட்டியிட்டது. ஆகவே, இந்த இடைத்தேர்தலில் நீங்கள் போட்டியிட வேண்டும்' என்று மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் ஜி.ராமகிருஷ்ணன் வற்புறுத்தியிருக்கிறார்.

அதன் விளைவாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் அதன் வேட்பாளர் சி.மகேந்திரன் களமிறக்கப்பட்டுள்ளார். ஆனால், இன்றைய நிலவரப்படி இரு கம்யூனிஸ்ட்டுகளின் சார்பிலும் தி.மு.க.வின் ஆதரவை கோரமாட்டார்கள் என்ற பேச்சு அடிபடுகிறது.

ஏனென்றால், ஹைதராபாத்தில் நடைபெற்ற மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொலிட் பீரோ கூட்டத்தில் கலந்து கொண்ட 16 உறுப்பினர்களில் 12 பேர் தி.மு.க. கூட்டணி வேண்டாம் என்று கருத்துத் தெரிவித்ததாக அதற்கு ஒரு காரணம் சொல்லப்படுகிறது.

ஆகவே, இந்த இடைத் தேர்தலில முதலமைச்சர் ஜெயலலிதாவை எதிர்த்து அரசியல் கட்சியின் சார்பில்- அதுவும் குறிப்பாக கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வேட்பாளர் நிற்கிறார்.

அவரது பிரசாரம் 'ஊழல், மதசார்பற்ற தன்மை, மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கைகள்' போன்ற மூன்று முக்கிய விடயங்களை முன்வைத்து இருக்கும் எனறு இரு கம்யூனிஸ்ட் கட்சிகளும கூட்டாகவே அறிவித்துவிட்டன.

மகேந்திரனும் தீவிரப் பிரசாரத்தில் குதித்துவிட்டார். தொகுதிக்குள் சென்றவுடனேயே 'ஆர்.கே. நகர் தொகுதி கிட்டத்தட்ட அ.தி.மு.க.வின் ஆக்கிரமிப்பில் இருக்கிறது. தேர்தல் ஆணையமும் வேடிக்கை பார்க்கிறது' என்று பகிரங்கமாகவே முதல் நாளே குற்றம் சாட்டிவிட்டார்.

இந்த வேகத்தைப் பார்த்தால் முதல்வருக்கு எதிராக அவரது பிரசாரம் சூடுபிடிக்கும் என்றே தெரிகிறது. கடும் பிரசாரம் நடைபெறும் சூழ்நிலையில், முதலமைச்சரின் இடைத் தேர்தல் வெற்றி கம்யூனிஸ்ட் வேட்பாளர் மகேந்தி ரனை எதிர்த்து கிடைத்த வெற்றி என்ற ரீதியில்தான் பதிவாகுமே தவிர, டிராபிக் ராமசாமியை எதிர்த்து வெற்றி பெற்றோம் என்ற நிலை வராது.

அதே நேரம் தி.மு.க. என்ன முடிவு எடுக்கப் போகிறது என்பது மிக முக்கியமாக கவனிக்கப்படுகிறது. அக்கட்சியின் தலைவர் கருணாநிதியை சந்தித்து தனக்கு ஆதரவளிக்கும்படி டிராபிக் ராமசாமி ஏற்கனவே கோரிக்கை விடுத்துள்ளார்.

ஒருவேளை தங்களை மூக்குடைக்கும் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு பதிலடி கொடுக்க விரும்பி 'டிராபிக் ராமசாமிக்கு தி.மு.க. ஆதரவு' என்ற நிலைப்பாட்டை எடுத்தால், இடைத்தேர்தலின் முடிவுகள் வித்தியாசமாகப் போகும்.

அப்போதும் முதலமைச்சர் ஜெயலலிதாதான் அமோக வெற்றி பெறுவார். ஆனால், டிராபிக் ராமசாமியை விட குறைவான வாக்குகளை கம்யூனிஸ்ட் வேட்பாளர் சி.மகேந்திரன் பெற வேண்டிய நெருக்கடியான சூழ்நிலை உருவாகி விடும்.

அது தனித்துப் போட்டி என்று களமிறங்கும் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு பெரிய அதிர்ச்சியைக் கொடுக்கும். அது மட்டுமின்றி தமிழகத்தில் உள்ள மாநில கம்யூனிஸ்ட் தலைமைக்கு 'தி.மு.க, அ.தி.மு.க.வுடன் கூட்டணி வேண்டாம்' என்று கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய தலைமையிடம் அடித்துச் சொல்வதில் சிரமம் ஏற்படும்.

அதுதான் இன்றைய தினம் மாநில அளவில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளின் முக்கியத் தலைவர்களுக்கு கவலையாக இருக்கும் என்று தெரிகிறது.

இந்த இடைத் தேர்தல் வெற்றி எந்த மாற்றத்தையும் தமிழக அரசியலில் உருவாக்கி விடாது. அ.தி.மு.க.வுக்கு 'நம்பர் ஒன் கட்சி' என்ற அந்தஸ்து தொடரும்.

பா.ஜ.க.வும், தே.மு.தி.க.வும் இணைந்து வேட்பாளரை நிறுத்தவில்லை என்றால் தேசிய ஜனநாயக கூட்டணியில் உள்ள கடைசிக் கட்சியான தே.மு.தி.க.வுடனும் பா.ஜ.க.வுக்கு உறவு சரியில்லை என்ற தோற்றம் உருவாகும்.

எல்லாவற்றையும்விட, சட்டமன்றத் தேர்தல் வரும் 11 மாதத்துக்கு முன்புகூட எதிர்கட்சிகள் ஒருங்கிணைந்து இடைத் தேர்தலை சந்திக்க முடியவில்லை என்ற எண்ணம் வாக்காளர்கள் மத்தியில் உருவாகும்.


'எதிர்கட்சிகளின் ஒற்றுமை' சிதறிக் கிடக்கிறது என்ற தோற்றத்தைத் தவிர வேறு எந்த மாற்றத்தையும் கம்யூனிஸ்டுகள் போட்டியிடுவது உருவாக்கி விடாது என்பதே இன்றைய நிலைமை. ஏறக்குறைய 30 சதவீத வாக்குகள் உள்ள தி.மு.க.வுக்கும், 42 சதவீத வாக்குகள் கொண்ட அ.தி.மு.க.வுக்கும் மாற்றாக 0.50 சதவீத வாக்குகள் கொண்ட கம்யூனிஸ்ட் கட்சிகள் அணி திரளுவதுதான் தமிழக வாக்காளர்களை கொஞ்சம் மிரள வைத்துள்ளது. அதை விட வியக்க வைத்துள்ளது. அதற்கு காரணம் தமிழகத்தில் உள்ள இந்த இரு முக்கியக் கட்சிகளுமே ஊழல் புகாரில் சிக்கித் தவிக்கின்றன என்ற காரணத்தைத்தான் இரு கம்யூனிஸ்ட் கட்சிகளும் திரும்பத் திரும்ப கூறி வருகின்றன.

-எம்.காசிநாதன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புங்குடுதீவில் மாணவி கொலை நடந்தது என்ன?

17



மாணவி வித்தியா

மாணவி வித்தியாவின் கொலையுடன் சம்பந்தப்பட்டவர் எனக் கருதப்படும் சுவிஸ்குமார்

மற்றையவர் சுவிட்சர்லாந்தில் வாழ்பவர். ஏனையவர்களும் ஆகக் குறைந்தது சாதாரண தரம்

பாண மாவட்டம் என்ற எல்லை கடந்து வவுனியா மாவட்டத்திலும் அதன் தாக்கம் வெளிப்படுத்

நடந்த வன்கொடுமையைப் பொறுக்கமுடியாது என்பதாக வவுனியா மாவட்டப் பாடசாலை மாணவர்களின் ஹர்த்தால் அனுஷ்டிப்பு இருந்தது.

மாணவி வித்தியாவின் படுகொலைக்கு எதிராக மாவட்டம் கடந்த அளவில் மக்களின் ஆர்ப்பாட்டங்கள் நடந்து கொண்டி



குழுவினரும் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தனர்.

புங்குடுதீவின் ஒரு மூலையில் நடந்த கொலைக்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவிக்க பிரதம நீதியரசர், பொலிஸ்மா அதிபர் ஏன்? இந்த நாட்டின் ஜனாதிபதி என அனைவரும் யாழ்ப்பாணத்திற்கு வரவேண்டியதாயிற்று.

பிரதம நீதியரசர், பொலிஸ்மா அதிபர் ஆகியோரின் யாழ்ப்பாண விஜயத்தை அடுத்து யாழ்ப்பாண பொலிஸ் கட்ட

கைது செய்யப்பட்டதுடன் யாழ்ப்பாணத்தில் ஓர் அமைதிநிலை ஏற்பட்டது.

பொதுமக்கள் திரண்டு கோஷம் எழுப்பியதால் அனைவருமே விழிப்பாக இருக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருந்தது.

சுவிஸ்குமாரின் கதோடு மாணவி வித்தியாவின் கொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் 9 பேர் இது வரை கைதாகியுள்ளனர்.

சொந்த ஊரில் சொந்த உறவில் உள்ள ஒரு மாணவியின் கொலையுடன் 9 பேர் சம்பந்தப்பட்டனர் என்பது அதிர்ச்சியை தரக்கூடிய தகவலே.

என்ன செய்வது சட்டம், பொலிஸ், பாதுகாப்பு என்ற நிர்வாகக் கட்டமைப்புக்கள் பற்றி இம்மியும் கவலை கொள்ளாது ஒன்பது பேர் ஒரு பாடசாலை மாணவியை கூட்டுவன்புணர்வுக்கு உட்படுத்தி கொலை செய்தனர் என்பதை நினைக்கும் போது கன்னங்கராவின் இலவசக் கல்வி படுதோல்வி கண்டுள்ளதா? என்று எண்ணத் தோன்றும்.

கைதான ஒன்பது பேரில் ஒருவர் பிரதேச சபை ஒன்றில் வேலை செய்பவர்.

வரை படித்தவர்கள். நிலைமை இதுவாக இருக்கையில் இரக்கமற்ற-மிருகத்தனமான ஒரு காரியம் பட்டப்பகலில் நடந்தேறியது எனும் போது எங்கள் தமிழ் சமூகத்தில் எங்கோ தவறு நடந்துவருகிறது என்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

இவை யாழ்ப்பாணத்தில் நடக்க 21.05.2015

## யாழ்.நீதிமன்றத்தின் மீது தாக்குதல்; பொலிஸாருக்கு அதிரடி இடமாற்றம்

தப்பட்டது.

ஆம் மே 21 ஆம் திகதி வவுனியாவில் உள்ள அனைத்துக் கடைகளும் பூட்டப்பட்டிருந்தன. வவுனியா நகரம் வெறிச்சோடியது. மாணவி வித்தியாவுக்கு நீதி கிடைக்க

ருக்க 22.05.2015 அன்று யாழ்ப்பாணத்திற்கு பிரதம நீதியரசர் க.ஸ்ரீபவன் அவர்கள் வருகைதந்து தாக்குதலுக்குள்ளான நீதிமன்றக் கட்டடத்தைப் பார்வையிட்டதுடன் நிலைமைகள்

மைப்பில் மிகப்பெரிய மாற்றம் நிகழ்ந்தது. யாழ்ப்பாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லக்ஸ்மன் வீரசேகர, ஊர்காவற்றுறை தலைமை பொலிஸ் பரிசோதகர் ஆகியோர் அதிரடியாக இடமாற்



வவுனியாவில் நடந்த ஆர்ப்பாட்டம்

அன்று வவுனியா மாவட்டத்தில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. மாணவி வித்தியாவின் படுகொலைக்கு எதிரான கண்டனங்கள் யாழ்ப்

வேண்டும் என்ற கோஷங்கள் அடங்கிய பதாகைகள் ஆங்காங்கே கட்டப்பட்டிருந்தன.

பாடசாலைகள் இயங்கவில்லை. சக மாணவிக்கு

குறித்து நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

இதேவேளை பிரதம நீதியரசருடன் பொலிஸ்மா அதிபர் அடங்கிய

றப்பட்டனர். இந்த மாற்றம் எதற்கானது என்பதை பொறுத்திருந்து பார்க்கவேண்டும்.

(தொடரும்)

புருசோத்மன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோன்ஸ்டனுக்கு எதிரான வழக்கு நவம்பர் 9ம் திகதிவரை ஒத்திவைப்பு

(கொழும்பு)

லக் சதொசவில் பொருட்களை கொள்வனவு செய்துகொண்டு அதற்கு உரிய 5 இலட்சத்து 27ஆயிரத்து 500ரூபாவை செலுத்தாமைக்கு எதிராக முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு நவம்பர் மாதம் 9ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அவருக்கு எதிராக தாக்கல் வழக்கில் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டதன்பின்னர், வழக்கு முதன்முறையாக நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதவான் ரவிந்திர பிரேமரட்ன, சட்டமா அதிபரின் ஆலோசனையை பெறும் வரையிலும வழக்கை நவம்பர் 9ஆம் திகதிக்கு ஒத்திவைப்பதாக அறிவித்தார்.

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸடன் பெர்னாணடோ, அவருடைய பிரத்தியேக செயலாளர் ராஸ் மொஹதீன் மொஹமட் சாஹீர் மற்றும் லக்சதொசவின் முன்னாள் தலைவர் கே.எம்.ஆர் பெர்னாண்டோ ஆகிய மூவருக்கும் எதிராக கொழும்பு, நிதிமோசடி விசாரணை பிரிவு வழக்கு தாக்கல் செய்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)




## சம்பூர் காணிப் பிரச்சினை

# ஆளுநரின் செயற்பாடுகளை பாராட்டும் கிழக்கு முதல்வர்

சம்பூர் காணிப் பிரச்சினையில் தலையிட்டு அம்மக்களின் குறைகளைத் தீர்த்து மக்களின் காணிகளை விடுவிப்பதில் கிழக்கு மாகாண ஆளுநர் முன்னின்று செயற்படும் விதம் பாராட்டுக்குரியது என்று கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபீஸ் நசீர் தெரிவித்தார்.

கொழும்பில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், 2006 ஆம் ஆண்டு சம்பூரிலிருந்து இடம்பெயர்ந்த பொதுமக்கள் திருகோணமலை மாவட்ட மூதூர் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கட்டைப்பறிச்சான் (368 குடும்பங்கள்), கிளிவெட்டி (157 குடும்பங்கள்), பட்டித்திடல் (108 குடும்பங்கள்) மணல்சேனை (80 குடும்பங்கள்), என நான்கு இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர்.

எஞ்சிய 632 குடும்பங்கள் தமது உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் தற்காலிகமாக தங்கியிருந்தனர்.

இடைத்தங்கல் முகாம்களில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டு 9 ஆண்டுகளாக அடிப்படை வசதிகளற்ற நிலையில் வாழ்ந்து வருகின்ற இம்மக்களை, அவர்களின் சொந்த இடங்களுக்கு திருப்பி அனுப்புவதில் பெரும் சர்ச்சைகள் இருந்து வருகிறது.

கடந்த பல வருடங்களாக தாங்கள் வசித்த இடங்களை இழந்து வாழும் அம்மக்களின் பிரச்சினையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் மற்றும் அனைத்து, பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒருமித்த குரல் கொடுத்து வருவதனையும் இவ்விடத்தில் நான் பாராட்டுகிறேன்.

அவ்வேளையில் அம்மக்களுக்கு சிறந்த தீர்வினை வழங்க கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்ரின் பெர்னாண்டோ எடுத்த வழிமுறைகள் பாராட்டுக்குரியது.

பரந்த சிந்தனையுடன் செயற்படும் ஆளுநரின் இந்த நடவடிக்கை போன்று கிழக்கில் முன்னெடுக்கப்படும் சகல வேலைப்பாடுகளிலும் இனிமேலும் ஒத்துழைப்பு வழங்குவார் என்ற நம்பிக்கை இன்று ஏற்பட்டுள்ளது.

இதற்குரிய நடவடிக்கையை ஜனாதிபதி மைத்திரிபால, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான தேசிய அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும். இதற்கான சகல முயற்சிகளையும் கிழக்கின் முதலமைச்சர் என்ற வகையில் நான் முன்னெடுத்து வருகின்றேன். மேலும் இவ்வாறான நற்செயற்பாடுகளே நிரந்தர தீர்வொன்றைப் பெறுவதற்கான நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் என்றும் கூறிக்கொள்வதுடன், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் துரைரட்ணம் மட்டக்களப்பு மாவட்டப் பிரச்சினைகளைத் தொடர்ந்து கூறிவருகின்றார். அவைகளையும் சரியான முறையில் தீர்வுகண்டு அதனையும் நிறைவேற்றிக் கொடுக்க ஆளுநர் சிறந்த பங்களிப்பினை வழங்க வேண்டும், வழங்குவார் என்று நினைக்கிறேன்.

எனவே கிழக்கில் நடைமுறைப் படுத்தப்படும் வேலைகளில் இனிமேலும் எந்த தடைகளும் இருக்காது என்ற செய்தியினை தெரிவிப்பதில் நான் சந்தோஷமடைகிறேன். இனிமேலும் கிழக்கில் தடையாக யார் இருந்தாலும் அதனை உடைத்தெறிந்து மக்கள் பணியை சரிவர நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என்பதில் உறுதியாகவும் தைரியமாகவும் செயற்பட்டு வருகிறேன் என்றும் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட்

# 20ஆவது திருத்தச்சட்டத்திற்கு அமைச்சர் திகாம்பரம் எதிர்ப்பு!

(கொழும்பு)

**இலங்கையின் அமைச்சரவையில் நேற்று முன்தினம் இரவு நிறைவேற்றிய 20ஆவது திருத்தச் சட்டத்துக்கு தொழிலாளர் தேசிய முன்னணியின் தலைவரும் அமைச்சருமான பி.திகாம்பரம் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.**

அமைச்சரவை ஏற்றுக் கொண்ட யோசனையின்படி 225 ஆசனங்களில் 125 ஆசனங்கள் கலப்பு முறையிலும் 75 ஆசனங்கள் விகிதாசார அடிப்படையிலும், 25 ஆசனங்கள் தேசியப்பட்டியல் மூலமும் நிரப்பப்படவுள்ளன.

இதன்போது அதிக தமிழ் மக்களை கொண்டுள்ள நுவரெலியா மஸ்கெலிய தொகுதியில் இருந்து இந்திய வம்சாவளி தமிழ்ப் பிரதிநிதிகளின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க முடியாத நிலை ஏற்படும்.

நாடாளுமன்ற ஆசனங்களை 255 ஆக அதிகரிக்கும் போதே நுவரெலியா மாவட்டத்தில் நான்கு தொகுதிகள் அமைக்கப்பட்டு அதன் மூலம் நான்கு தமிழ் பிரதிநிதிகள் தெரிவாக முடியும்.

அமைச்சரவை நிறைவேற்றியுள்ள யோசனையின்படி 225 ஆசனங்களுக்குள் நுவரெலியாவில் ஒருவரும் மஸ்கெலியாவிலும் ஒருவருமாக இரண்டுபேர் மாத்திரமே தெரிவாக முடியும்.

எனவே இதனை தாம் எதிர்ப்பதாக நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தின்போது அமைச்சர் திகாம்பரம் தெரிவித்தார்.

இதற்கு ஜனாதிபதி உள்ளிட்ட அமைச்சரவையில் இருந்தவர்கள் ஆட்சேபனையை வெளியிட்டனர்.

எனினும் தமது நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை என்றும் மலையக மக்கள் பிரதிநிதித்துவங்களை மாறிமாறி பதவிக்கு வரும் அரசாங்கங்கள் கவனிக்க தவறிவருவதாகவும் அவர் குற்றம் சுமத்தினார். (இ-5)

## பிரிவுத்துயர் பகிர்வு

### இராஜேஸ்வரன் தவநிரோஜன்



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராஜேஸ்வரன் தவநிரோஜன் கடந்த 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன் கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் வில்லூன்றி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### கணபதிப்பிள்ளை தவலிங்கரட்ணம்

(அஞ்சல் அத்தியட்சகர்-மன்னார் மாவட்டம்)



யாழ்ப்பாணம் கோப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும் வவுனியா பூந்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை தவலிங்கரட்ணம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன்கிழமை மு.ப.10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கோப்பாய் கந்தன் காடு இந்து மயானத்திற்கு தகனம் செய்யப்படும்.

### திருமதி குமாரசாமி சரஸ்வதி



உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி சரஸ்வதி நேற்று முன்தினம் திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று செவ்வாய்க்கிழமை பி.ப.ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கந்தரோடை சங்கம்புலவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

### திருமதி தம்பிராஜா கிளாடிஸ் தவரட்ணராணி



வட்டுக்கோட்டையைப் வசிப்பிடமாக கொண்ட தம்பிராஜா கிளாடிஸ் தவரட்ண ராணி கடந்த 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருவுடல் இன்று புதன்கிழமை மு.ப11 மணிக்கு வட்டுக்கோட்டை தென்னிந்திய திருச்சபை ஆலய ஆராதனையின் பின்னர் திருவுடல் வட்டுக்கோட்டை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

### திருமதி தம்பு தெய்வானை



இடைக்குறிச்சி மேற்கு வரணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு தெய்வானை கடந்த 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பதன் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் மு.ப 10 மணிக்கு முள்ளி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### திருமதி ரவீந்திரன் சசிகலா



அளவெட்டி தெற்கு தம்பலாவத்தையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ரவீந்திரன் சசிகலா கடந்த 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பதன்கிழமை பி.ப.2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் அளவெட்டி கொட்டுப்பனை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### கந்தவனம் பரமசிவம்



கரவெட்டி நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் கனடா Scarborough ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கந்தவனம் பரமசிவம் கடந்த 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் St.John's Norway Cemetery & Crematorium,256 Kingston Rd,Toronto, ON M4L 1S7,Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

# டி.வி.உபுலுக்கு விளக்கமறியல்

நிதி மோசடி விசாரணை பிரிவுக்கு அச்சுறுத்தல் விடுத்தார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே வாக்குமூலம் அளிப்பதற்காக குற்றப்புலனாய்வு பிரிவுக்கு அழைக்கப்பட்டு, நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட தென்மாகாண சபை அமைச்சர் டி.வி. உபுல், இன்று 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ. அடுத்த பொதுத்தேர்தலில் பிரதமரானால், நிதி மோசடி விசாரணை பிரிவின் கீழ் அதிகாரிகளில் இருந்து அனைவருக்கும் தண்டனை வழங்குவார். அவர்களை கல்லெறிந்து கொல்வதை நாம் பார்த்துக்கொண்டிருப்போம் என்று உறுப்பினர் டி.வி உபுல். திஸ்ஸமாரகமையில் வைத்து அண்மையில் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலிச்சான்றிதழ் விவகாரம் டில்லி சட்ட அமைச்சர் கைது

(புதுடில்லி)

போலி கல்விச் சான்றிதழ் விவகாரம் தொடர்பாக டில்லி சட்ட அமைச்சர் ஜிதேந்திர சிங் தோமர் கைது செய்யப்பட்டார். இத்தகவலை பொலிஸார் உறுதி செய்துள்ளனர்.

இது குறித்து பொலிஸ் தரப்பு கூறும்போது, சட்ட அமைச்சர் ஜிதேந்திர சிங் தோமர் போலி கல்விச் சான்றிதழ் விவகாரம் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு அவர் மீது எப்.ஐ.ஆர். பதிவு செய்யப்பட்டது. நேற்றுக் காலை அவர்



கைது செய்யப்பட்டார். அவரை ஹவுஸ் காஸ் பொலிஸ் நிலையத்தில் வைத்துள்ளோம். அவர் மீது இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் 420, 467, 468, 120பிஆகியவைற்றின கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளது.

இச்சம்பவம் குறித்து டில்லி பொலிஸ் ஆணையர் பி.எஸ்.பாஸி கூறும்போது, "நான்ஒரு ஆலோசனைக கூட்டத்தில் இருந்தேன். முழு விபரங்களையும் தெரிந்து கொண்டே பதிலளிக்க முடியும் என்றார்.

தோமர் கைது செய்ய டில்லி துணை நிலை ஆளுநரிடம் அனுமதி பெறப்பட்டதாக பொலிஸ் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

டில்லியின் சட்டத்துறை அமைச்சர் ஜிதேந்திர சிங் தோமரின் (வயது-48) கல்வி சான்றிதழ் போலியானது என அம்மாநில உயர் நீதிமன்றத்தில் சந்தோஷ்குமார் சர்மா என்பவர் ஒரு வழக்கு தொடுத்திருந்தார்.

இதை விசாரணைக்கு எடுத்த நீதிமன்றம், தோமர் சட்டம் பயின்றதாகக் கூறிய பிஹாரில் உள்ள திலக் மாஞ்சி பாகல்பூர் பல்கலைக்கழகத்தற்கு அவரது சான்றிதழை உறுதிபடுத்தும்படி கூறி நோட்டீஸ் அனுப்பியது.

இதற்கான தம் பதிலை அனுப்பிய பாகல்பூர் பல்கலைக்கழகம், தோமர் அங்கு கல்வி பயின்றதற்கான சான்றுகள் இல்லை எனவும், அவரது கல்வி சான்றிதழின் சீரியல் எண் 3687, கடந்த 29ஜுலை 1999 இல்சுஞ்சய்குமார் சௌதரி என்ற மாணவருக்கானது என்றும் பதில் அனுப்பியுள்ளது. இதனால், தோமரின் சட்டக் கல்வி பயின்றதாக சமர்ப்பித்துள்ள சான்றிதழ் போலியானது எனத் தெரிய வந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

பாரதச் செய்தி

# பிரபாகரன் சிலை அகற்றம்; ஜனநாயக உரிமை பறிப்பு!

(சென்னை)

**தமிழகத்தின் பல ஊர்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனின் படங்கள், உருவச்சிலைகளை பொலிஸார் கைப்பற்றி இருப்பது ஜனநாயக உரிமையை பறிக்கும் செயல் என உலகத்தமிழர் பேரமைப்பு தலைவர் பழ.நெடுமாறன் கண்டித்துள்ளார்.**

## பழ.நெடுமாறன் கண்டனம்



தஞ்சையில் உலகத்தமிழர் பேரமைப்பு தலைவர் பழ.நெடுமாறன் நேற்று முன்தினம் ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

தஞ்சையில் உள்ள முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் உலகத்தமிழர் பேரமைப்பு 8ஆவது மாநாடு உலகத்தமிழர் வாழ்வுரிமை மாநாடாக எதிர்வரும் 14ஆம் திகதி நடைபெறுகிறது. காலை 9 மணிக்கு தொடங்கி இரவு 9 மணி வரை மாநாடு நடைபெறுகிறது. இதில் கருத்தரங்கம், நூல்கள் வெளியீடு, நிறைவரங்கம் போன்றவை நடை பெறுகிறது.

இதில் பலர் கலந்து கொண்டு பேசுகிறார்கள். இலங்கை வடக்கு மாகாண குழு உறுப்பினர் அனந்தி அந்த நாட்டில் உள்ள நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவில் தனது கணவரும், விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர்களில் ஒருவருமான எழிலன் என்ற சசிதரன் 2009ஆம் ஆண்டில் போர் நெருக்கடி நிகழ்ந்த காலத்தில் இந்திய மாநிலங்களவை உறுப்பி னர் கனிமொழிக்கு தொலைபேசி மூலம தொடர்பு கொண்டு பேசினார்.

கனிமொழியின் ஆலோசனையின் பேரில் எழிலனும், அவருடன் பலரும் சரண் அடைந்தனர். ஆனால அவர்களைப்பற்றி எந்த தகவலும் எங்களுக்கு தெரியவில்லை. இது தொடர்பாக கனிமொழியை தொடர்பு கொள்ள பலமுறை முயற்சி செய்தும் முடியவில்லை என கூறியுள்ளார். இதற்கு கனிமொழி சார்பில் தி.மு.க.வினர் செய்தி தொடர்பாளர் டி.கே.எஸ்.இளங்கோவன் அளித்துள்ள பதில் வேடிக்கையாக இருக்கிறது.

விடுதலைப்புலிகளை சரணடையுமாறு யாரும் ஆலோசனை கூறவில்லை என்றும் போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என இந்திய அரசை வற்புறுத்தி வந்த நிலையில் அது நிறைவேறாமல் போன போது, விடுதலைப் புலிகளை எப்படி சரணடைய சொல்வோம். புலிகள் இயக்கத்தை சேர்ந்தவர்கள் தாங்களாகவே முடிவு எடுப்பார்களே தவிர, வெளியாட்களின் ஆலோசனைகளை கேட்கமாட்டார்கள் என்பதை அந்த இயக்கத்தை பற்றி அறிந்தவர்களுக்கு தெரியும் என அவர் விளக்கம் அளித்துள்ளார்.

ஆனால் இலங்கை போர் முடிந்த பிறகு 2011ஆம் ஆண்டில் எங்கள மீது கனிமொழி பகிரங்கமான குற்றச்சாட்டை முன்வைத்தார். விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் எங்களிடம் ஆலோசனை கேட்ட போது ஆயுதங்களை கீழே வைத்து விட்டு சரணடையுமாறு கூறிய போது நெடுமாறனும், வைகோவும் சரணடைய வேண்டாம் என்றும், போரை தொடருங்கள் எனவும் அவர்களுக்கு தவறான வழிகாட்டு வதாக குற்றம் சாட்டினார். இந்த குற்றச்சாட்டை இப்போது இளங்கோவனே மறுத்திருப்பது விசித்திரமாக உள்ளது.

இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், முன்னாள் ஜனாதிபதி மகிந்தவுக்கும் பெரிய வேறுபாடு இல்லை என்பதை சிறிசேனவின் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கை மூலம் தெரிய வருகிறது. எனவே சிறிசேனவை சர்வதேச நாடுகள் புரிந்து கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். பல ஊர்களில் பிரபாகரனின் படங்கள், உருவச்சிலைகளை பொலிஸார் கைப்பற்றி இருப்பது ஜனநாயக உரிமையை பறிக்கும் செயல். அரசியல் சட்டம் வழங்கி உள்ள உரிமைகளை பறிப்பதை வன்மையாக கண்டிக்கிறோம்.

அரசு தனது போக்கை திருத்திக் கொள்ளாவிட்டால் போராட்டம் நடத்துவதை தவிர வேறு வழியில்லை. தமிழக மீனவர்களை இலங்கை கடற்படை தாக்கவில்லை என இல.கணேசன் கூறியிருப்பது முழு பூசணிக்காயை சோற்றில் மறைக்கும் செயல். இதுவரை தமிழக மீனவர்களை, இலங்கை மீனவர்கள் தாக்கவில்லை. இலங்கை கடற்படை தான் தாக்கி உள்ளது. அதை தடுத்து தமிழக மீனவர்களை காப்பாற்ற இந்திய கடற் படை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று பழ.நெடுமாறன் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# அங்கோர் வாட் கோயில் அமைக்க கம்போடியா அரசு கடும் எதிர்ப்பு

(புனோன் பென்)

அங்கோர் வாட் கோயிலின் மாதிரியில் பீகாரில் கோயில் கட்டுவதற்கு கம்போடிய அரசு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

பீகாரின் வைஷாலி நகரில் உலகின் மிகப் பெரிய ராமர் கோயிலைக் கட்ட மகாவீர் மந்திர் அறக்கட்டளை திட்டமிட்டுள்ளது. 161 ஏக்கர் பரப்பில் 2800 அடி நீளம் 1400 அடி அகலம், 405 அடி உயரத்தில் கோயில் கட்டப்படவுள்ளது. இங்கு ஒரே நேரத்தில் 20 ஆயிரம் பேர் தரிசனம் செய்ய முடியும்.

கம்போடியாவில் உள்ள 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அங்கோர் வாட் கோயிலின் மாதிரி வடிவில் புதிய கோயில் கட்டப்பட உள்ளதாக மகாவீர் மந்திர் அறக்கட்டளை அறிவித்துள்ளது.

இதற்கு கம்போடியா அரசு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. இதுகுறித்து அந்நாட்டு அரசு இந்திய வெளியுறவுத்துறைக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது,

கம்போடியாவின் தேசிய கொடியில் அங்கோர் வாட் கோயில் சின்னம் இடம் பெற்றுள்ளது. இந்த கோயில உலகின் புராதன சின்னங்களில் ஒன்றாகும்.

ஆனால் வணிக நோக்கத்தில் அங்கோர் வாட் கோயில் போல பீகாரில் கோயில் கட்டப்படுவது உலக பாரம்பரிய சின்னத்தை அவமதிக்கும் செயல். இதை இந்திய அரசு தடுக்க வேண்டும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கம்போடியாவின் வடமேற்கு பகுதியில் ரீப்ல் மாகாணத்தில் அடர்ந்த வனப்பகுதியில் அங்கோர் வாட் கோயில் அமைந்துள்ளது. இந்த கோயில் 1992ஆம் ஆண்டு யுனெஸ்கோவின் உலக பாரம் பரிய பட்டியலில் சேர்க்கப்பட்டது. கடந்த 4 மாதங்களில் மட்டும் அங்கோர் வாட் கோயிலை 842719 சுற்றுலாப் பயணிகள் பார்வையிட்டுள்ளனர். (இ-5)

# பலாத்கார சோதனை சர்ச்சை சுகாதார அமைச்சு விளக்கம்

இரு விரல் சோதனை முறை குறித்த டில்லி சுகாதார அமைச்சகத்தின் சுற்றறிக்கை தவறாக புரிந்துகொள்ளப்பட்டுள்ளதாக அம்மாநில சுகாதார அமைச்சர் சத்யேந்திர ஜெயின் விளக்கமளித்துள்ளார்.

பாலியல் பலாத்காரத்துக்கு உள்ளானவர்களிடம் அவர்களது கன்னித்தன்மையை உறுதி செய்ய நடத்தப்படும் இரு விரல் சோதனை அறிவியல் பூர்வமற்றது என்று கூறி அந்த சோதனையை மத்திய சுகாதார அமைச்சகம் தடை செய்துள்ளது.

இந்நிலையில், கடந்த மே 31ஆம திகதியன்று டில்லி சுகாதாரத்துறை அனுப்பிய சுற்றறிக்கையில், அடிப்படையான இச்சோதனையை விலக்கி வைப்பது பாதிக்கப்பட்டவருக்கு நீதி கிடைக்காமல் தடுக்கச் செய் யும். இதனால் குற்றவாளிகள் தப்பிக்கும் சூழல் ஏற்படும். எனவே பாதிக்கப்பட்ட பெண்ணின் சம்மதத் தோடு இரு விரல் சோதனை மேற் கொள்ளலாம்" எனத் தெரிவிக்கப்படடிருந்தது.

இதற்கு சமூக ஆர்வலர்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு கிளம்பியது. இந்நிலையில் அரசின் சுற்றறிக்கை தவறாக புரிந்து கொள்ளப்பட்டதாக விளக்கியுள்ள சுகாதார அமைச்சர் சத்யேந்திர ஜெயின், பலாத்காரத்துக்குள்ளான பெண்களுக்கான சிகிச்சை வழிகாட்டு நெறிகள் தவறாக புரிந்து கொள்ளப்பட்டுள்ளது.


இரு விரல் சோதனை பாலியல் பலாத்காரத்துக்கு உள்ளா னவர்களிடம் நடத்தப்படக்கூடாது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானத் தாக்குதலில் சிக்கிய சிறுவர்கள் உட்பட 49பேர் பலி

**(பெய்ரூட்)**

**சிரியாவில் அரசுப் படையினர் கடந்த திங்கட்கிழமை நிகழ்த்திய விமானத் தாக்குதலில் 6 சிறுவர்கள் உட்பட 49 பேர் உயிரிழந்ததாக சிரியா மனித உரிமைக் கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.**







இதுகுறித்து அந்த அமைப்பின் இயக்குநர் ரமி அப்தெல் ரஹ்மான் தெரிவிக்கையில், சிரியாவின் இத்லிப் மாகாணத்தில், கிளர்ச்சியாளர்கள் வசமுள்ள அல்-ஜானுதியா நகரின் முக்கிய சதுக்கம் ஒன்றில் கடைகள் அதிகம் இருப்பதால் எப்போதும் அங்கு அதிக அளவில் மக்கள் குழுமியிருப்பர்.

போரால் பாதிக்கப்பட்ட பிற பகுதிகளில் இருந்தும் அல்-ஜானுதியா நகரில் ஏராளமானோர் தஞ்சமடைந்திருந்தனர். இந்த நிலையில், அந்த நகரின் மீது சிரியா அரசுப் படைகள் ஏவுகணைத் தாக்குதல் நிகழ்த்தின.

மக்கள் நெருக்கம் நிறைந்த சதுக்கத்திலும் தாக்குதல் நிகழ்த்தப்பட்டது. இதில் 49 பேர் பலியாகினர். உயிரிழந்தவர்களில் 6 பேர் சிறுவர்கள் என்றார் ரமி அப்தெல் ரஹமான்.

இத்லிப் மாகாணத் தலைநகர் இத்லிப்பை கிளர்ச்சிப் படையினர் கடந்த மார்ச் மாதம் கைப்பற்றினர்.

அதனைத் தொடர்ந்து அந்த மாகாணத்தில் தொடர்ந்து முன்னேறி வந்த அவர்கள், கடந்த ஏப்ரல் 25ஆம் திகதி அல்-ஜானுதியா நகரைக் கைப்பற்றினர்.

இத்லிப் மாகாணத்தில் மிகச் சொற்பமான பகுதியே தற்போது அரசின் கைவசம் உள்ள நிலையில், மாகாணத்தை மீண்டும் கைப்பற்ற, இத்தகைய தீவிர தாக்குதல்களில் அரசு ஈடுபடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

## இராணுவம்-பயங்கரவாதிகள் பாகிஸ்தானில் கடும் மோதல்

### 26பேர் உயிரிழப்பு

பாகிஸ்தானில் பதற்றம் நிறைந்த பழங்குடியினப் பகுதியில் இராணுவத்துடன் நிகழ்ந்த மோதலில் தலிபான் அமைப்பின் முக்கிய தளபதிகள் உட்பட 19 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதாகவும்,7 வீரர்கள் உயிரிழந்ததாகவும் அதிகா ரிகள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து இராணுவ செய்தித் தொடர்பாளர் அசீம் சலீம் பாஜ்வா தெரிவிக்கையில்,

ஆப்கானிஸ்தானையொட்டிய வடக்கு வஜிரிஸ்தான் பகுதியில் இராணுவத்துக்கும், தலிபான்களுக்கும் இடையே கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு சண்டை நிகழ்ந்தது.

இதில், 9 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்.

தலிபான் அமைப்பின் முக்கிய தளபதிகள் 5 பேர் இதில் அடங்குவர். இந்தச் சண்டையில் இராணுவ வீரர்கள் 7 பேர் உயிரிழந்தனர் என்றார் அவர்.

இராணுவம் சுற்றிவளைத்த போது, பயங்கரவாதிகளில் ஒருவர் உடலில் மறைந்து வைத்திருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்ததில் 7 வீரர்களும் உயிரிழந்ததாக பாஜ்வா தெரிவித்தார். (இ-5)


## ரோஹின்ஜா முஸ்லிம்களுக்கெதிரான வன்முறைகள் நிறுத்தப்படல் வேண்டும்

### மியன்மாருக்கு மலாலா வலியுறுத்தல்

(இஸ்லாமாபாத்)

மியன்மார் அரசாங்கத்தால் சட்ட விரோதமாக குடியேறியவர்களாக கருதப்பட்டு வரும் ரோஹிஞ்ஜா முஸ்லிம்கள் மீதான வன்முறை சம்பவங்களை, துன்புறுத்தப்படும் நிகழ்வுகளை உடனடியாக தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என மியன்மார் நாட்டு தலைவர்களிடம், நோபல் பரிசு வென்ற பாகிஸ்தானின் மலாலா யூஸப்ஸாயி வலியுறுத்தியுள்ளார்.

மேலும், மியன்மாரில் வாழும் மக்களுக்கு இணையான உரிமைகளும், சலுகைகளும் ரோஹின்ஜா முஸ்லிம்களுக்கும் வழங்கப்பட வேண்டும். அதற்கு அவர்களுக்கு



முழு உரிமையும் உண்டு. பல தலை முறைகளாக அங்கு வாழ்ந்து வரும் நிலையில் ரோஹின்ஜா முஸ்லிம்களும் அந்நாட்டின் மக்கள்தான்.

இன்றும், என்றும் நான் ரோஹின்ஜா முஸ்லிம்களின் உரிமைகளுக்காக போராடுவேன் என் தெரிவித்துள்ளார். (இ-5)




## ஹெய்ட்டியில் ஒட்டிப்பிறந்த இரட்டைக் குழந்தைகள் அறுவைச்சிகிச்சை மூலம் வெற்றிகரமாக பிரிப்பு



ஹெய்ட்டியில் ஒட்டிப் பிறந்த 6 மாத இரட்டைப் பெண் குழந்தைகளை அறுவைச்சிகிச்சை மூலம் வெற்றிகரமாக பிரித்து சர்வதேச சத்திரசி கிச்சை நிபுணர்களைக் கொண்ட குழுவொன்று சாதனை படைத்துள்ளது.

வயிற்றுப் பகுதியில் ஒட்டிய நிலையில் பிறந்த மரியன் மற்றும் மிசெல்லி பெர்னார்ட் ஆகிய இந்த இரு குழந்தைகளும் அமெரிக்க லொஸ் ஏஞ்சல்ஸ் நகர சத்திரசிகிச்சை நிபுணர்களான ஜேம்ஸ் ஸ்ரெயின் மற்றும் ஹென்றி போர்ட் உள்ளடங்கலாக 18 வைத்தியர்கள் மற்றும் மருத்துவ தாதிகளைக் கொண்ட குழுவினரால் 7 மணி நேர அறுவைச்சிகிச்சை மூலம் பிரிக்கப்பட்டுள்ளனர்.

இத்தகைய அறுவைச்சிகிச்சை ஹெய்ட்டியில் மேற்கொள்ளப்படுவது இதுவே முதல் தடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## ஆளில்லா விமானங்களைக் கொண்டு தேர்வுகளைக் கண்காணிக்கும் சீனா

முறைகேடுகளை தடுக்கும பொருட்டு ஆளில்லா விமானங்கள் மூலம் பல்கலைக்கழக நுழைவு தேர்வுகளை கண்காணிக்கும் முறையை சீனா அறிமுகப்படுத்தியுள்ளது.

சீனாவில் ஆண்டுதோறும் 10 மில்லியன் மாணவர்களுக்கு பல்கலைக்கழக நுழைவு தேர்வுகளை எழுதுகிறார்கள். மிகவும் முக்கிய ததுவம் வாய்ந்த இத்தேர்வில் வெற்றி பெறும் பொருட்டு மாணவர்கள் பல்வேறு அதிநவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி முறைக்கேடுகளில் ஈடுபடுகின்றனர்.

எனவே இதனை தடுக்கும் வகையில் உயர் தொழில்நுட்ப ரேடியோ கண்காணிப்பு கருவிகள் அல்லது ஆளில்லா விமானங்களை தேர்வு நடைபெறும் மையங்களில் பறக்க விடப்பட்டு தேர்வுகள் கண்காணிக்கப்படுகிறது. (இ-5)

### ஆய்வில் அதிர்ச்சித் தகவல்

உலகில் உள்ள மொத்த மக்கள் தொகையில் 95 சதவீதம் பேருக்கு உடலில் நோய் இருப்பதாகவும், மூன்றில் ஒரு பங்கு மக்களுக்கு ஐந்து நோய்கள் இருப்பதாகவும், ஆய்வொன்றில் அதிரவைக்கும் தகவல்கள் தெரிய வந்துள்ளன. லான்சட் என்ற இதழ் 2013 இல் நடத்திய உலகளாவிய நோய்ச் சுமை ஆய்வில் தான் இந்த அதிர்ச்சி தகவல் கிடைத்துள்ளது. அதன்படி உலகிலேயே 20 பேருக்கு ஒருவர் தான நோயில்லாமல் இருக்கிறாராம். ஆய்வில்நோய பிரச்சினைகளால் ஆரோக்கியமான [illegible] டுகள் 1990இல் 21 சத வீதமாக இருந்தது. ஆனால் 2013இல் அது 31 சத வீதமாக அதிகரித்துள்ளது. (இ-5)

## 8,000 ஊழியர்களை பணிநீக்க எச்.எஸ்.பி.சி. வங்கி புதிய திட்டம்

(பாரிஸ்)

ஐரோப்பாவில் தலைமையிடத்தைக் கொண்டு இயங்கி வரும் தனியார் வங்கியான எச்.எஸ்.பி.சி. வங்கி தனது பொருளாதாரத்தை உயர்த்தும் வகையில் சுமார் 8 ஆயிரம் ஊழியர்களை பணிநீக்கம் செய்ய முடிவு செய்துள்ளது.

துருக்கி மற்றும் பிரேசிலில் தங்களது வர்த்தகத்தை விற்றுவிடவும் முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்த இறுதி முடிவு இந்த ஆண்டு இறுதியில் எடுக்கப்பட்டு அறிவிக்கப்படும் என்று அறிவிப்பு வெளியாகியுள்ளது. இதேவேளை வங்கியின் இந்த நடவடிக்கைக்கு கடுமையான எதிர்ப்பு வெளியாகியுள்ளது. அதேவேளை பணிநீக்கம் செய்யப்படவுள்ள ஊழியர்கள் போராட்டம் நடத்தவும் தீர்மானித்து வருகின்றனர். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநேகர் தங்கள் காலத்தில் பெரும்பாகத்தை பிறரை அவலத்திற்கு உள்ளாக்குவதிலேயே கழிக்கின்றனர். - லா புரூயர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# பாராளுமன்றத்தைக் கலைப்பது உடனடிச் சாத்தியம் இல்லை

20ஆவது திருத்தச் சட்டமூலத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. பாராளுமன்றத்தில் 20ஆவது திருத்தச் சட்டமூலம் நிறைவேற்றப்படுமா? என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டுமாயினும் 20ஆவது திருத்தச் சட்டமூலத்திற்கு பாராளுமன்றத்தில் ஆதரவு கிடைக்காவிட்டால், பாராளுமன்றம் கலைக்கப்படும் என்று சொல்வதற்கான சாத்தியப்பாடுகள் குறைவாகவே உள்ளன.

19ஆவது திருத்தச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேறியதும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கர்ச்சிக்கத் தொடங்கியுள்ளார். நான் பிரதமரானால் சிறைச்சாலைகளில் இடப்பற்றாக்குறை ஏற்படும் என்ற அவரின் கருத்து, ஜனாதிபதியிடம் இருந்த அதிகாரத்தை பிரதமருக்கு மாற்றிவிட; முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரதமராகும் ஆசையில் இப்போதே அறிக்கைவிட தொடங்கியுள்ளார்.

நான் பிரதமரானால் சிறைச்சாலையில் இடப்பற்றாக்குறை ஏற்படும் என்று கர்ச்சிக்கின்ற அளவில் மகிந்த ராஜபக்ஷவின் துணிச்சல் இருக்கிறது எனில் பாராளுமன்றத்தைக் கலைப்பது பற்றி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிந்திப்பது அவசியம்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக தேர்தலில் வெற்றிபெற்ற மைத்திரிபால சிறிசேன கூறிய முதல் வார்த்தை, நான் யாரையும் பழிவாங்க மாட்டேன் என்பதாகும்.

அதேநேரம் தேர்தலில் தோற்றுப்போன மகிந்த ராஜபக்ஷ, 19 ஆவது திருத்தச்சட்ட மூலம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டபோது கூறிய முதல் வார்த்தை, நான் பிரதமரானால் சிறையில் இடப்பற்றாக்குறை ஏற்படும் என்பதாகும்.

ஆக, இலங்கையின் ஆட்சியில் தனிமனித அதிகாரங்கள் தனியாள் வேறுபாடுகள் மிக மோசமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை இதிலிருந்து இந்த நாட்டுமக்கள் உணர முடியும்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீதும் அவரது குடும்பத்தின் மீதும் ஏகப்பட்ட குற்றச்சாட்டுக்கள். மகிந்த ராஜபக்ஷவின் சகோதரரும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருமான பசில் ராஜபக்ஷ இப்போது சிறையிலேயே உள்ளார்.

மகிந்தவின் மனைவி ஷிராந்தி ராஜபக்ஷ மீது நிதி மோசடி விசாரணைகளை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். மகிந்தவின் அடுத்த சகோதரர் கோத்தபாய ராஜபக்ஷவை கைது செய்வதற்கான முயற்சிகள் நடைபெற்ற போதும் நீதிமன்றின் தலையீட்டால் அந்தக் கைது காலதாமதமாகிறது.

நிலைமை இதுவாக இருக்கையில், நான் பிரதமரானால் சிறைச்சாலைகளில் இடப்பற்றாக்குறை ஏற்படும் என்று மகிந்த கூறியிருப்பது ஆழ்ந்து கவனிக்கத்தக்கது.

அதேநேரம் மகிந்த ராஜபக்ஷவின் மேற்போந்த கூற்று அவரின் இராஜதந்திரப் பலவீனம் என்பதையும் சொல்லித்தான் ஆகவேண்டும்.

எதுவாயினும் பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலை நடத்துதல் என்பது உடனடிச்சாத்தியமாகாது என்பதை மட்டும் இப்போதைக்குக் கூற முடியும்.

அதை மீறி பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தலை நடத்துதல் என ஜனாதிபதி மைத்திரி நினைத்தால் மகிந்தவை மடக்கும் மகாதிட்டம் ஒன்று பின்னணியில் நிறைவேறி விட்டது என்றே பொரு ள் கொள்ளவேண்டும். எதற்கும் பொறுத்திருந்து பார்ப்போம்.

## கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி சிறுப்பிட்டி அ.த.க. பாடசாலையின் ஆரம்பக் கல்வி கண்காட்சி இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலைமண்டபத்தில்நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ப.சுதர்சன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆ.சு.சற்குணராஜா, சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்ட ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி செல்வதயாளன், கௌரவ விருந்தினராக சிறுப்பிட்டி இ.த.க. பாடசாலை அதிபர் சு.பரமேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (3)

## இறுவெட்டு வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சுட்டிபுரம் கண்ணகை அம்மனின் பாமாலை இறுவெட்டு வெளியீட்டு விழா நாளை மறுதினம் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கண்ணகை அம்மன் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன்மற்றும்கௌரவ விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (3-7)

## ஆங்கிலப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வியமைச்சின் கீழ் இயங்கும் STEPS Institute இனால் நடத்தப்படும் பாடசாலை விடுகை மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக புகுமுக மாணவர்களுக்கான ஆங்கிலப் பயிற்சி நெறியின் அடுத்த பிரிவுக்கான பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பயிற்சியை பின்பற்ற விரும்புபவர்கள் தமது விபரங்களை யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் அமைந்துள்ள STEPS Institute இல் 2015.06.11 வியாழக்கிழமைக்கு முன்னர் பதிவு செய்து கொள்ளவும்.

மேலதிக விபரங்களுக்கு 021 222 4580, 021 222 1395 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## அருணலு பரிசளிப்பு விழா

(கரணவாய்)

கொமர்ஷல் வங்கியினால் வருடாந்தம் நடத்தப்படும் தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான அருணலு பரிசளிப்பு விழா கொமர்ஷல் வங்கி நெல்லியடிக் கிளையின் ஏற்பாட்டில் இன்று புதன் கிழமை தடங்கன்புளியடி முருகமூர்த்தி மண்டபத்தில் பிற்பகல் 3.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

மேலும் இப்பரிசில் வழங்கும் திட்டமானது பாடசாலை மட்டத்தில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு முறையே ரூபாய் 10 ஆயிரம், ரூபாய் 7500, ரூபாய் 5000 வழங்கப்படுகிறது. இம்முறை 52 மாணவர்கள் இப்பரிசிலைப் பெற்றுக் கொள்ள தகுதி பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3-60)

# ரணில் ஜனாதிபதி ஆகியிருந்தால் எல்லோரையும் சிறையில் அடைத்திருப்பார்

## முன்னாள் அமைச்சர் அதாவுல்லா சாடல்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 42 ஆசனங்களை வைத்துக் கொண்டு எதிர்காலத்தில் எவ்வாறு வெற்றிபெற முடியும் என்பது மக்களின் கேள்வியாகும்.

அவர் ஜனாதிபதி ஆகியிருந்தால் எல்லோரையும் சிறையில் அடைத்திருப்பார் சிறைச்சாலைகளில் இடமிருந்திருக்காது என்று முன்னாள் அமைச்சரும் தேசிய காங்கிரஸின் தேசிய தலைவருமான ஏ.எல்.எம். அதாவுல்லா நேற்றுச் செவ்வாய்க் கிழமை தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வித்தியாசமான வழிகளிலேயே பதவிகளுக்கு வந்துள்ளார். அவரது ஆட்சிக்காலத்தில் யாருக்கும் நிம்மதி இருக்கவில்லை.

அவருக்கு ஜனாதிபதியாகும் வாய்ப்பு பல தடவைகள் நழுவிச்சென்றுள்ளன. அவ்வாறு கிடைத்திருந்தால், அவர் எல்லோரையும் சிறையில் அடைத்திருப்பார்.

மக்கள் இன்று விரக்தி மனப்பாங்கில் உள்ளனர். புதிய அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட 100 நாட்கள் வேலைத்திட்டம் வெற்றியளிக்கவில்லை.

அரசாங்கம் இதற்கு கொடுத்த முக்கியத்துவத்தைவிட, அரசியல் பழிவாங்கல்களுக்கே முன்னுரிமை வழங்குகின்றது என அவர் தெரிவித்தார்.

அரசியலுக்காக தங்களின் இருக்கைகளை காப்பாற்றிக்கொள்வதற்காகவே இன்று அநேகமான அரசியல்வாதிகள் யதார்த்தத்தை மறந்து செல்கின்றனர்.

இன்றுள்ள அரசியல் கொந்தளிப்பில் சரியான முடிவை எடுப்பதற்கான ஒரு சூழ்நிலை எமக்கு கிடைக்கும்வரையில் காத்துக்கொண்டிருக்கின்றோம் எனவும் அதாவுல்லா கூறினார். (செ-11)

# யாழ். பாடசாலைகளில் விழிப்புணர்வு நடவடிக்கை

## பொலிஸார் ஆரம்பித்தனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பாடசாலை மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் ஒவ்வொரு பாடசாலைகளிலும் விழிப்புணர்வு கருத்தரங்கை நடத்தும் நடவடிக்கையை யாழ். பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

அந்தவகையில் நேற்றையதினம் யாழ்.வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் யாழ் பிரதான பொலிஸ் பரிசோதகர் யீ.யூ.உக்லர் தலைமையில் இக்கருத்தரங்கு ஆரம்பிக்கப்பட்டது.

இந்த விழிப்புணர்வு நடவடிக்கையின் முக்கிய நோக்கமாக பாடசாலை மாணவர்களை பாதுகாப்பது, மாணவர் மத்தியில் போதைப்பொருள் பாவனையை இல்லாமல் செய்வது, பாரிய குற்றங்களை கட்டுப்படுத்துவது போன்ற முக்கிய நோக்கத்தை கொண்டே இந்த விழிப்புணர்வு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த விழிப்புணர்வு கருத்தரங்கில் மாணவர்கள், பெரியவர்களை எவ்வாறு கனம் பண்ணவேண்டும், தொலைபேசி பாவனையை கட்டுப்படுத்த வேண்டும், இளவயதில் திருமணம் செய்தலை தவிர்த்தல், போக்குவரத்தில் கவனம் மற்றும் பெற்றோர் ஆசிரியர்களுடன் கூடிய நேரம் தொடர்புகளில் இருக்கவேண்டும் என பல அறிவுரைகள் மாணவிகளுக்கு வழங்கப்பட்டது.

இந்த விழிப்புணர்வு கருத்தரங்கு தொடர்ச்சியாக அனைத்து பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் நடைபெறவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (3-9)

# பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

## என்றும் உண்மையே பேசுங்கள்



✦ எப்பொழுதும் உண்மையே பேச வேண்டும். அப்பொழுதுதான் உண்மையின் ரூபமாகிய இறைவனை காண முடியும். இறைவனிடம் உள்ளப் பூர்வமான பக்தி கொள்ள வேண்டும். அலுவலகத்திலும், வியாபாரத்திலும் உண்மை நெறி தவறக்கூடாது. கபட வேஷத்தையும், ஏமாற்றுவதையும் விட்டுவிட்டு உண்மையே பேசினால் கடவுளைக் காணலாம்.

✦ ஒரு மனிதனுக்குக் கடன் அதிகமாகிவிட்டது, அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக அவன் பைத்தியம் பிடித்தவன் போல் நடிக்க ஆரம்பித்து விட்டான். வைத்தியனால் குணமும் அடையவில்லை. கடைசியில் கெட்டிக்கார வைத்தியன் ஒருவன் உண்மையைத் தெரிந்து கொண்டான். அந்த போலிப் பைத்தியத்தைத் தனியாக அழைத்துச் சென்று "அடேய்! நீ என்ன காரியம் செய்து கொண்டிருக்கிறாய்! பைத்தியமாக நடித்துக் கொண்டிருந்தால், உண்மையாகவே உனக்குப் பைத்தியம் பிடித்து விடும். இப்பொழுது உன்னிடம் பைத்தியத்திற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. ஜாக்கிரதையாக இரு!" என்று எச்சரித்தான். இதைக் கேட்ட அந்த மனிதன் பயந்துபோய் பைத்தியமாக நடிப்பதை விட்டுவிட்டான். எவ்வளவுதான் மூடி மறைத்தாலும் உண்மை ஒருநாள் வெளிவந்தே ஆகவேண்டும்.

✦ பொய், அனைத்தையும் விட கெட்டது. பொய் வேஷம் போடுவதும் கெட்டதே. ஒருவன் பொய் பேசுவதில் விருப்பம் கொண்டால், பொய்யின் மேலுள்ள பயம் அவனுக்குப் போய்விடும். வாய்மையே வெல்லும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா-பங்களாதேஷ் டெஸ்ட்

## இன்று ஆரம்பம்





இந்திய கிரிக்கெட் அணி ஒரே ஒரு டெஸ்ட் மற்றும் 3 ஒருநாள் போட்டிகளில் விளையாடுவதற்காக நேற்று முன்தினம் பங்களாதேசம் சென்றடைந்தது. இந்தியா-பங்களா தேசம் அணிகள் மோதும் டெஸ்ட் போட்டி பதுல்லாவில் இன்று தொடங்குகிறது.

டோனியின் திடீர் ஓய்வுக்கு பிறகு விராட் கோலி டெஸ்ட் கப்டன் பொறுப்பை ஏற்றுள்ளார். அவுஸ்தி ரேலியாவில் நடந்த கடைசி டெஸ்டில் அவரது தலைமையிலான அணி சிட்னியில் சமநிலை செய்தது. .இது கோலி தலைமையில இந்திய அணிவிளையாடும் 3 ஆவது டெஸ்ட் ஆகும். அவரது கப்டன் பதவியில்முதல் வெற்றியை பெறும் ஆர்வத்தில் இந்திய அணி தற்போதுள்ளது.

ஐபிஎல் 20 ஓவர் போட்டியில் விளையாடிய நிலையில் டெஸ்ட் போட்டியை இந்திய வீரர்கள் எதிர்கொள்கிறார்கள். ரோஹித் ஷர்மா, ரஹானே, முரளி விஜய், தவான், புஜாரா போன்ற சிறந்த பட்ஸ்மன்களும், உமேஷ் யாதவ், புவனேஸ்வர் குமார், இஷாந்த் ஷர்மா, அஸ்வின் போன்ற சிறந்த பவுலர்களும் அணியில் உள்ளனர். டெங்கு காய்ச்சல் காரணமாக ராகுல் கடைசி நேரத்தில்அணியில்இருந்து விலகினார்.

ஐ.பி.எல். போட்டியில் சிறப்பாக பந்து வீசியதால் ஹர்பஜன் சிங்குக்கு 2 ஆண்டுகளுக்கு பிறகு அணியில் இடம் கிடைத்துள்ளது. அவர் கடைசியாக 2013 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவுக்கு எதிராக ஐதராபாத்தில் நடந்த டெஸ்டில் ஆடினார். 34 வயதான ஹர்பஜன் சிங் 413 விக்கெட்டை கைப்பற்றி இருக்கிறார்.

பங்களாதேச அணி சமீபத்தில் உலககோப்பை மற்றும் பாகிஸ்தான் தொடரில் சிறப்பாக விளையாடியது. இதனால் இந்திய அணிக்கு எல்லா வகையிலும் சொந்த மண்ணில் சவால் கொடுத்து விளையாட முடியும் என்ற நம்பிக்கையில் அந்த அணி உள்ளது.

முஸ்பிகுர் ரஹீம் தலைமையிலான பங்களாதேச அணியில் ஷகீப்-அல்-ஹசன், தமிம் இக்பால், இம்ருல் கய்ஸ், ரூபல் ஹுசேன் போன்ற சிறந்த வீரர்கள் உள்ளனர்.

ஓல்ரவுண்டர் ஷகீப்-அல்-ஹசன் அந்த அணியின் மதிப்புமிக்க வீரர் ஆவார். அவர் அந்த அணியின் முதுகெலும்பாக இருக்கிறார். இந்த போட்டியில் கப்டன் முஸ்பிகுர் ரஹீம் விக்கெட் கீப்பராக பணியாற்றமாட்டார். லிட்டன் தாஸ் அவருக்கு பதிலாக விக்கெட் கீப்பராக பணிபுரிவார்.

பங்களாதேசத்துக்கு எதிரான இந்திய அணி தோற்றது இல்லை. இதனால் இந்திய அணி மிகுந்த நம்பிக்கையுடன் உள்ளது.

இரு அணிகளும் கடைசியாக 200ஆம் ஆண்டு ஜனவரி மாதம் டாக்காவில மோதிய டெஸ்டில் இந்தியா 10 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்திய அணிகடைசியாக அவுஸ்திரேலியாவுடன் விளையாடிய டெஸ்ட் சமநிலை' ஆனது. பங்களாதேச அணி கடைசியாக பாகிஸ்தானுடன் ஆடிய டெஸ்ட் 'சமநிலை' ஆனது என்பது குறிப்பிடத்தக்கது. இன்றைய டெஸ்ட் இந்திய நேரப் படி காலை 9.30 மணிக்கு தொடங்குகிறது.

இரு அணி வீரர்கள் விபரம்:

இந்தியா: விராட் கோலி (கப்டன்), தவான், முரளி விஜய், புஜாரா, ரஹானே, ரோஹித் ஷர்மா, விர்த்திமான் சஹா(விக்கெட் கீப்பர்), அஸ்வின், ஹர்பஜன் சிங், இஷாந்த் ஷர்மா, உமேஷ் யாதவ், புவனேஸ்வர் குமார், வருண் ஆரோன, கர்ண் ஷர்மா.

பங்களாதேசம்: முஸ்பிகுர் ரகீம் (கப்டன்), தமிம் இக்பால், அபுல் ஹசன், இம்ருல் கய்ஸ், ஜுபைர் ஹுசைன், லிட்டன் தாஸ் (விக்கெட் கீப்பர்), முகமது ஷகீத், மொமினுல் ஹக், நாசிர் ஹுசேன், ரூபெல் ஹுசேன், ஷகீப்-அல்-ஹசன், சுவகடா ஹோம், சவுமியா சர்கார், தஜிஜுல் இஸ்லாம் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். (க)

# யாழ்.மாவட்ட அணி சம்பியன்



வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடமாகாண மாவட்டங்களுக்கிடையில நடத்தப்பட்ட ஆண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் யாழ். மாவட்ட அணி சம்பியனாகியது.

கிளிநொச்சி கனகபுரம் பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதிப்போட்டியில் யாழ்.மாவட்ட அணியும் மன்னார் மாவட்ட அணியும் மோதின.

ஐந்து சுற்றுக்களைக் கொண்ட இந்த இறுதிப்போட்டியில் முதற் சுற்றை மன்னார் மாவட்ட அணி 25:22 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது. இரண்டாது சுற்றில் மீண்டெழுந்த யாழ்.மாவட்ட அணி, அந்தச் சுற்றை 25:20 என்ற புள்ளிகள் அடிப்படையிலும், மூன்றாவது சுற்றை 26:24 என்ற புள்ளிகள் அடிப்படையிலும் கைப்பற்றியது.

மீண்டும் தமது ஆதிக்கத்தை வெளிப்படுத்திய மன்னார் அணி நான்காவது சுற்றை 25:23 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது. இதனால் விறுவிறுப்படைந்த ஐந்தாவதும் இறுதிச் சுற்றிலும் ஆக்ரோஷமாக ஆடிய யாழ்.மாவட்ட அணி 15:11 என்ற புள்ளிகள் அடிப்படையில் 3 சுற்றுக்களை தனதாக்கி சம்பியனாகியது. (க)

# காதலியை கொலை செய்த வழக்கு; வெளிவருகிறார் பிஸ்டோரியஸ்



காதலியை கொலை செய்த வழக்கில் சிறைதண்டனை அனுபவித்து வரும் பிரபல ஓட்டப்பந்தய வீரர் ஒஸ்கர் பிஸ்டோரியஸ் பரோலில் விடுதலையாகவிருக்கிறார்

கடந்த ஆண்டு பெப்ரவரி 14 ஆம் திகதி பிஸ்டோரியஸ் வீட்டில், அவரது காதலி ரீவா ஸ்டீன்கேம்ப் இறந்து கிடந்தார். இதுதொடர்பாக பிஸ்டோரியஸ் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. விசாரணையின் போது அவர் கூறுகையில்,


வீட்டிற்குள் திருடன் புகுந்துவட்டதாக நினைத்து சுட்டதாகவும், அதில் ரீவா சிக்கிக்கொண்டதாகவும் தெரிவித்தார்.

மேலும், தன் காதலியை திட்டமிட்டு கொலை செய்யவில்லை என கூறியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து கடந்த ஒக்டோபர் மாதம் 21 ஆம் திகதி பிரட்டோரியா உயர் நீதிமன்றம் அவருக்கு 5 வருடம் சிறைத்தண்டனை வழங்கியது.

தற்போது சிறைத்தண்டனை அனுபவித்து வரும் அவர், ஓகஸ்ட் 21 ஆம் திகதி பரோலில் வெளிவர உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் பிஸ்டோரியஸ்க்கு எதிரான வழக்கை அந்நாட்டு அரசு மேல்முறையீடு செய்துள்ளது. வரும் நவம்பர் மாதம் நடைபெற உள்ள இந்த அப்பீல் விசாரணையில் அவர் கொலை செய்தது நிரூபணமானால், அவருக்கு 15 வருட சிறைத்தண்டனை விதிக்க வாய்ப்புள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)



# குட்டி நாயகர்களை சந்தித்த டோனி

தேசிய விருது வென்ற "காக்கா முட்டை" படத்தில் நடித்த சிறுவர்கள், இந்திய அணித்தலைவர் டோனியை மும்பையில் சந்தித்து பேசியுள்ளனர்.

பாக்ஸ் ஸ்டார் நிறுவனம் வெளியிட்ட இந்த படமானது நல்ல வரவேற்றை பெற்றுள்ளது. பல்வேறு விருதுகளையும், 2 தேசிய விருதுக்களையும் வென்றுள்ளது. இந்த படத்தை நடிகர் தனுஷ் மற்றும் வெற்றிமாறன் இணைந்து தயாரித்துள்ளனர். இதை மணிகண்டன் இயக்கியுள்ளார். இந்நிலையில் "காக்கா முட்டை" சிறுவர்களை இந்திய அணித்தலைவர் டோனி சந்தித்தார் என்று சமூக வலைத்தளங்களில் புகைப்படங்களை பதிவேற்றியுள்ளனர்.

பாக்ஸ் ஸ்டார் நிறுவனம் சிறுவர்களுக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்று இந்த ஏற்பாட்டை செய்ததாக இயக்குநர் மணிகண்டன் தெரிவித்துள்ளார்.

இதற்காக மும்பை சென்ற சிறுவர்கள் டோனியை சந்தித்து பேசியுள்ளனர். மேலும், புகைப்படங்கள, ஆட்டோகிராஃப் வாங்கியுள்ளனர்

அந்த படத்தின் சில காட்சிகளையும, படத்தின் ட்ரெய்லரையும் டோனி பார்த்து ரசித்ததாக இயக்குநர் மணிகண்டன் தெரிவித்துள்ளார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டி வில்லியர்ஸ் சாதனையை குறிவைக்கும் பங்களாதேஷ் வீரர் மொமினுல் ஹக்



இந்தியா - பங்களா தேஷ் இடையே ஒரேயொரு டெஸ்ட் போட்டி ஃபாதுல்லாவில் இன்று ஆரம்ப மாகும் நிலையில் பங்களாதேஷ் துடுப்பாட்டவீரர் மொமினுல் ஹக், டி வில்லியர்ஸ் சாதனை ஒன்றை குறி வைத்துள்ளார்.

12 டெஸ்ட் போட்டிகளில் தொடர ந்து டி வில்லியர்ஸ் அரை சதம் அடித்து ஒரு சாதனை புரிந்துள் ளார்.

டி வில்லியர்ஸ் இதனை நவம் பர் 2012 முதல் பெப்ரவரி 2014 வரை நடைபெற்ற 12 தொடர் டெஸ்ட் போட்டி களில் அரைசதங்கள் எடுத்திருந் தார்.

பங்களாதேஷ் அணியின் மொமினுல் ஹக் இன்னும் ஒரு அரைசதம் எடுததால் டிவில்லியர்ஸ் சாதனையை சமன் செய்வார்.

பங்களாதேஷ் அணியின் இடது கை துடுப்பாட்டவீரர் மொமினுல் ஹக் (வயது 23) அந்த சாதனையை சமன் செய்வாரா என்ற ஆவல் பங்களாதேஷ் அணியினரிடத்தில் ஏற்பட்டுள்ளது.

ஒக்டோபர் 2013-இல் நியூஸி லாந்துக்கு எதிராக மொமினுல் ஹக், சிட்டகாங் டெஸ்ட் போட்டியில் சதம் கண்டார்.

கடந்த மாதம் மிர்பூரில் பாகிஸ் தானுக்கு எதிராக இவர் தன் கடைசி டெஸ்ட் போட்டியில் 13 மற்றும் 68 ஓட்டங்களை எடுத்தார்.

இவர் இன்னொரு அரைசதம் கண்டால் 12 தொடர் டெஸ்ட் போட்டி களில் அரைசதம் காணும் 2-வது வீரர் என்ற வகையில் டி வில்லி யர்ஸ் சாதனையை சமன் செய் வார்.

இது பற்றி அவரிடம் பேட்டி கண்ட வர் கேட்ட போது, நீங்கள்தான் இந்தச் சாதனையை நினைவு படுத்தினீர்கள். ஆனால் நான் அதனை மறந்து விட்டேன். நான் அதைப்பற்றி யோசிக்கவில்லை. அடுத்த முறை கூட இந்த சாதனையை நான் நினைவில் வைத்துக்கொள்ள விரும்பவில்லை.

நான் டி வில்லியர்ஸ் அருகில் கூட செல்ல முடியாது. அவர் அனைத்து கிரிக்கெட் வடிவங்களிலும் கிங் ஆகத் திகழ்பவர். அவருடன் போய் நான் போட்டியிடமுடியுமா? நான் என்ன இலக்கு எனக்கு நிர்ணயித் துள்ளேனோ அதனை அடைய முயற்சி செய்வேன் என்று தன்ன டக்கத்துடன் பதில் அளித்தார் மொமி னுல் ஹக்.

இதுவரை 14 டெஸ்ட் போட்டிகளில் ஆடியுள்ள மொமினுல், 1380 ஓட் டங்களை 60 ஓட்டங்களை என்ற சரா சரியில் எடுத்துள்ளார். 4 சதங்கள் 9 அரைசதங்கள். பகுதிநேர இடது கை சுழற்பந்து வீச்சாளராகவும் செயல் படுகிறார். (க)

## ஹொக்கி வீரர்களுக்கு சம்பளப்பாக்கி தோனி, ரெய்னா மீது குற்றச்சாட்டு

இந்திய அணித்தலைவர் தோனி மற்றும் ரெய்னா ஆகியோர், தங் களுக்கு சொந்தமான ஹொக்கி அணி வீரர்களுக்கு சம்பளம் கொடுக்க வில்லை என குற்றச்சாட்டு எழுந் துள்ளது.

ஹொக்கி இந்தியா லீக் தொட ரில் விளையாடி வரும் ராஞ்சி ரேஸ அணி, சகாரா ஸ்போர்ட்டிங் அட் வென்ச்சர் மற்றும் இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் தோனி ஆகி யோருக்கு சொந்தமானது.

அதே போல் உத்தரபிரதேச விசார்ட்ஸ் அணிக்கு, மற்றொரு கிரிக்கெட் வீரரான சுரேஷ் ரெய்னா பங்குதாரர். இந்நிலையில் கடந்த சீசனில் ஹொக்கி இந்தியா லீக் தொடரில் விளையாடிய இந்த அணி வீரர்களுக்கு சம்பளப் பாக்கி வைக்கப்பட்டுள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இந்த அணிகளுக்காக விளை யாடி வரும் வீரர்களுக்கு 2 முதல் 3 கோடி ரூபாய் வரை இன்னமும் சம்பளம் கொடுக்க வேண்டிய துள்ளது.

அதேபோல் பயிற்சியாளர்கள், துணை ஊழியர்களுக்கும் சம்பள பாக்கி வைக்கப்பட்டுள்ளது.

தற்போது இந்திய ஹொக்கி அணியின் மேலாளராக உள்ள ரோலண்ட் ஒல்ட்மென், கடந்த சீச னில் சுரேஷ் ரெய்னாவின் உத்தர பிரதேச விசார்ட்ஸ் அணிக்கு பயிற் சியாளராக இருந்தவர்.

அவர் சம்பளபாக்கி குறித்து கூறு கையில், தனக்கு சம்பள பாக்கி யுள்ளது என்றும் ஆனால் அது குறித்து தான் கவலைப்படவில்லை எனவும் எப்போதாவது தருவார்கள் என்ற நம்பிக்கை இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

ஹொக்கி இந்தியா அமைப் பின் செயலாளர் நரீந்தர பத்ரா, இது குறித்து எழுத்துப்பூர்வமாக புகார் வந்தால் ஹொக்கி இந்தியா அமைப்பு பணத்தை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கும் என்று கூறியுள்ளார். (க)

## மதிப்புமிக்க கால்பந்து அணியாக மான்செஸ்ரர் யுனைடெட் தெரிவு




உலகின் மிகவும் மதிப்புமிக்க கால்பந்து அணி என்ற பெருமையை மான்செஸ்டர் யுனைடெட் தட்டிச் சென் றுள்ளது.

இங்கிலாந்தை சேர்ந்த மான் செஸ்டர் யுனைடெட் கால்பந்து அணியின் மதிப்பு 1.2 பில்லியன் டொலர் என கணக்கிடப்பட்டுள ளது.

இதன் மூலம் ஜேர்மனை சேர்ந்த பேயர்ன் மியுனிச் அணியை இரண் டாவது இடத்திற்கு தள்ளிவிட்டு விட்டு முதல் இடத்தை பிடித்துள்ளது மான செஸ்டர் யுனைடெட். ஸ்பானிஷ் அணியான ரியல் மாட்ரிட் மூன்றா வது இடத்தை பிடித்துள்ளது.

ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் கால்பந்து போட்டியில் பெர்லினில் நடந்த இறுதிப்போட்டியில் யுவன் டஸை வீழ்த்தி மகுடத்தை சூடிய பார்சிலோனா அணி இரண்டு இடங்கள் சரிந்து ஆறாவது இடத்தை பிடித்துள்ளது.

இந்த பட்டியலில் முதல் 10 இடங் களில் இருக்கும் அணிகளில் 6 அணி கள் இங்கிலாந்தை சேர்ந்தவை என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## இஸ்லாமிய...

ளுக்கு மத நம்பிக்கைகளை சம்பந் தப்படுத்துவதை அனுமதிக்க முடியா தென்றும் இதன் மூலம் ஒற்று மைக்கு பாதிப்பு ஏற்படுவதாகவும் அவர் கூறினார்.

இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடு என்ற காரணத்தினால் இவ் வாறான திட்டங்களை தடை செயயு மாறு தனது அமைப்பு அரசாங் கத்திடம் பலமுறை வேண்டுகோள் விடுத்த போதிலும் அவர்கள் அதனை கவனத்திற்கு எடுத்துக் கொள்ளவில்லை என்றும் அவர் கூறினார்.

இலங்கை மத்திய வங்கி மற் றும் அரசாங்கம் ஷரியா வங்கிகள் தொடர்பாக தனது நிலைப்பாட்டை பகிரங்கமாக அறிவிக்க வேண்டு மென்றும் அவர் கூறினார்.

இது சம்பந்தமாக விரைவில் இலங்கை மத்திய வங்கியினரை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத் தப்போவதாகவும் அவர் கூறினார்.

கடனுக்கு வட்டி வாங்குவது இஸ்லாத்தில் தடை செய்யப்பட்டுள் ளது. ஆனால் ஷரியா சட்டத்துக்கேற்ப நடக்கும் வங்கிகள் பல நாடுகளில் தற்போது ஆரம்பிக்கப்பட்டு வருகிறை தாக திலந்த குறிப்பிட்டார். (செ-11)

## குளத்தில்...

தியசீலன் (வயது 19) என்ற இளை ஞனே உயிரிழந்துள்ளார்.

நண்பர்களுடன குளிக்கச் சென்ற வேளை குளத்து நீரில் மூழ்கிய இளை ஞரை அவரது நண்பர்கள் மீட்டு வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டுசென்றுள்ளனர். எனினும் அங்கு அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதுகுறித்த மேலதிக விசாரணை களை வவுனியா பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (செ-11)

## கடவையை...

ரயில் மோதியில் அவர்ஸ்தலத்திலேயே பலியாகியுள்ளார். இவ் விபத்துச் சம்பவம் நேற்றுக்காலை இடம்பெற் றுள்ளது. இதில் கோண்டா விலைச் சேர்ந்த குமரன் ஜெயச்சந்திரன் (வயது 55) என்பவரே இவ் விபத்தில் உயி ரிழந்துள்ளார்.

காங்கேசன் துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி சென்று கொண டிருந்த ரயிலே குறித்த நபரை மோதி யுள்ளது. உயிரிழந்தவரின் சடலம் தண்ட வாளத்திலிருந்து பொலிஸாரால் மீட்கப் பட்டு யாழ். போதனா வைத்தியசாலை யில் வைக்கப்பட்டுள்ளது. (செ-11)

## இன நல்...

தேசிய கல்வி ஆணைக்குழு சபை யின் உத்தியோகத்தர்களை சந்தித்த போதே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி, சிங்கள மாணவர் களுக்கு தமிழ் மொழியும் தமிழ் மாணவர்களுக்கு சிங்கள மொழி யும் கற்பிப்பதில் தற்போதைய நிலைமையைவிட மேலும் பல மான வேலைத்திட்டங்களை அமுல் படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.அபேகோன், தேசிய கல்வி ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் லக்ஸ்மன் ஜயதிலக்க உட்பட ஆணைக்குழு வின் சபை உத்தியோகத்தர்கள் பங்கேற்றனர். (செ-11)

## ஓய்வு பெற்றார்...

அவர் அரச பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார் எனத் தேர்தல்கள் செயலகம் தெரிவித்தது.

எனினும், 19ஆவது அரசமைப் புத்திருத்தச் சட்டத்தின்படி தேர்தல் கள் ஆணைக்குழு அமைக்கப் படும் வரை அவர் தற்காலிகமாகத் தனது பணியில் நீடித்திருப்பதற் கான அதிகாரத்தைப் பெறறுள்ளார்.

இதற்கான அனுமதிக் கடிதம் ஜனாதிபதியால் இன்னும் ஓரிரு தினங்களில் அவருக்கு வழங்கப்படும எனவும் தேர்தல்கள் செயலகம் மேலும் தெரிவித்துள்ளது. (செ-11)

வலம்புரி
விளம்பரத்
தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## மகிந்தவை...

பொலிஸ் திணைக்களத்தில் முறைப் பாடொன்றையும் தெரிவித்துள்ள னர்.

மக்கள் ஊடக மத்திய நிலையத் தின் தேசிய அமைப்பாளரான நிமல் வீரதுங்கவினால் நேற்று செவ்வாய்க் கிழமை இந்த முறைப்பாடு மேறகொள் ளப்பட்டுள்ளது. (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு அபிவிருத்திக்கான...

பால சிறிசேனவிடம் நேரடியாகச் சுட்டிக் காட்டியுள்ளார்.

வட மாகாண முதலமைச்சரின் இந்தக் குற்றச்சாட்டு தனக்கு அதிர்ச்சியளிப்பதாகக் கூறிய ஜனாதிபதி, இதுபற்றி உடனடியாக ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதுடன், வடக்கின் அபிவிருத்திக்கு வட மாகாண சபையூடாகவே அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று உறுதியளித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு அனைத்து மாகாண முதலமைச்சர்களையும் சந்தித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இந்த சந்திப்பு முடிவடைந்த பின்னர் வட மாகாண முதலமைச்சரைத் தனியாக சந்தித்து உரையாடியிருந்தார்.

இந்த சந்திப்பில் வட மாகாண முதலமைச்சர் மூன்று முக்கிய விடயங்களை ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டினார். 30 வருட கால போரால் வட மாகாணம் மிகப் பெரும் பாதிப்பைச் சந்தித்துள்ளதால் வடக்கை மீளப் பழைய நிலைக்கு கட்டியெழுப்ப பெருமளவு நிதி தேவைப்படுவதாகவும், தற்போது வட பகுதிக்கு ஒதுக்கப்படும் நிதி போதாதெனவும் பெருமளவு நிதி வழங்கப்பட வேண்டும் எனவும் சுட்டிக்காட்டினார்.

மேலும் வடக்கில் முதலமைச்சர் நிதியம் ஒன்று அமைக்கப்பட வேண்டியது மிகவும் அத்தியாவசியமாகவுள்ளது. சர்வதேச நாடுகளிலும் புலம்பெயர்ந்த எமது மக்களிடமும் நிதியுதவிகளைப் பெற்று வட பகுதியைக் கட்டியெழுப்ப வேண்டியுள்ளதால் முதலமைச்சர் நிதியம் ஊடாக அதனை மேற்கொள்ள முடியும். கடந்த ஆட்சியில் இதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. இந்த நிதியம் அமைக்கப்பட்டால் அதனை மத்திய அரசே கணக்காய்வு செய்யும் விதத்தில் அரசு நடவடிக்கை எடுக்க முடியும். அதற்கு நாங்கள் பூரண ஒத்துழைப்பு வழங்குவோம். இதனால் உடனடியாக முதலமைச்சர் நிதியம் அமைக்க அனுமதிக்க வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

இதேவேளை வட மாகாண சபையைப் புறக்கணித்துவிட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரைத் தனியாக தெற்கிற்கு அழைத்து நிதி வழங்கப்பட்டுள்ளது. இது எங்களுக்குள் பிரிவை ஏற்படுத்தும் நோக்கம் கொண்டதெனவும் முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டினார்.

இதனால் அதிர்ச்சியடைந்த ஜனாதிபதி, இதுபற்றி உடனடியாக ஆராய்வதாக தெரிவித்ததுடன் முதலமைச்சர் நிதியத்தை ஆரம்பிக்கவும் நடவடிக்கை எடுக்குமாறும் அதற்கான உதவிகள் வழங்கப்படுமெனவும் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் அடுத்த வாரம் மீண்டும் அனைத்து முதலமைச்சர்களையும் ஆளுநர்களையும் மாகாண அமைச்சர்களையும் அவற்றின் பிரதம செயலாளர்களையும் தான் சந்திக்கவுள்ளார் என்றும், அதன் போது சகல மாகாணங்களினதும் தேவைகள் தொடர்பாக தனக்கு எழுத்துமூலம் சமர்ப்பிக்குமாறும் ஜனாதிபதி கேட்டுக்கொண்டார் என முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். (செ-11)

## யாழ்.நீதிமன்றத்...

னம் என்பன அடித்து உடைத்து சேதப்படுத்தப்பட்டிருந்தது. இதனையடுத்து 130 பேர் அன்றையதினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

தொடர்ந்து 21ஆம் திகதி குறித்த 130 பேரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு மூன்று பிரிவுகளாக தனித்தனியே வழக்குத்தொடுக்கப்பட்டு அனைவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். அதன்பின் கடந்த முதலாம், மூன்றாம், நான்காம் திகதிகளில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. கடந்த 1ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 47 பேருக்கும் பிணை மனு மன்றில் சட்டத்தரணிகளால் சமர்ப்பிக்கப்பட்டதையடுத்து குறித்த வழக்கு நேற்று மீண்டும் நீதவான் பெ.சிவகுமார் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போதே 15 பாடசாலை மாணவர்களையும் கடும்நிபந்தனைகளுடன் பிணையில் செல்ல மன்று அனுமதி வழங்கியது.

இதன்போது பிணையில் விடுதலை செய்யப்பட்ட பதினைந்து பேரில் 12 பேரிற்கு 5 லட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு ஆட்பிணையிலும் மற்றைய மூவருக்கும் 2 லட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு ஆட்பிணையிலும் செல்ல மன்று அனுமதி வழங்கியுள்ளது. அத்துடன் பிணையாளிகள் சந்தேகநபர்களை பிணையெடுப்பதற்கான தகுதி பெற்றுள்ளார் என்பதை கிராமசேவகர் ஊடாக பிரதேச செயலரும் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

மேலும் பிணையில் அனுமதிக்கப்பட்ட சந்தேக நபர்கள் ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ்.பொலிஸ் நிலையத்தில் காலை 9 மணிமுதல் மதியம் 12 மணிக்குள் கையொப்பம் இடவேண்டும் என்றும் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

மேலும் நேற்றைய தினம் பிணை வழங்கப்படாத ஏனையோரிற்கான விளக்கமறியல் எதிர்வரும் 18ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

**நீதவான் எச்சரிக்கை.**

நேற்று பிணையில் விடுதலை செய்யப்பட்ட 15 பேரும் மீண்டும் ஏதாவது குற்றச் செயல்களில் ஈடுபட்டால் அவர்களுக்கு வழங்கப்பட்ட பிணை நிராகரிக்கப்பட்டு வழக்கு முடியும் வரை அவர்கள் சிறையிலே அடைக்கப்படுவர் என்ற நிபந்தனையின் கீழ் நீதிவான் நீதிமன்ற நீதிபதி சிவகுமார் மேற்படி நபர்களுக்கு பிணை வழங்கினார். இவர்களது எதிர்காலத்தையும் கல்விச் செயற்பாடுகளையும் கவனத்தில் கொண்டே இவர்கள் பிணையில் செல்வதற்கு அனுமதி வழங்கப்படுவதாக நீதவான் குறிப்பிட்டிருந்தார். பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்ட குறித்த நபர்களது நன்னடத்தை தொடர்பாக தொடர்ந்து அவதானிக்கப்படும் என்றும் எதிர்வரும் காலங்களில் ஏதாவது குற்றங்களில் ஈடுபட்டால் வழங்கப்பட்ட பிணை இரத்துச் செய்யப்படுவதுடன் வழக்கு முடிவுறும் வரை பிணை வழங்கப்படாது என்றும் நீதவான் மன்றில் எச்சரித்தார்.

**மயங்கி வீழ்ந்த சந்தேக நபர்**

நீதிமன்றத்தில் இவ்வழக்கு விசாரணைகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் போது சந்தேக நபரொருவர் மயங்கி விழுந்துள்ளார். கடந்த 20ஆம் திகதி நீதிமன்றில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டவர்களில் ஒரு தொகுதியினரின் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே அதில் இருந்த சந்தேக நபர்களில் ஒருவர் மயங்கி விழுந்துள்ளார். இதனையடுத்து அவரிற்கு உடனடியாக நீதிமன்ற பொலிஸாரால் முதலுதவி வழங்கப்பட்டிருந்தது.(செ-4,9)

## மதுபான விற்பனையால்...

வட மாகாண சபையின் 30ஆவது அமர்வு நேற்றைய தினம் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றிருந்த நிலையில் வடமாகாணத்தில் அதிகரித்த மதுப்பாவனை தொடர்பாக பொது முக்கியத்துவம் வாய்ந்த அவசர பிரேரணை ஒன்றினை அவைத் தலைவர் ச.வ.கே.சிவஞானம் சபையில் முன்வைத்து கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

குறித்த விடயம் தொடர்பாக சபையில் மேலும் அவர் குறிப்பிடுகையில், இலங்கையில் அதிகளவு மதுபான பாவனை கொண்ட மாகாணமாகவும் எவரும் மதுபானத்தை இலகுவாகப் பெற்றுக் கொள்ளகூடிய மாகாணமாகவும் வடக்கு மாகாணம் மாற்றப்பட்டிருக்கின்றது. இதை மிகவும் மோசமான நிலையாக பார்க்கவேண்டியிருக்கின்றது.

மேலும் எமது மாகாணத்தில் அதிகரித்து வரும் மானுட நேயமற்ற வன்முறைச் சம்பவங்களுக்கும் மதுபான பாவனையே அடிப்படையாக உள்ளது என்பதே பொதுமக்கள் எம்முன்னால் வைக்கும் குற்றச்சாட்டாக உள்ளது. இந்நிலையில் தாராளமாக மதுபானம் விற்பனை செய்யும் மதுபான விற்பனை நிலையங்கள் மதுவரி திணைக்களத்தின் வழிகாட்டல்களை மீறிய வகையிலேயே உரிமங்களை பெற்றிருப்பதை நாங்கள் காண்கிறோம்.

வழிபாட்டு தலங்கள், பாடசாலைகள், பொது அலுவலகங்கள், பொது நிறுவனங்கள் போன்றவற்றுக்கு அண்மித்ததாக பல மதுபான விற்பனை நிலையங்கள் உரிமம் பெற்று இயங்குவதை வடக்கில் காணகூடியதாக இருக்கின்றது.

இந்தவகையில் வடக்கில் வழங்கப்பட்டுள்ள உரிமங்களும் நிர்ணயிக்கப்பட்ட நியமங்களுக்கு உட்பட்டு வழங்கப்பட்டுள்ளனவா? என்பதை கண்டறிந்து நியமங்களுக்கு மாறாக உரிமம் பெற்றிருத்தல் மற்றும் நியமங்களை [illegible] தடை செய்யுமாறு நாங்கள் நிதி அமைச்சர், மதுவரி ஆணையாளர் மற்றும் மாவட்டச் செயலர்களிடம் கோரிக்கை விடுகின்றோம். என சுட்டிக்காட்டியிருந்தார்.

இதனை தொடர்ந்து கருத்து தெரிவித்த மாகாணசபை உறுப்பினர் ரவிகரன் முல்லைத்தீவு மாவட்டத்தில் படையினர் பாடசாலை விளையாட்டு நிகழ்வுகளில் கூட பரிசுப் பொருட்களாக மதுபான போத்தல்களை வழங்குவதாகவும், இளைஞர்கள் கூடும் இடங்களில் மதுபானம் விற்பனை செய்வதாகவும் குற்றம் சுமத்தியிருந்ததுடன் இது மோசமான ஒரு நிலையாகும் எனவும் சுட்டிக்காட்டியிருந்தார்.

மாகாணத்தில் சில்லறையாக மதுபானம் விற்பனை செய்ய முடியாத விற்பனை நிலையங்களில் கூட தற்போது மதுபான வியாபாரம் இடம்பெறுவதாக அவர்கள் குற்றம் சுமத்தியிருந்தனர்.

இந்நிலையில் வடக்கில் குறிப்பாக யாழ். மாவட்டத்தில் வன்முறைச் சம்பவங்களையும் மானுட நேயமற்ற செயல்களையும் கட்டுப்படுத்துவதற்கு மதுபான பாவனையைக் கட்டுப்படுத்தப்படவேண்டும். மதுபான விற்பனை நிலையங்கள் கட்டுப்படுத்தப்படவேண்டும் என கருத்துக்கள் சபையில் முன்வைக்கப்பட்டு அது தொடர்பான பிரேரணை சபையில ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (செ-4)

## வவுனியா அரச...

கான நடவடிக்கையினை மிகவிரைவில் எடுக்க வேண்டும் என அனைத்து உறுப்பினர்களும் ஒன்றிணைந்து அவைத்தலைவரின் முன்னால் தங்களுடைய இருக்கைகளை விட்டு எழுந்து சென்று தங்களுடைய ஆட்சேபனையினை வெளியிட்டனர்.

இதன்போது பதிலளித்த அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் கருத்து தெரிவிக்கையில்,

சபையில் எடுக்கப்பட்ட கண்டன தீர்மானம் மற்றும் உறுப்பினர் லிங்கநாதனின் கடிதமும் வடக்கு முதல்வர் சி.வி.விக்னேஸ்வரனிடம் வழங்கப்பட்டது.

மேலும் அண்மையில் பிரதமருடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்து இருந்தனர். அவர்களூடாக இத்தீர்மானத்தின் பிரதி பிரதமரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

எனினும் இது வரை அரச அதிபர் மீது நடவடிக்கை எடுக்கவில்லை.

இதனால் வடக்கு மாகாண அவையின் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது. எனவே இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டிய அனைத்து இடங்களிலும் இது குறித்து விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் இது குறித்து உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவிக்கையில், அரச அதிபர் குறித்து நடவடிக்கை எடுக்குமாறு வடக்கு அவை கோருவது இனவாதம் அல்ல.

குறித்த அரச அதிபர் பெரும்பான்மையானவர் என்பதால் அவரை மாற்றுமாறு நாம் கேட்கவில்லை. இது தமிழ் பேசும் ஒருவராக இருந்தால் கூட இவ்வாறு செய்யுமாறே வலியுறுத்துவோம். எந்த இனத்தவராக இருந்தாலும் தவறாக செய்பவர்களுக்கு எதிராக நாம் நடவடிக்கை எடுப்போம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.(செ-4)

## கஞ்சா மீட்பு ஒருவர் கைது

(கிளிநொச்சி)

இரு கஞ்சா பொதிகளை தம் வசம் வைத்திருந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவம் நேற்று மாலை 5 மணிக்கு மல்லாவி பொலிஸ் நிலையம் முன்பாக இடம்பெற்றது . குறித்த பொலிஸ் நிலையம் முன்பாக சந்தேகத்துக்கு இடமாக தரித்து நின்ற முச்சக்கர வண்டியை பொலிஸார் சோதனையிட்ட போது கஞ்சா அடங்கிய இரு பொதிகள் மீட்கப்பட்டது. உடனடியாக முச்சக்கர வண்டியையும், சாரதியையும் கைது செய்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-271)


நல்ல சுவையான வீட்டுச் சாப்பாடு
யாழ் நகர அலுவலகங்கள் வீடுகளுக்கு வழங்கப்படும் சைவ அசைவ மதிய உணவு
ஓடர்களுக்கு 075 070 2963
(697)

காணி விற்பனைக்கு
38, (8/2) பேரின்பநாயகம் வீதி, பரப்பு 7, குளி 5 1/4 (யா/கச்சேரியிலிருந்து 300 மீற்றருக்குள்)
தொடர்பு:-0776794190
(704)

பிரத்தியேக வகுப்பு
உயர்தர மாணவர்களுக்கான உயிரியல் மற்றும் ஆண்டு 10, 11ற்கான விஞ்ஞானம் (Tamil English Medium) ஆகிய பாடங்கள் யாழ்ப்பாணத்தின் பிரபல கல்வி நிறுவன ஆசிரியர்களினால் வீடு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு:-0772473201

பதவி வெற்றிடங்கள்
யாழ்.முன்னணி நிறுவனத்தில் 10க்கும் மேற்பட்ட வேலை வாய்ப்புக்கள் உள்ளன. வட மாகாணத்தில் புதிய கிளைகள் ஆரம்பிக்க இருப்பதால் அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.
- தகைமை O/L (O/L படிக்காதவர்களுக்கு விசேட பதவிகள்)
- வயதெல்லை 18-32
- தங்குமிடம் & உணவு வசதிகள் இலவசம்
- சம்பளம் 15,000/= - 22,000/=
- அனுபவம் அவசியமற்றது.
தொடர்புகளுக்கு: 0777981471, 0773366453
(கி-1226)

வேலைவாய்ப்பு
கிளி., முல்லை, வவுனியா, மன்னார், யாழ்.மாவட்டங்களை சேர்ந்த இளைஞர் யுவதிகளுக்கான நான்கு வகையான பதவி வெற்றிடம்.
Golden Group Advertising Companyயில்
Distributor, Supervisor, Ass. Manager, Administration (Female) ஆர்வமுள்ளோர் உடன் நேரில் சமுகம் தரவும்.
குறிப்பு:-வயது எல்லை: 18-40
தொடர்புகளுக்கு:-0776219536, 0779987699
No.08, 06 Cross Street, Jaffna.
(701)

யாழ். நகரில் பிரபல்யமான
கணினி திருத்தும் பாடநெறி
Computer Repairing Course
- ★ ஆரம்பம் முதல் சரளமாக கற்பிக்கப்படும்.
- ★ சகல கேள்விகளுக்கும் தெளிவான விளக்கம்.
- ★ தனிப்பட்ட கவனிப்பு.
- ★ 1000 இற்கு மேற்பட்ட கணினி திருத்தும் இரகசியங்கள்.
- ★ சுயமாக வேலை செய்யும் அளவுக்கு பயிற்சியளிக்கப்படும்.
இலவசமாக இரகசியங்கள் அடங்கிய (CD), கையேடு வழங்கப்படும்.
வயதெல்லை இல்லை.
ஆரம்ப அறிவு, ஆங்கிலம் தேவையற்றது.
June 13ஆம் திகதி காலை 9.00 மணிமுதல் 13,14,15,16 ஆகிய நான்கு தினங்களில்
மாதம் 50,000 முதல் 100,000 இற்கு மேல் வருமானம் பெறும் நிரந்தர உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு
பாடநெறிக் கட்டணம் 8500/= / பதிவுக் கட்டணம் 2000/=
குறைந்த முதலீட்டில் உடனடியாக தொழில் தொடங்குவதற்குத் தேவையான அனைத்து தகவல்களும்
மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் என்பதால் முன்கூட்டியே பதிவு செய்யவும்.
0777 444 225 BTEC #21, Sirimbiyadi Land, (off Stanley Road), Jaffna.
(C/16500)(10.6.1) (கி-1224)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.06.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org